இலவசம்

# அரங்கம் செய்திகள்

கிழக்கு மண்ணில் இருந்து ஒரு தொடர்பூடகம்




வார இதழ்– மட்டுநகரிலிருந்து... www.arangamnews.com வெள்ளி, சித்திரை 13, 2018. இதழ் – 08 இலவசம்

## தமிழகத்தில் பிரதமர் மோடிக்கு எதிராக பெரும் போராட்டம்



இந்தியாவில் தமிழகத்துக்கு காவிரி நீரை வழங்க ஏற்பாடு செய்வதற்கான காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காததை கண்டித்து, இந்திய பிரதமர் மோடிக்கு கறுப்புக் கொடி காட்டும் போராட்டம் தமிழகத்தில் தீவிரமடைந்துள்ளது.

இந்திய இராணுவத்தின் வலிமையை, இராணுவத் தளவாட உற்பத்தியில் இந்தியாவின் வலிமையை காட்டுவதற்கு நடந்த கண்காட்சியை சுத்தமாக மறக்கும் அளவுக்கு இந்த போராட்டம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

தொடர்ச்சி பக்கம் - 06

## ஏழு மாகாணங்களுக்கு புதிய ஆளுனர்கள்

இலங்கையின் ஏழு மாகாணங்களுக்கு புதிய ஆளுனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- ஹேமகுமார நாணயக்கார - மேற்கு மாகாணம்
- கே.சி. லோகேஸ்வரன் - வடமேற்கு மாகாணம்
- நிலுகா எக்கநாயக்க - சப்ரகமுவ மாகாணம்
- றெஜினோல்ட் குரே - மத்திய மாகாணம்
- மார்ஷல் பெரேரா - தென் மாகாணம்
- எம். பி. ஜயசிங்க - வடமத்திய மாகாணம்
- பி. பி. திஸாநாயக்கா - ஊவா மாகாணம்




# "எதிர்க்கட்சி வரிசையில் இருப்போம் - ஆனால், ஜனாதிபதியின் முடிவுகளுக்கே ஆதரவு"

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவாகவும், பிரதமருக்கு எதிராகவும் வாக்களித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவின் சுதந்திரக் கட்சியை சேர்ந்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாம் எதிர்க்கட்சி வரிசையில் அமரப் போவதாக அறிவித்துள்ளனர்.

ஆனாலும், தாம் ஜனாதிபதி எடுக்கும் முடிவுகளுக்கு ஆதரவாகவே தொடர்ந்து செயற்படுவோம் என்றும், மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியுடன் சேரமாட்டோம் என்றும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் சார்பிலான வட்டாரங்கள் கூறியுள்ளன.

கூட்டு எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம், ஏப்ரல் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, அதற்கு ஆதரவாக 76 வாக்குகளும், எதிராக 122 வாக்குகளும் கிடைத்தன. 26 எம்பிக்கள் வாக்களிப்பில்



கலந்துகொள்ளவில்லை. அதனால், அந்த தீர்மானம் தோல்வியில் முடிந்தது.

ஆனாலும், ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கட்சிகள் கூட்டாக அமைத்திருக்கும் தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கத்தை சேர்ந்த சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

அதனையடுத்து அவர்கள் அரசாங்கத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று பிரதமரின் ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் வலியுறுத்தத் தொடங்கினார்கள்.

அதனையடுத்து கூட்டணியில் அங்கம் வகித்த இரு கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. சுதந்திரக் கட்சியின் போட்டி உறுப்பினர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்போவதாக ஐதேகவினர் கூற, அவர்களோ அமைச்சரவை கூட்டத்தை பகிஸ்கரித்தனர்.

இந்த நிலையிலேயே தாம் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து செயற்படப் போவதாக அந்த உறுப்பினர்கள் தற்போது அறிவித்துள்ளனர்.

ஆனாலும், மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன அமைப்புடன் தாம் இணையமாட்டோம் என்றும் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும், ஜனாதிபதியின் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

அப்படி அவர்கள் செயற்படுவதற்கு சி றிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி அவர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார். அதேவேளை, சுந்தந்திரக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் தொடர்ந்தும் தேசிய

தொடர்ச்சி பக்கம் - 17



# மட்டக்களப்பை அண்டிய பகுதிகளில் புதுவருடத்திலும் மழை தொடரலாம்






மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் 17 மற்றும் 18 ஆம் திகதிகள் வரை மழை தொடர்ந்து விட்டு விட்டு பெய்யும் என்று வானிலை அவதான நிலையம் கூறியுள்ளது.

மட்டக்களப்பில் புதனன்று இரவு 23 மிமீ மழை பெய்ததாகவும், மாவட்டத்தில் அதிகப்படியாக வாகனேரியில் 32 மிமீ மழை பதிவானதாகவும் வானிலை அதிகாரியான சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

மழை விட்டு விட்டுப் பெய்வதனால், பெரு வெள்ளம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றும், ஆனாலும் வானம் தொடர்ந்தும் மப்பும் மந்தாரமுமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

# இந்தியாவுக்கு படகில் தங்கம் கடத்திய மூவர் கடலில் கைது





இலங்கையின் வடக்கு கடலில் தலைமன்னார் பகுதியில் படகு ஒன்றில் 24 கிலோகிராம் தங்கத்தை கடத்திய மூன்று இலங்கையரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்த தங்கத்தின் சந்தை விலை 17 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தங்கத்தை இந்தியாவுக்கு இந்த சந்தேக நபர்கள் கடத்த முயன்ற போது கடற்படையினர் அவர்களை வழிமறித்துள்ளனர்.

ஒவ்வொன்றும் 100 கிராம் எடையுடைய 242 தங்க பிஸ்கட்டுகளை மீட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் யாழ் சுங்கப் பிரிவினரிடம் கையளிக்கப்படவிருந்தனர்.

# "மண்டூர் பாலத்தின் வேலைகள் 24 மாதத்தில் நிறைவடையும்" முன்னாள் பிரதி அமைச்சர் கணேசமூர்த்தி



மண்டூர் பாலத்துக்கான கட்டுமான வேலைகள் சரியாக 24 மாதத்தில் நிறைவேற்றத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, முன்னாள் பிரதியமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளருமான சோ.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரையையும் எழுவான்கரையையும் இணைப்பது மண்டூர் குருமண்வெளிப் பாலங்களாகும். இயந்திரப் பாதை மூலம் தற்போது அங்கு போக்குவரத்து நடைபெற்றுவரும் நிலையில், கடந்த கால யுத்தம் காரணமாக பாலத்துக்கான வேலைகள் மந்த கதியிலே நடந்துவந்தன. இதற்கு தீர்வுகாணும் வகையில் முதற்கட்டமாக மண்டூர் பாலத்துக்கான அடிக்கல் கடந்த வருடம் அமைச்சர் லக்மன் கிரியல்ல அவர்களினால் நடப்பட்டது.

இதற்கான பூர்வாங்க வேலைகளை மேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணிக்கப்பட்டது. இதற்கமைய சாத்தியவள அறிக்கை பூரணப்படுத்தப்பட்டு அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாகவும் சோ. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

பொது மக்களின் சிரமம் தொடர்பான வேண்டுகோள்களின் அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பெற்றோர் இறந்து 4 வருடங்களின் பின் பிறந்த ஆண் குழந்தை



சீனாவில் ஒரு குழந்தை தனது பெற்றோர் கார் விபத்து ஒன்றில் இறந்து 4 வருடங்களின் பின்னர் வாடகைத் தாய் மூலம் பிறந்திருக்கிறது.

சோதனைக் குளாய் மூலம் குழந்தையை பெறலாம் என்ற நம்பிக்கையில், தமது கருக்கட்டப்பட்ட முட்டைகளை உறைநிலையில் சேமித்து வைத்த அந்த குழந்தையின் பெற்றோர் கார் விபத்து ஒன்றில் 2013இல் உயிரிழந்துள்ளனர்.

லாவோசை சேர்ந்த வாடகைத் தாய் மூலம் இந்த ஆண் குழந்தை கடந்த டிசம்பரில் பிறந்ததாக பீஜிங் நியூஸ் ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

பெரும் சட்டப் போராட்டங்களுக்கு பின்னரே இந்தக் குழந்தையின் தாத்தா பாட்டி அதனை பிரசவிப்பதற்கான அனுமதியை பெற்றுள்ளார்கள்.

தாம் பெரும் மகிழ்ச்சியில் இருப்பதாக அந்தக் குழந்தையின் தாத்தா பாட்டி கூறியுள்ளனர்.

# கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் இடைக்கால நிர்வாகம் தெரிவு

25.03.2018 அன்று மட்டக்களப்பு, கல்லடி உப்போடை துளசி மண்டபத்தில் நடைபெற்ற கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட உறுப்பினர்கள் ஒன்றிணைந்த பொதுக்கூட்டத்தில் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் இடைகால நிர்வாகம் தெரிவானது.
இதுவரை இயங்கிய இணைப்பாளர்ளான சிரேஸ்ட சட்டத்தரணி த.சிவநாதன் மற்றும் செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் ஆகிய இருவருக்கும் மேலதிகமாகத் திருகோணமலை மாவட்டத்திலிருந்து திரு.பூ.உகநாதன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அத்துடன் பின்வரும் மாவட்டக்குழுப் பதவியாளர்களும் தெரிவாகினர்.

| பதவி | திருகோணமலை மாவட்டம் | மட்டக்களப்பு மாவட்டம் | அம்பாறை மாவட்டம் |
|---|---|---|---|
| தலைவர் | கோ.வீரசிங்கம் | பேராசிரியர். மா.செல்வராசா | இரா.நடராசா |
| செயலாளர் | Dr.கோ.சற்குணலிங்கம் | பொறியியலாளர் வ.பரமகுருநாதன் | பொ.நடராஜசிவம் |
| பொருளாளர் | தி.ஹரிஸ்ரன் | ச.சிவயோகநாதன் | கி.ஜெகதீஸ்வரன் |
| துணைத்தலைவர் | சு.இராஜதுரை | Dr.க.அருளானந்தம் | ப.நேசராசா |
| துணைச் செயலாளர் | சி.ரவீந்திரன் | சா.திருநாவுக்கரசு | ஆர்.சதீஸ்காந் |

தொடர்ச்சி பக்கம் - 21



# பட்டதாரி பயிலுனர்களுக்கான அறிவித்தல்

வேலையற்ற பட்டதாரிகளை பட்டதாரிப் பயிலுனர்களாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாத பட்டதாரிகள் எவ்வித குழப்பமும் அடையத் தேவையில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ம. உதயகுமார் தெரிவித்தார்.
2017.08.06ஆம் திகதி பத்திரிகை விளம்பரத்தின் அடிப்படையில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் அவ் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து மாவட்ட செயலகத்தில் கையளிக்கும்படியும், அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கான பொருத்தமான திகதி அரசாங்க அதிபர் அல்லது மேலதிக அரசாங்க அதிபரினால் அறிவிக்கப்படும் என்றும் இவ்விண்ணப்பப் படிவங்கள் இம்மாதம் 20ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்ளும் பட்டதாரிகளிடம் மொழித் தேர்ச்சி, கணணி அறிவு, மேலதிக கல்வித் தகமையும் ஏனையவையும், விடயத்துக்குப் புறம்பான செயற்பாடுகள், நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமைகளும் செயற்பாடுகளும் பரீட்சிக்கப்படும். இவைகளுக்காக தனித்தனியே 20 புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தம் 100 புள்ளிகள் கணிக்கப்படும்.

இவர்கள், 31.12. 2016 அல்லது அதற்கு முன்னராக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்தினைப் பெற்றவர்களாக இருத்தல் அவசியம்.

அத்துடன், வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு கிராம சேவையாளர் ஊடாக பிரதேச செயலாளரது உறுதிப்படுத்தலுடன் அறிக்கையிடுதல் வேண்டும்.

பெயர் மாற்றங்கள் தொடர்பான

தொடர்ச்சி பக்கம் - 06



# மக்கள் வாழ்வு ஜொலிக்கட்டும்!



எமது வாசகர்கள் அனைவருக்கும் எமது தமிழ் - சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். எமக்கு விளம்பர அனுசரணைகளை வழங்கி, எமது பத்திரிகை கிழக்கு எங்கிலும் உள்ள மக்களுக்கு இலவசமாக சென்றடைய உதவும் வணிக நிறுவனங்களுக்கும் எமது வாழ்த்துக்களும், நன்றிகளும்.

அரங்கம் பத்திரிகையை நாம் ஆரம்பித்து 8 வாரங்கள் இப்போது கடந்துவிட்டன. எமது கிழக்கு மக்களுக்கு தேவையான தகவல்கள் அவர்களை இலசவமாக சென்றடைய வழி செய்ய வேண்டும் என்ற நோக்கில் எம்மால் நடத்தப்படும் இந்த பத்திரிகை நாளுக்கு நாள் எமது கிழக்கு மாகாண மக்களின் அபிமானத்தை சம்பாதித்து வருகின்றது.

நாம் முன்னரும் கூறியது போல, போகும் இடமெல்லாம் அரங்கத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருகின்றது. அது அதிகரித்தும் வருகின்றது. நாமும் அவர்களுக்கான ஒரு தகவல் களமாக, விவாத மேடையாக அரங்கத்தை மெருகேற்ற முயற்சித்து வருகின்றோம்.

இலவசமாக ஒரு பத்திரிகையை வெளியிடுவதில் உள்ள சிரமங்கள் அனைவரும் அறிந்ததே. ஆனாலும், எமது கிழக்கு மக்களின் தகவல் பசிக்கு, பத்திரிகையின் விலை ஒரு தடையாக வந்துவிடக் கூடாது என்பதில் நாம் தொடர்ந்தும் கவனமாக இருந்து வருகின்றோம்.

நகர்ப்புறங்களில் மாத்திரமல்லாமல், ஏனைய பத்திரிகைகள் சென்றடைவதில் சிரமங்களை எதிர்நோக்கும் படுவான்கரை உட்பட பல இடங்களுக்கும் நாம் இலவசமாக இந்த பத்திரிகையை கொண்டு சென்று பெருமளவில் விநியோகித்து வருகின்றோம்.

இதில் நாம் பெரும் தடைகளை, வலிகளை, சுமைகளை அனுபவித்தாலும் மக்களின் ஆதரவு எமது தயக்கங்களை தொடர்ந்து நீக்கி வருகின்றது.

அதேவேளை, இந்த சுமைகளை எம்மோடு சேர்ந்து சுமக்க, எமது வணிக நிறுவனங்கள் மேலும் முன்வரவேண்டும் என்றும் நாம் கோருகின்றோம். உங்கள் விளம்பரங்கள் எங்கள் மக்களுக்கு, அவர்களின் பிரச்சினைகளை ஆழமாக ஆராயும் ஒரு ஊடகம் இலவசமாக தொடர்ந்து கிடைக்க உதவும் என்பது யதார்த்தம்.

எமது மக்களின் முன்னேற்றத்துக்காக, அவர்களின் குரலாக ஒலிக்கும் இந்த ஊடகம் நிலைக்க அனைவரின் உதவிகளையும் கோருகின்றோம்.
நாம் எமது கரங்களை வலுவாக கோர்த்து, நடந்தால் அனைத்து தடைகளும் வரும் புத்தாண்டில் தகர்ந்து போகும். எமது மக்கள் வாழ்வு ஜொலிக்கட்டும்.

**அன்புடன்**

**பூபாலரட்ணம் சீவகன்**




# பாடசாலை மாணவர்களுக்கான அரங்கத்தின் போட்டிகள்

## கட்டுரைப் போட்டி

முதல் பரிசு : ஐயாயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு : மூவாயிரம் ரூபாய்
மூன்றாம் பரிசு : இரண்டாயிரம் ரூபாய்
பாடசாலை மாணவர்கள் தமது அதிபரின் அனுமதியுடன் கலந்து கொள்ளலாம்.
போட்டிகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனித்தனியாக நடைபெறும். இரு பிரிவுக்கும் தனித்தனியே பரிசுகள் வழங்கப்படும்.

### போட்டி:

பின்வரும் விடயங்களில் ஏதாவது ஒன்று குறித்து 500 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரை எழுத வேண்டும்.

1) ஏதாவது ஒரு நாடு (இலங்கை அல்லது வேறு ஒரு நாடு) எதிர்கொள்ளும் ஒரு சுகாதார பிரச்சினை அல்லது சுகாதாரச் சவாலின் தாக்கம் குறித்து விபரிக்கவும்.
2) ஒரு நாடு அல்லது ஒரு அமைப்பு பொதுமக்கள் சுகாதாரத்துறை எதிர்கொண்ட சவாலில் தலையிட்ட சம்பவம் குறித்து விபரிக்கவும். அந்த தலையீட்டின் வெற்றி அல்லது தோல்விக்கான காரணத்தை விபரிக்கவும்

### விதி

-- ஏனைய ஆதாரங்களில் இருந்து நீங்கள் சேகரித்த விடயங்களுக்கான மூலங்களை குறிப்பிடவும்.
-- கட்டுரையை நீங்களே எழுத வேண்டும்.
-- தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரையாளர் நேர்முகச் சோதனைச் செவ்விக்கு அழைக்கப்படுவார்.
-- போட்டியில் கலந்துகொள்வோர் பாடசாலை மாணவராக இருக்க வேண்டும். அதிபரின் கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
--பிரதி பண்ணப்பட்ட கட்டுரைகள் நிராகரிக்கப்படும்.

### ஆலோசனை

பொதுமக்கள் சுகாதாரத்தை பாதிக்கும் ஒரு நோய் அல்லது சுற்றாடல் பிரச்சினையை தேர்ந்தெடுக்கவும்.
--உங்களுக்கு ஆர்வம் உள்ள விடயத்தை தேர்வு செய்யவும்
--இண்டர்நெட் மற்றும் புத்தகங்களை ஆய்வுக்கு பயன்படுத்தவும்
--ஒரு விடயத்தில் மாத்திரம் நிற்கவும்.
--தேர்ந்தெடுத்த விடயத்தை ஆக்கத்திறனுடன் முயற்சிக்கவும்
--இந்தக் கட்டுரை ஒரு விவாதமாக இருக்க வேண்டும். இருக்கக்கூடிய பல தரப்பட்ட பார்வைகளையும், உங்கள் கருத்தையும் அதில் குறிப்பிடவும்.

### உதாரணமான விடயங்கள் சில

தென்னாபிரிக்காவில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள் , உலகெங்கும் அல்கோலால் வரும் ஈரல் நோய்கள். தெற்காசிய சமூகத்தில் நீரிழிவு நோய்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது, பெயர், பிறந்த திகதி, பாடசாலையின் பெயர், விலாசம் மற்றும் தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். தலைமை ஆசிரியரின் அங்கீகாரமும் தேவை.

## ஓவியப் போட்டி

**போட்டிகளுக்கான முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது 31 - மே - 2018 வரை**

முதல் பரிசு : ஐயாயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு : மூவாயிரம் ரூபாய்
மூன்றாம் பரிசு : இரண்டாயிரம் ரூபாய்

பாடசாலை மாணவர்களுக்கான இந்தப் போட்டியில் கலந்து கொள்வோர், உலக சுகாதாரம் எதிர்கொள்ளும் சவால்களைச் சித்தரிக்கும் வகையிலான ஓவியம் ஒன்றை வரைய வேண்டும்.

பொதுமக்களின் சுகாதாரத்தில் சுற்றாடல் ஏற்படுத்தும் தாக்கத்தை இந்த ஓவியங்கள் விபரித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அந்த ஓவியத்தை விபரிக்கும் விளக்கம் ஒன்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எழுத வேண்டும்.

ஏ3 அல்லது ஏ4 காகிதத்தில் அது வரையப்பட்டிருக்க வேண்டும். பென்சில், மை கொண்டு அது வரையப்பட்டிருக்கலாம்.

மூன்று பிரிவாக போட்டி நடைபெறும்.
6-10 வயது
11-14 வயது
15- 18 வயது

மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனியாக
மூன்று பரிசுகள் 5000 ரூபாய், 3000 ரூபாய் மற்றும் 2000 ரூபாய் வழங்கப்படும்.
போட்டியில் கலந்துகொள்வோரின் வயதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது, பெயர், பிறந்த திகதி, பாடசாலையின் பெயர், விலாசம் மற்றும் தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். தலைமை ஆசிரியரின் அங்கீகாரமும் தேவை.


**தொடர்புகளுக்கு :**
**அரங்கம் நிறுவனம்,**
**227, பார் வீதி, மட்டக்களப்பு**

# பெரும்பான்மைக் கட்சிகள் சிறுபான்மை மக்கள் நலனில் கவனத்தை குவிக்க வேண்டிய தருணம்

**சிறுபான்மை மக்களை ஏமாற்ற முனைந்தால் பெருங்கட்சிகள் தாமே ஏமாந்துபோக நேரிடலாம்**

**தமிழர் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண பெரும்பான்மை கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும்**

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் வந்து, அது தோற்கடிக்கப்பட்ட பிறகு, உண்மையில் நாட்டில் உள்ள எந்தவொரு பெரும்பான்மையின கட்சியும் கலகலப்பாக இல்லை.



தீர்மானத்தை தோற்கடித்த காரணத்தால் பிரதமரின் ஐக்கியதேசியக் கட்சி மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும். ஆனால், தீர்மானத்தை தோற்கடித்தாலும், அடுத்த கட்டம் என்ன, எதிர்காலத்தேவைக்கு ஏற்ப கட்சியை எப்படி மறுசீரமைப்பது, தலைமையை இனி யார் முன்னெடுத்துச் செல்வது என்பன போன்ற பிரச்சினைகளால் அந்தக் கட்சி வெகுவாக குழம்பிப் போய் இருக்கின்றது.

அதேபோலத்தான் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுனவும், தீர்மானத் தோல்வியின் தாக்கத்தில் இருந்து இன்னமும் வெளிவரவில்லை என்றே தெரிகிறது. முன்னர் நாம் கட்டுரைகளில் கூறியதுபோல, ஜனாதிபதியின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ, குழப்பத்தில் உச்சக் கட்டத்தில் இருக்கிறது. யார் யாரோடு போவது, சேர்வது என்பது அவர்களது பிரச்சினை. மஹிந்த தரப்போடு சேர்ந்து போனால் மாத்திரமே அடுத்த இரு வருடங்களில் வரப்போகின்ற பொதுத்தேர்தல் மற்றும் அதற்கு முன்பான ஜனாதிபதி தேர்தலில் சாதகமான முடிவை பெற முடியும் என்பது அந்தக் கட்சியில் உள்ள ஒரு தரப்பின் பலமான நம்பிக்கை. அடுத்த சிலரோ, இருக்கும் இரண்டு வருடத்துக்காவது நிலைத்து நிற்பதற்கு ஜனாதிபதி தரப்பை பலப்படுத்தவேண்டும் என்கின்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

இந்த மூன்று தரப்பும் அடுத்த இரு வருடத்துக்கும் எவரை எப்படி கையாள்வது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனரே ஒழிய, அடுத்த பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலில் எப்படி வெற்றி கொள்வது என்பது பற்றி சிந்தித்துப் பார்க்கக்கூட திராணி அற்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி தனியாக பெற்ற வாக்குகள் மற்றும் சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன ஆகியவை பெற்ற வாக்குகள் ஆகியவற்றை வைத்துப் பார்த்தால், எந்தத்தரப்பும் மொத்த வாக்குகளில் 51 வீதத்தை பெற்றதாக தெரியவில்லை. அப்படி தெளிவான வாக்கை பெற்றால் மாத்திரமே ஜனாதிபதி தேர்தலில் முதல் கட்ட வாக்கு எண்ணிக்கையிலேயே வெற்றிபெற முடியும். நாடாளுமன்ற தேர்தலில் கூட அப்படியான ஒரு நிலையே தெளிவான நாடாளுமன்ற ஆட்சிப் பலத்தை எந்தவிரு கட்சிக்கும் தரமுடியும்.

ஆனால், எந்தக் கட்சிக்கும் அந்த வாய்ப்பு இருப்பது போல தெரியவில்லை. உண்மையில் இந்தக் கட்சிகளின் இந்த கணிப்புக்கள் எல்லாம் சிங்கள பெரும்பானமை வாக்குகளை எப்படி கவர்வது என்பதில் இருக்கின்றனவே ஒழிய சிறுபான்மை மக்களைப் பற்றியோ, அல்லது அவர்களது வாக்கு வங்கியைப் பற்றியோ இந்தக் கட்சிகளுக்கு ஒரு தெளிவான நிலைப்பாடு கிடையாது.





ஆனால், இந்த இரு தரப்புக் கட்சிகளும் சிங்கள மக்களின் வாக்குகளை பிரிக்கின்ற போது அங்கு சிறுபான்மை மக்களின் வாக்குகள்தான் இறுதியில் வெற்றியை நிர்ணயிக்கும் வாக்குகளாக இருக்கப் போகின்றன.

அப்படியான ஒரு நிலையில் மஹிந்த அணியோ, ஜனாதிபதியோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ சிறுபான்மை மக்களின் வாக்குகளை எப்படி பெறுவது என்பது குறித்த ஒரு தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருக்க வேண்டும்.



அப்படி அவர்களின் வாக்குகள் தேவையானால், இந்தக் கட்சிகள் சிறுபான்மை மக்களின் குறைந்தபட்ச எதிர்பார்ப்புக்களையாவது நிறைவேற்ற அல்லது அதற்கு முயற்சிக்க தயாரக இருக்க வேண்டும். அதன் முதற்கட்டமாக சிறுபான்மை மக்களின் மீது இந்தக் கட்சி களின் உறுப்பினர்கள் இனவாத நோக்கிலான கருத்துக்களை கொட்டுவதை தவிர்க்க வேண்டும்.

ஆனால், நடப்பது என்னவென்றால், இனப்பிரச்சினைகான ஒரு தீர்வாக அரசியலமைப்பு மாற்றம் கோரப்பட்டால், அதில் சமஸ்டி மூலமான தீர்வு கோரப்பட்டால், அதனை தனி நாட்டுக்கான கோரிக்கையாக சிங்கள மக்களிடம் எடுத்துச் சென்று இனவாதத்தை தூண்டும் நடவடிக்கைகளை இந்தக் கட்சிகளின் தலைவர்கள் சிலரே மேற்கொள்கிறார்கள்.

கடந்த காலங்களிலும் இவர்கள் இந்த மாதிரியே நடந்து சமாதான முயற்சிகளை குழப்பியிருக்கிறார்கள்.

அதன் அடுத்தகட்டமாக மேலும் முன்னோக்கிச் சென்று முஸ்லீம் மக்கள் மீது இனவாத ரீதியிலான வன்செயல்களை கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள் அல்லது அதனை சரியாகக் கையாள தவறியிருக்கிறார்கள்.

ஆக, இப்படியான நடவடிக்கைகள் இந்தக் கட்சிகளுக்கு சிறுபான்மை மக்கள் ஆதரவை பெற்றுத்தராது.
குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ அணியினரிடம் இருந்து தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் விலகி இருக்கிறார்கள்.

போரின் முடிவில் ஏற்பட்ட அழிவுகளும், அவரது ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களும் அவரை ஒரு எதிரியாக இந்த மக்கள் பார்க்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. சிறுபான்மை மக்களுக்கு எதிரான உணர்வுகளை காண்பிப்பதன் மூலம் தனிச் சிங்கள வாக்குகளை கவர்ந்து ஆட்சியை அமைக்கும் ஒரு திட்டத்தை கடந்த காலங்களில் அவரது கட்சி ஒரு திட்டமாக நடைமுறைப்படுத்தி வந்தாலும் இன்று நிலைமை மாறிவிட்டது. அவரது கட்சிக்குள்ளேயே இந்தத் திட்டம் வெற்றி தராது என்ற நிலையை சிலர் எடுத்துள்ளதாக தெரிகிறது. ஆகவே ஒட்டு மொத்தத்தில் எந்தவொரு பெரும்பான்மைக் கட்சியும் சிறுபான்மையினர் வாக்குகள் இல்லாமல் அடுத்த தேர்தலை எதிர்கொள்ள முடியாது என்ற நிலையே இன்று காணப்படுகின்றது.

அடுத்த இரண்டு வருடங்கள் இந்தக் கட்சி களுக்கு மிகவும் முக்கியமானவை, தமிழர் விடயத்தில் அவர்களின் இனப்பிரச்சினை தீர்வுக்கான நகர்வுகளை சாதகமான வகையில் கையாள இந்த கட்சி கள் முன்வரவேண்டும். அரசியலமைப்பு மாற்றத்தை செய்ய வேண்டி வந்தாலும், அதனை நாட்டைப் பிரிக்கும் நடவடிக்கையாக சித்தரித்து, சிங்கள மக்களை குழப்பாது, யதார்த்தத்தை உணர்ந்து தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக் காண இந்தக்கட்சி கள் ஒத்துழைக்க வேண்டும். அதேபோல முஸ்லிம்கள் மீதான விரோதப் போக்கை தணிக்கவும் உதவ வேண்டும்.

அப்படி செய்யாது போனால், குறைந்தபட்சம் அடுத்த இரண்டாவது வருடத்திலாவது வரக்கூடிய இரு தேர்தல்களிலும் இந்த கட்சிகள் சிறுபான்மை மக்களின் வாக்குகளை இழக்க நேரிடும். அதுவே அவர்களுக்கு பெரும் பாதகமாகவும் முடியலாம்.

-- பூபாலரட்ணம் சீவகன் --

## சல்லிப்பிட்டியில் மாநகர முதல்வர்

மட்டக்களப்பு புளியந்தீவு சல்லிப்பிட்டி பிரதேச மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக அமைந்த காணிப்பதிவு தொடர்பான விடயங்களை ஆராயும் முகமாக நேற்றைய தினம் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவான் களவிஜயம் மேற்கொண்டிருந்தார்.

சல்லிப்பிட்டிப் பொதுமக்கள் மற்றும் ஞான வைரவர் ஆலய நிர்வாக சபையினரால் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கையாக அமைந்த இவ்விடயத்தினை நடைமுறைப்படுத்தும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புளியந்தீவு தெற்கு



18ம் வட்டார உறுப்பினர் அந்தோனி கிருரஜன் அவர்களின் ஏற்பாட்டில் மாநகர முதல்வரின் இக்கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.



இதன் போது மட்டக்களப்பு மாநகர பிரதிமுதல்வர் கந்தசாமி சத்தியசீலன், மட்டக்களப்பு மாவட்ட காணி உத்தியோகத்தர் திருமதி குகதா ஈஸ்வரன் மற்றும் மண்முனை வடக்குப் பிரதேச குடியேற்ற உத்தியோகத்தர் க.ஞானப்பிரகாசம் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

இவ்விஜயத்தின் போது அப்பிரதேச மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பிற்கு



சாதகமான பல கருத்துக்கள் கலந்துரையாடப்பட்டதுடன், அம்மக்களின் காணிப்பதிவு விடயத்தை விரைவில் பூர்த்தி செய்து தருவதாகவும் இதன் போது மாநகர முதல்வர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## விளம்பி வருடப் பிறப்பு வேளை

மொத்தமான 60 வருடங்களில் 32வது வருடமாகிய 'விளம்பி' வருடம் உதயமாகின்றது.

அதிகாலை 3 மணி முதல் பகல் 11 மணி வரை புண்ணிய காலமாகும். இப்புண்ணிய காலத்தில் அதிகாலை 3 மணிக்கு முன்பே துயில் கலைந்து கடவுளை தியானித்து கண்ணாடி, தீபம், நிறைகுடம், தனது வலக்கை, தாய் தந்தையின் பாதம், தொட்டு வணங்கி, அதன் பின்பு நித்திய கடமைகள் முடித்து, தலையில்(சிரசில்) கொன்றையிலையும், காலில் ஆலிலையும் வைத்து மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து, சிவப்பு நிறப் பட்டாடை அல்லது சிவப்பு-கறுப்பு கரையுள்ள வெள்ளை ஆடையணிந்து, சுகசகிதனம் பூசி, நறுமலர் சூடி விநாயகர் முதலாய இஷ்ட தெய்வ வழிபாடுகள் செய்து, தன்னாலியன்ற தான தர்மங்கள் செய்து, × குரு, பெற்றோர் மற்றும் பெரியோர்களை வணங்கி × அவர்களின் ஆசி பெற்று உறவுகள் நண்பர்களுடன் அளவளாவி, அறுசுவை உணவுடன் வேம்பூ, பிட்டு சேர்த்து அருந்தி அதன் பின்பு கண்ணாடியில் முகதரிசனம் செய்து புதிய வருஷப் பலாபலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து, கிடைத்தற்கரிய மானிடப் பிறவியற் செய்யக்கூடியவற்றைச் சிந்தித்து மங்களகரமாக வாழக்கடவீர்.

**கைவிசேடம்-**
**14.04.2018 சனிக்கிழமை பி.ப**
**12.15-02.10வரை**

சனிக்கிழமை இரவு 6.21-8.13வரை

16.04.2018 திங்கள் கிழமை பி.ப
12.30-02.02வரை

திங்கள் கிழமை இரவு 6.13-7.24வரை

**வித்தியாசாலை ஆரம்பம்-**
20.04.2018 வெள்ளி பகல்
12.36-1.56வரை

07.05.2018 திங்கள் பகல்
12.50-2.39வரை

**வியாபாரம் செய்ய, புதுக்கணக்கு ஆரம்பிக்க-**

16.04.2018 திங்கள் மாலை
6.13-7.24வரை

**கலப்பை - கொழு புதுப்பிக்க-**

27.04.2018 வெள்ளிக்கிழமை பகல்
13.03-1.18வரை

**பூமிப்பிரவேசம் செய்ய, ஏர்மங்கலம், வயல், தோட்டச் செய்கை, நெல் விதைக்க, கத்தரி, மிளகாய், வெண்டி, தக்காளி முதலியன நாற்றிடுதல்-நடுதல்.**

**வாழை, கரும்பு, மரவகை நடுதல்(தென்னை, பலா, மா, கடுகு) அன்னப்பிராசனம், புதிதுண்ணல்.**

16.04.2018 திங்கள் கிழமை பகல்
12.30-2.02வரை

**கப்பல், தோணி, ஏராவோடல், பாய்மரம் நிறுத்தல், கடற்பிரயாணம், கப்பல்-தோணி சரக்கேற்றல்-**

20.04.2018 வெள்ளிக்கிழமை பகல்
12.36-1.56வரை

-- ரமணி --

## விளம்பி வருடப்பிறப்பு விளம்புவது என்ன?



உலக இயக்கத்திற்கு உறுதுணையாக இருப்பது சூரியன். தமிழர்கள் இயற்கையோடு வாழ்ந்தவர்கள். அன்று இயற்கையை தெய்வமாக வழிபட்ட அவர்கள் இன்றும் சூரிய சந்திரரோடு தமது வாழ்வியலையும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் வரையறுத்துக் கொண்டவர்கள்.

ஞாயிறு ஒளி பரவாவிடின் வையகத்தில் விடிவில்லை. அகிலமும் அண்டச ராசரமும் இருட்டு. சூரியபகவான் காலத்தை அளப்பதற்குமட்டுமல்ல உயிரின் தோற்றத்திற்கும் வாழ்க்கைக்கும் மூலவிசையாகத் தொழிற்படுகின்றார்.

ஆதிசங்கரர் தோற்றுவித்த ஆறுவித



வழிபாட்டில் சூரியவழிபாடும் ஒன்று. அதனை சௌரம் என அழைப்பர்.

விண்ணுலகத் தெய்வமான சூரியனோடு தொடர்புடைய விழா பொங்கல் விழா. அதே சூரியன் 12 இராசிகளிலும் சஞ்சரித்து மீண்டும் மகரராசியில் பிரவேசிக்கும் தினம் புத்தாண்டாக கொள்ளப்படுகிறது.

பிரம்மா உலகப்படைப்பை ஆரம்பித்த நாள்தான் புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது என்று கருதப்படுவதும் உண்டு.

இலங்கையில் தமிழ் - சிங்கள மக்களால் கொண்டாடப்படும் வைபவமாக புதுவருடப் பிறப்பு இருப்பதால் இது ஒரு தேசியப் பெருவிழாவாகவும் முக்கியத்துவம் பெறுகிறது. புதிய எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வைத்து மங்களகரமான திருநாளாக சித்திரைப் புதுவருடம் வரவேற்கப்படுகிறது

கைவிஷேடம்
------------------------

சித்திரை முதல் நாளன்று அனேகமானோர் கோயில்களுக்கு சென்றும் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டும் மற்றும் பல வகைகளிலும் வருடப் பிறப்பை சிறப்பாக கொண்டாடுவர்.

சித்திரைப் புதுவருடத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் கைவிசேடமாகும். ஆரம்ப காலத்தில் வீட்டின் தலைவி உரிய சுப நேரத்தில் சிறிய மூலிகைப் பொட்டலம் ஒன்றினை கிணற்றுக்குள் போட்டுவிட்டு பிறக்கும் புத்தாண்டு நிமித்தம் முதல் முறையாக தண்ணீரை கிணற்றிலிருந்து வெளியில் எடுப்பதையே கை விசேடமாக கருதப்பட்டது. ஆயினும் நாளடைவில் கைவிசேடம் என்பது சுபமுகூர்த்தத்தில் பணத்தை கொடுப்பதும் எடுப்பதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நல்ல நேரத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்தும் வயதில் மூத்தவர்களிடமிருந்தும் அலுவலகங்கள், விற்பனை நிலையங்கள், தொழிற்சாலைகள் என்பவைகளில் வேலை செய்வோர் தங்கள் வேலை கொள்வோரிடமிருந்தும் புதுவருடத்தில் முதல் அன்பளிப்பாக வெற்றிலையில் பாக்கு, நெல்லு, காசு என்பவற்றை வைத்து குத்து விளக்கின் முன்னாலே வைத்துக் கொடுப்பர்கள். பணத்தை கைவிசேடமாக பெற்றுக்கொள்வார்கள். கொடுக்க பட்ட எல்லாவற்றையும் எண்ணி (நெல்லு உட்பட) அது ஒற்றை விழுந்தால் நல்ல பலன் என்பது ஐதீகம். கைவிசேடம் பரிமாறிக்கொள்வது என்பது ஒரு பாரம்பரியமான வழக்கமாகும்.

மூத்தோர்களிடமிருந்து கைவிசேடம் பெற்றால் அந்த ஆண்டு முழுவதும்



பணவரவும் பல நன்மைகளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கைவிசேடமாக பெற்ற பணத்தை அந்த ஆண்டு முழுவதும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதும் நம்பிக்கையாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

சிங்கள மக்கள் தமது புதுவருடத்தில் புத்தாண்டுக்கான ஏற்பாடுகள் அதற்கான சுபநேரத்தில் அரிசி இடித்து அடுப்புக்கட்டி பலகாரம் சுடுவதுடன் ஆரம்பிக்கப்படுவது வழக்கமாகும். அடுத்ததாக பழைய வருடத்திற்கான ஸ்நானம் இடம்பெறும். உடலையும் உள்ளத்தையும் சுத்தப்படுத்தும் நோக்கி இடம்பெறும் இந்த குளியில் பழைய வருடத்திற்கான இறுதிக் குளியலாகும். புத்தாண்டுக்கான விசேட நீராடல் சிங்களவர் மத்தியில் வழக்கத்தில் இருந்து வருகின்றது.

கலை கலாச்சார நிகழ்வுகள்
---------------------------------------

நாட்டின் முக்கிய பகுதிகளிலும் கலை, கலாசார, இசை நிகழ்ச்சிகளுடன் சித்திரைப் புதுவருடம் சிறப்பாகவே கொண்டாடப்படும். இடத்துக்கு இடம் அந்தந்தப் பிரதேச கலாசார மரபுகளுக்கு அமைய வைபவ நடைமுறைகள் வேறுபட்டிருந்தாலும் பாரம்பரியமான நிகழ்ச்சிகளான போர்த்தேங்காய் அடித்தல் சேவல் சண்டை, கிளித்தட்டு, சடுகுடு போன்ற விளையாட்டுகள் எல்லா இடங்களிலும் நடைபெறும் சிறப்பு அம்சங்களாகும்.

இத்துடன் ஊஞ்சலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல், பல்லாங்குழி, ரபான் அடித்தல், சொக்கட்டான் போன்ற பெண்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுகளும் இடம்பெறுவதுண்டு. அத்துடன் மாட்டு வண்டிச் சவாரி, துவிச்சக்கர வண்டி ஓட்டம், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் தலையணைச் சண்டை, வழுக்கு மரம் ஏறுதல்



போன்ற போட்டிகளும் சித்திரைப் புதுவருடத்தையொட்டி நடைபெறுவது வழக்கம்.

புதுவருடத்திற்காக அடுப்பு மூட்டுவதும் ஒரு பழக்கமாகும். பழைய வருடத்தின் முடிவில் அனைத்து அடுப்பு வேலைகளும் முடிவிற்குக் கொண்டுவரும் வீட்டுத் தலைவி, அடுப்புச் சாம்பலையும் அப்புறப்படுத்தி அடுப்பை தூர்த்துவிடுவாள். அதன் பின் புத்தாண்டு பிறக்கும் வரை வீட்டில் அடுப்பு பற்றவைப்பதில்லை. உரிய நேரம் காலம் பார்த்து மீண்டும் புதுப்பானை வைத்து பொங்குவதற்காக வீட்டுத் தலைவி சுபமுகூர்த்தத்தில் அடுப்பை பற்ற வைப்பதே வழக்கத்தில் இருந்து வருகின்றது.

பாரம்பரியம்!
--------------------

இந்த நன்னாளில் எம்மவர்கள் மருத்துநீர் தேய்த்து, சிரசில் கடப்பமிலையும் பாதத்தில் வேப்பமிலையும் வைத்து, குளித்து, புத்தாடை தரித்து, கண்கண்ட தெய்வமாம் சூரியபகவானை வணங்கி, பொங்கலிட்டு, ஆலயவழிபாட்டில் ஈடுபட்டு, குரு பெரியார்களின் ஆசிபெற்று, அறுசுவை உண்டியுண்டு, உற்றார் உறவினர்களிடம் சென்று, பாரம்பரிய விளையாட்டுகளில் ஈடுபட்டு, சுகமான நித்திரை செய்வது வழமையாகும்.

வி.ரி சகாதேவராஜா

இலங்கையில் தேசிய நல்லுறவுக்கான ஒரு தேசிய விழாவாக புத்தாண்டை தமிழரும் சிங்களமக்களும் இணைந்து கொண்டாடுகின்றனர் என்பது சிறப்பம்சமாகும். இத்தினங்கள் தேசிய விடுமுறையாக இலங்கையில் பதியப்படுவதும் சிறப்பம்சமாகும்.

# தென்னிந்திய தொழிலாளர்களின் உயிரைக் குடித்து அமைந்த தண்டபாளங்கள்

## 160 வருடங்களை கடந்துவிட்ட சிலோன் ரயில்வே

போக்குவரத்தினால் ஏற்படும் சூழல் மாசடையும் வீதத்தை குறைப்பதற்கான சரியான உக்தியாக புகையிரத போக்குவரத்து சேவையை அபிவிருத்தி செய்தல் மற்றும் நாடு பூராகவும் விரிவாக்குதலே கருதப்படுகின்றது.

அத்தகைய பொன்னான ஒரு புகையிரத போக்குவரத்து சேவையை இலங்கையில் அறிமுகம் செய்தததற்கு பிரித்தானியருக்கே நாம் நன்றி சொல்ல வேண்டும்.

1858இல் ஆரம்பிக்கப்பட்டு 160 ஆண்டுகளை கடந்துள்ளது இலங்கை புகையிரத சேவை. இது அரசிற்கு இலாபத்தை ஈட்டக்கூடிய ஒரு துறையாகும்.


இலங்கையில் புகையிரத சேவையின் ஆரம்பக்கட்ட பங்களிப்பு எம் முன்னோர்களை ஆட்சி செய்த பிரிட்டிஷ்காரர்களாலேயே வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரயில்வேயை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான திட்டத்திற்கு எதிராக பல முரணான கருத்துக்கள் ஆரம்பத்தில் இருந்தாலும், இதற்கு முன் இந்தியாவில் ஒரு புகையிரத பாதையை கட்டியமைத்த W F Faveill அவர்கள் பிரிட்டனின் உதவியுடன் கட்டுமானப்பணிகளை ஆரம்பித்தார்.

இதன் முதற்கட்டமாக கொழும்புக்கும் அம்பேபுஸ்விற்கும் இடையில் பாதை போடப்பட்டது. இந்தப் பாதையில் ஒட்டுமொத்த நீளத்தின் மிகவும் கடினமான பகுதி 53 வது மைல் முதல் 65 மைல் வரை உள்ள பகுதியாகும். 12 மைல்களுக்கு சாய்வு. 44 இல் ஒன்று (1/44)என செங்குத்தானதாக இருந்தது. 10 சுரங்கங்கள் வெட்டப்பட்டிருந்தன, இதில் மிகநீளமானது 1,095 அடி (338மீ) நீளம் கொண்டது



தென்னிந்திய மக்கள், இங்கு உயிரைக் கொடுத்து இரும்புப் பாதை அமைத்தனர்.




அனைத்து உபகரணங்களும் பிரித்தானியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டன. எனவே பெரும் காலதாமதத்துடன் வேலை முடிந்ததாக அக்கால வீதி மற்றும் புகையிரத பாதை கட்டுமானங்களுக்கு பொறுப்பதிகாரியான தோமஸ் ஸ்கின்னரின் சுயசரிதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் சேவை தேயிலை, கோப்பி போன்றவற்றை மலைநாட்டிலிருந்து கொழும்புக்கு கொண்டுவர தொடங்கப்பட்டு, குறித்த சில ஆண்டுகளிலேயே முதலீட்டாளர்களுக்கு நல்ல இலாபம் ஈட்டக்கூடியதொன்றாக நிலைபெற்றது. மேலும் இவை



பொருளாதார, வர்த்தக நோக்கை மட்டும் கருதாமல் மக்களுக்கு சேவை வழங்கும் நோக்குடனும் தொழிற்பட தொடங்கின.

1867ல் கண்டிவரை, 1874இல் நாவலப்பிட்டி, 1885இல் நானுஓயா, 1894இல் பண்டாரவளை, என 1924இல் பதுளைவரையும் இப் புகையிரதப்பாதை நீட்டப்பட்டது. அத்தோடு 1880இல்

**பவித்திரன் மணிசேகரன்**



மாத்தளை, 1905இல் வடக்கு, 1914இல் மன்னார், 1926இல் புத்தளம், 1928இல் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பிற்கும் புகையிரதப்பாதை போடப்பட்டது. இருந்தும் கடந்த 90 ஆண்டுகளாக புதிதாக எந்தவொரு புகையிரத பாதையும் நிர்மாணிக்கப்படவில்லை.

1953வரை நீராவி என்ஜின் பாவனையிலிருந்தது பின்னர் டீசல் என்ஜின் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்றுவரை டீசல் என்ஜின் பாவனையே உள்ளது. இருந்தும் சிறு சிறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதே தவிர பாரியதொரு மாற்றம் ஏற்படவில்லை.

தென்னிலங்கையில் அன்றாட போக்குவரத்திற்காக புகையிரதத்தையே நம்பி பலரும் இருக்கின்றார்கள். ஆனாலும் ஏனைய பகுதிகளில் தலைநகருக்கு செல்வதற்கு புகையிரத போக்குவரத்தை விரும்புவர்களே அதிகம். இருந்தும் புகைவண்டி பயணத்தை இதுவரை அனுபவிக்காமலும் நம்மில் பலர் உள்ளனர்.

உலகளவில் மணிக்கு 400 கி.மீ ற்கும் (400kmph) அதிக வேகத்தில் ஓடும் புகையிரதங்கள் சேவையில் இருந்தாலும் நாம் இன்னும் அந்த டீசல் என்ஜின், அதே குலுக்கல் என்று சற்றும் மாறாத புகையிரத சேவையையே கடந்த 90 வருடமாக பயன்படுத்தி வருகிறோம். பாரிய முன்னேற்றகரமான மாற்றம் ஒன்றை நோக்கி நமது புகையிரதங்கள் ஓடவேண்டும்.



இலக்கை அடைவதற்காக மூவாயிரம் பேர் மலேரியா, காலரா (வாந்திபேதி), பாம்புக்கடி, அடர்த்தியான காடுகள் மற்றும் பருவ மழைகள் போன்ற பல இன்னல்களையும் கடந்து வேலை செய்தனர். இருந்தும் மலேரியா போன்ற நோய்கள் அதிக உயிரிழப்பை ஏற்படுத்தின.

மேலும் இங்கு வேலையாட்கள் கிடைப்பது மிகவும் கடினமானவொன்றாக இருந்ததால் தென்னிந்தியாவிலிருந்து வேலைக்கு ஆட்கள் கொண்டுவரப்பட்டார்கள். பொய்கூறி வேலைக்கு அழைத்து வரப்பட்ட

## பட்டதாரி பயிலுனர்களுக்கான அறிவித்தல்

தொடர்ச்சி

விடயங்கள் ஏதாவது இருப்பின் அதனை சத்தியக்கடதாசி மூலமாக உறுதிப்படுத்துவது அவசியமானதாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டதாரிகளை பட்டதாரிப் பயிலுனர்களாக 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளன.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் இதற்கான அழைப்புகள் பட்டதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## தமிழகத்தில் பிரதமர் மோடிக்கு எதிராக பெரும் போராட்டம்

தொடர்ச்சி

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காததைக் கண்டித்து, தமிழகத்தில் பல்வேறு போராட்டங்கள் நடந்து வருகின்றன.
சாலை மறியல், ரயில் மறியல் என, பல்வேறு கட்சிகள், அமைப்புகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.
10 ஆம் திகதி சென்னையில் ஐபிஎல் போட்டி நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை அண்ணாசாலையில் நடந்த புரட்சி போராட்டம் இந்தியா எங்கிலும் பேசப்பட்டது. அதையடுத்து சென்னையில் நடப்பதாக இருந்த அனைத்து ஐபிஎல் போட்டிகளும் புனேவுக்கு மாற்றப்பட்டுள்ளன.
இந்த நிலையில், சென்னை அடுத்துள்ள திருவிடந்தையில் இராணுவக் கண்காட்சி தொடக்க விழா, அடையாறு புற்றுநோய் மருத்துவமனை வைர விழா ஆகியவற்றில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சென்னை வந்தார்.
சென்னையில் காலை முதலே அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

டிவிட்டரிலும் மோடி எதிர்ப்பே உலக டிரெண்ட் ஆகியுள்ளது. ஒரு பிரதமருக்கு எதிராக இந்தியாவின் ஒரு மாநிலத்தில் இப்படிப்பட்ட பிரமாண்ட போராட்டம் நடப்பது இதுவே முதல் முறையாக இருக்கும் என்று தெரிகிறது.



# ஈழத்தில் ஒரு கீழடி : திருக்கரசை

**பால.சுகுமார்**
**மேனாள் முதன்மையர்**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக் கழகம்**

திருக்கரசை மண்ணை, கிளிவெட்டி கிராமத்திலிருந்து பத்து மைல் தூரத்திலும் கங்குவேலி கிராமத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலும் மாவலி கங்கையின் கரையோரம் வளமான காடுகளுக்குள் பல நூற்றாண்டுகள் மறைந்து போன நாகரிக தொட்டிலாக நாம் அடையாளம் காண முடியும்.

ஈழத் தமிழர்களின் தொன்மை நாகரிகத்தின் முடிச்சு அவிழும் இடமாக அமைவதற்கான எல்லா ஆதாரங்களும் இங்கு புதைந்து



கிடக்கின்றன.

திருக்கரசை புராணம் இந்த நிலத்தை இப்படி வர்ணிக்கிறது;

‘காடெலாங் கரிநல் யானை கரையெலாம் பவளக் குப்பை
நாடெலா மிரத்ன ராசி நகரெலாம் நல்லோர் சங்கம்
வீடெலாஞ் செம்பொற் கூரை
வெளியெலாஞ் செந்நெற் குன்றங்
கோடெலாம் மஞ்ஞை யீட்டம்
குழியெலாங் கழுநீர்ப் போது. 13

காவெலாம் மதன பாணங் கரையெலாஞ் சங்கச்சங்கம்
பூவெலாம் வண்டின் சாலம் புறவெலாம் நிரையி னீட்டம்
மாவெலா மன்னக் கூட்டம் மலையெலாங் காள மேகம்
நாவெலா மமிர்த கீத நதியெலா முதுநீர்த் தீர்த்தம். 14

தண்ணமர் சாலி முத்தும் தடங்கட லிப்பி முத்தும்
வண்ணவொண் பணில முத்தும் வரையறா வோல முத்தும்
கண்ணமர் கரும்பின் முத்துங் ககனமஞ்

**தமிழர் தொன்மை வாழ்வு மாவலி நதிக்கரையில் செழிப்போடு இருந்ததற்கான சான்றுகள் நமக்கு கிடைக்கும்**



சீன்ற முத்தும்
வெண்ணில வில்லாப் போது மிகுநிலாக்
கொழிக்கு மன்றே. 15

பணிலம்வெண் டிரையி னார்ப்பப்
பவளமுந் தவள முத்தும்
மணிகளுஞ் சாந்தும் பூவும் மாலையும்



பிறவும் வேய்ந்தும்
திணிமதிக் குடைக வித்துத் திரைக்குழாங் கவரி காட்ட
அணிமணி வீதி தோறு மாழியு முலாவு மாமால். 16

கொஞ்சிய கிள்ளை மென்சொற் கோதையர் சிலம்பி னார்ப்பும்
வஞ்சியின் காஞ்சி யார்ப்பும் வாயறாத் தமிழி னார்ப்பும்
விஞ்சிய மள்ள ரார்ப்பும் விழாவெழு முழாவி னார்ப்பும்
அஞ்சிறை வண்டி னார்ப்பு மன்றியோ

**காடெலாங் கரிநல் யானை கரையெலாம் பவளக் குப்பை நாடெலா மிரத்ன ராசி நகரெலாம் நல்லோர் சங்கம்**

ரார்ப்பு மின்றால். 17

தெளிவுறு கிரணக் கற்றைச் செம்மணிப் பத்தி சேர்ந்து
குளிர்புனல் நதிக ளெல்லாங் குருதியினாறு போலு



மொளிர்தரு மிப்பி யீன்ற
வொண்ணிறத் தவள முத்தின்
வெளிநிலா வீங்கி யுப்பு வேலைபா
லாழி யொக்கும். 18

ஊட்டு செஞ்சுடர் மணியினைத்
தடியென வுகந்து
காட்டுத் தம்மிரு பதங்காளற் கவர்கின்ற
கங்கந்
தோட்டுத் துண்டங்கொண் டுண்பதற்
காமெனத் துணிந்து
கூட்டில் வைத்தன பறந்தன வாதரங் கூர்ந்து. 19

மடைகி டந்தவொள் வளவயற் றொளியறா
வரம்பின்
கிடைகி டந்தசங் குதவிய முத்தெலாங்
கண்டு
புடைகி டந்ததம் மண்டங்க டம்மொடு
புகட்டி
யடைகி டந்தன சிறையகத் தடக்கியே
யன்னம். 20

மாறில் பாளைகண் மலரிளங் கமுகினல்
வாளை
யேறு பாய்தர வயலெலா முகுவன
விளங்கா
யாறு பாய்வதென் றதிசய மெனக்கரும்
பாலைச்
சாறு பாய்தர வளாவன கழனியிற் சாலி. 21

இன்ன லின்றியே யிணர்த்ததா ளிப்பனை
யெவைவும்
பொன்னின் வீதியுட் பொலிநிலைத்
தேர்க்குழாம் போலுங்
கன்னி மார்குழல் கூந்தலங் கமுகுகள் காட்ட
வன்ன பாளைக ளளிப்பன
கமுகுக ளனந்தம். 22

கண்ணி லாவிய நறுந்தொடைக்
காளையர் தங்கள்
வண்ண மாதர்கள் வதனமேற் புணர்கின்ற



வைரம்
மண்ணி லாவிய வெண்ணிறக் கலைமதி
யெழுச்சி
யுண்ணி லாவிய புனலிடைக் கண்டபி
னொழிப்பார். 23

மஞ்சின் முத்தமு மரந்தையின்
மரகத மணியும்
விஞ்சு செம்பொனும் வலவயிற்
செம்மணி வேய்ந்தும்
மஞ்சொற் கம்பலை யாற்றினன் னீலமு
மவிர்ந்தும்
பஞ்ச வன்னமே யிரவினும் பகலினும்
பயிற்றும். 24‘

ஈழத் தமிழர்கள் புராதன நாகரிகத்துக்கு சொந்தக் காரர்கள். ஈழதேசத்தின் கிழக்கின் தொல்லியல் களஞ்சியமாய் விளங்கும் கொட்டியாரம் நம் முன்னோர்கள் வழி வரலாற்றை பறைசாற்றும் பல ஆதி கால சான்றுகள் நிறைந்து காணப்படுகிறது.

சேனையூர், கட்டைபறிச்சான், சம்பூர், பள்ளிக்குடியிருப்பு, நல்லூர், மல்லிகைத்தீவு, மூதூர், இலங்கைத்துறை, கிளிவெட்டி, ஈச்சலம்பற்று, மேங்காமம், கங்குவேலி, வெருகல் என விரிந்திருக்கும் கிராமங்கள் தோறும் வரலாற்றுத் தடங்கள் விரவிக் கிடக்கின்றன.

சிந்து சமவெளி நாகரிகமாக மொகஞ்ச தாரோ ஹரப்பா தமிழர் முது நாகரிகத்தை சொல்கிறது. தென்னக வைகைக் கரையில் நாம் சங்க இலக்கியத்தில் படித்த நாகரிகம் மிக்க தமிழர் வாழ்வை அண்மைக்கால கீழடி ஆய்வுகள் நிருபிக்கின்றன.

ஈழத் தமிழர் தொன்மை வாழ்வு மாவலி நதிக்கரையில் செழிப்போடு இருந்ததற்கான சான்றுகள் நமக்கு திருக்கரசை திருமங்கலாயில் ஆழப் புதைந்த பதிவுகள் கட்டிட இடிபாடுகளாய் நம் கண் முன் திருக்கரசை புராணம் இலக்கியமாய் ஈழத் தமிழர் தொன்மை நாகரிகத்தை எடுத்தியம்பும்.

இன்று கல்வெட்டுகளும் அடித்தள கட்டுமானங்களும் திருக்கரசையில் புதைந்து கிடக்கும் அந்த நாகரிகத்தை மீட்டெடுக்க வேண்டும்.

ஒரு பெரும் பழந்தமிழர் நகரமே இங்கு புதைந்து கிடக்கிறது. இலங்கையில் பொலநறுவையும், அனுராதபுரமும் புராதன நகரங்களாக எந்த அளவுக்கு கொண்டாடப்படுகின்றனவோ அந்த அளவுக்கு திருக்கரசை நகரும் கொண்டாடப்பட வேண்டும்.

ஒரு செழிப்பு மிகு நாகரிகம் இங்கு இரண்டாயிரம் வருசங்களுக்கு முன்பிருந்தே தொடர்கிறது என்பதை ஆரம்ப ஆய்வுகள் நிருபிக்கின்றன. இன்னும் நாம் மேலும் மேலும் அகழ்வாய்வுகளை மேற்கொள்கிற போது நம் நாகரிகத்தின் பழமையயை ஆணித்தரமாக உறுதிப்படுத்த முடியும்.

உலக வரலாறு நதிக்கரைகளையும் ஆற்று படுக்கைகளையும் அண்டியே வளர்ந்திருக்கிறது. திருக்கரசை பெரும் கங்கை சமவெளியாய் நீண்டு கிடக்கிறது. மணல் படுக்கைகளாய் உறைந்து கிடக்கும் பெரு நகரம் ஒன்று மறைந்து கிடக்கும் திருக்கரசையின் பண்டைப் பண்பாட்டை நாம் மீட்டெடுக்க வேண்டும்.

கீழடி ஆய்வுகள் எப்படி இந்திய வரலாற்றின் பக்கங்களை திருப்பிப் போட்டிருக்கின்றனவோ, அதே போல திருக்கரசையிலும் அதனைச் சூழ உள்ள மகாவலி ஆற்றுப் படுக்கையிலும் அகழ்வாய்வு சரியான முறையில் மேற்கொள்ளப்படுகிற போது ஈழத் தமிழர் வரலாற்றின் புதிய அத்தியாயங்களை எழுத முடியும்.

# கல்வி ரீதியாக மாற்றத்தை ஏற்படுத்த துடிக்கும் மண்முனை தென்மேற்கு பெண்கள்!

இழந்தவற்றை மீளப் பெற்று சாதித்து காட்ட வேண்டுமென்பதே இவர்களின் துடிப்பு.
யுத்த வடுக்களை தாங்கிய மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில், பல பெண்கள் விதவைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆண் துணையுள்ள குடும்பங்களே வாழ்க்கையை சிரமமின்றி கொண்டு செல்வதற்கு பல பிரயத்தனங்களையும், போராட்டங்களையும் மேற்கொண்டு வாழ்க்கையை வழிநடத்தும் இக்காலகட்டத்தில், ஆண்துணையின்றி குடும்பத்தின் தலைவனாகவும், தலைவியாகவும் தானே இருந்து பல பெண்கள் குடும்பத்தினை நடாத்தி செல்கின்றமை வியப்பானதே.
அரிசி குற்றி, மா இடித்து தலையில் வைத்து சுமந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் சென்று, விற்று, வீடு திரும்பி, வீட்டு வேலைகளையும் செய்து, பிள்ளைகளின் கடமைகளையும் நிறைவேற்றும் சம்பவங்கள் இன்றும் பட்டிப்பளைப் பிரதேசத்தில் தொடர்வது வேதனையானதே.
தாம் அனுபவிக்கும் சுமைகளையும், வேதனைகளையும் தம்பிள்ளைகள் அனுபவித்துவிடக்கூடாது என்பதில், தாயவள் குறியாக இருக்கின்றாள். இதைத்தான் தாய் பாசம் என்கிறார்கள். அதற்காக பிள்ளைகளைக் கற்பிப்பதில் ஆர்வமாக இருப்பதாக, துணைவன் இன்றி நிற்கும் தாய் ஒருவர் குறிப்பிட்டாள்.



சமூகத்தில் துணையின்றி நிற்கும், பெண்களுக்கு கல்வியும் அவர்கள் காலத்தில் எட்டாக்கனியானதும் இன்று வேதனையுறுவதற்கும் ஓர் காரணமே. மூன்று தசாப்த யுத்தம் ஏற்படுத்திய வடுக்களை தாங்கி, கல்வியிலே, பொருளாதாரத்திலே வீழ்ச்சியுற்றிருந்த மண்முனை தென்மேற்கு பிரதேசம், தற்போதுதான் மெதுமெதுவான வளர்ச்சிக்கு அத்திவாரமிடுகின்றது. கல்வி ரீதியிலான வளர்ச்சியில் மண்முனை தென்மேற்கு பிரதேச பெண்களின் கால்பதிப்பு என்பதும் அவசியமானதே.
மண்முனை தென்மேற்கு கோட்டத்தில் ஆறு பாடசாலைகளில், கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்கள் வரை இருக்கின்றன. இப்பாடசாலைகளில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை நகர்ப்புறப்பாடசாலைகளில் இருந்து செல்வதைவிட குறைவாகினும், இப்பிரதேசத்தில் முன்னரைவிட தற்போது கூடுதலாக செல்கின்றனர் என்பதே உண்மை.

**நகரப் புறத்தைவிட இவர்கள் பல்கலைக்கழகம் செல்வது குறைவாகினும், அதில் வளர்ச்சி காணப்படுகின்றது.**

2016ம் ஆண்டு வெளியாகிய கல்விப்பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கற்ற 22 மாணவிகள் பல்கலைக்கழகங்களுக்கு சென்றிருக்கின்றனர். இதேபோன்று இப்பகுதியைச் சேர்ந்த ஆனால் நகர்ப்புறப்பாடசாலைகளில் கல்வி கற்ற பெண் மாணவர்கள் பலரும் பல்கலைக்கழகத்திற்கு சென்றுள்ளனர். இவ்வாறான மாற்றங்கள் பிரதேசத்திற்கு கிடைத்த வெற்றியென்றால் மிகையாகாது. அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற குணசீலன் கோபிகா, அரசடித்தீவு விக்கினேஸ்வரா



மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற பவளசிங்கம் கஜானா, அமிர்தலிங்கம் அலோஜிகா, நவரெத்தினம் துசாலா, சிவநேசராசா யுதாயினி, அழகுதுரை இதயரஞ்சனி, கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ணமிசன் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற சுகிர்தகரன் மாதங்கி, வசந்தராஜா றோசாந்தி, முனைக்காடு விவேகானந்த வித்தியாலயத்தில் கல்வி பயின்ற காராளசிங்கம் ஜெயந்திமாலா, சுதாகரன் மாலினி முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற தட்சணாமூர்த்தி டினேஸ்கா, வன்னியசிங்கம் துலக்சனா, ஜெயராசா சர்சினி, உதயகுமார் யனுஸ்கா, சிவலிங்கம் கவிந்தா, கேசவன் மிதுசனா, மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி பயின்ற தம்பிராசா அனுராதா, அரியசிறி நிவேதிகா, கணபதிப்பிள்ளை றேணுகா, சுப்பிரமணியம் பிரசனா, சிவகுமார் குபேதினி, அலையப்போடி தர்சிகா ஆகிய மாணவர்கள், 2016ம் ஆண்டு பெறுபேற்றின் அடிப்படையில் மண்முனை தென்மேற்கு கோட்டப்பாடசாலைகளில் இருந்து, பல்கலைக்கழகத்திற்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை பிரதேசத்திற்கு கிடைத்ததான வெற்றியும், மாற்றத்திற்கான வழியுமேயாகும்.
பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி சென்றிருக்கின்ற இம்மாணவர்களை சந்திக்கும் வாய்ப்பு கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் வைத்து கிடைக்கப்பெற்றது. இதன்போது, மாணவர்களின் ஆதங்கமாக, எமது பிரதேசத்தினை நாமே ஆழ வேண்டும். இழந்தவைகளை பெறவேண்டும், நாம் முன்னேறுவதற்கான வழி கல்வி மட்டுமே. பெண்களால் பிரதேசத்தில் மாற்றத்தையேற்படுத்த முடியும் என்பதை சாதித்து காட்டுவோம். கல்வியில் எழுச்சி பெற்ற சமூகமாக உருவாக்கி காட்டுவோம். என்ற கருத்துக்கள் வெளிப்பட்டு நின்றன. இவ்வாறான ஆதங்கங்கள் மகிழ்ச்சியை அளித்தன.

# தமிழுக்காக பேச்சை நிறுத்தியவர்

தமிழகத்தின் திருப்பூரில் 80 வயது முதியவர் முத்துசாமி மார்ச் மாதம் 24 ஆம் தேதி முதல் பனைமரத்தின் முன்பாக உறுதிமொழி எடுத்துக்கொண்டு தன் பேச்சை நிறுத்திக்கொண்டார்.

தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழி ஆகும் வரை இனி பேசப் போவதில்லை என்பதே முதியவர் முத்துசாமி எடுத்துக்கொண்ட உறுதிமொழி.

நெரிசலான குடியிருப்பு பகுதிகள், குடியிருப்புகளுக்கு இணையான அளவில் பின்னலாடை நிறுவனங்கள் என எப்போதும் பரபரப்பான சூழலில் காணப்படும் திருப்பூர் மாநகரத்தில் கருவம்பாளையம் பகுதியில் உள்ள முதியவர் முத்துசாமியின் வீட்டின் முகப்பில் நுழையும்போதே அமைதியை உணர முடிகிறது.

**தமிழ் ஆட்சி மொழியானால் மாத்திரமே பேசுவேன் என்கிறார் இந்தத் தமிழக முதியவர்**

முற்றத்தில் இருந்தே மூலிகை செடிகள், தமிழையும் பனையையும் குறித்த பதாகைகள், தமிழை பற்றி தெரிந்து கொள்வதற்கெனவே நூற்றுக்கணக்கான புத்தகங்கள் என எந்நேரமும் தமிழ் குறித்த




சிந்தனையுடனேயே வாழ்ந்து வருகிறார் முதியவர் முத்துசாமி.

சிங்கப்பூர் மற்றும் இலங்கை போன்ற நாடுகள் தமிழை ஆட்சி மொழியாக கொண்டுள்ளன. மலேசியா, மொரீசியஸ், கனடா போன்ற நாடுகள் தமிழை பண்பாட்டு மொழியாக ஏற்றுக்கொண்டுள்ளன.

இந்நிலையில், தமிழ்நாட்டில் இன்றைய தலைமுறை இடையே தமிழ்மொழி சரியாக சென்றடையவில்லை என்கிறார் தமிழ் ஆர்வலர் முத்துசாமி. தமிழின் சிறப்புகளை உணர்ந்த பிற நாடுகள் தமிழை படிக்க காட்டும் ஆர்வத்தை தமிழகத்தில் இன்றைய தலைமுறை காட்டுவதில்லை எனவும், அவர்களிடம் தமிழை பேசவும் எழுதவும் தடுமாற்றமே உள்ளது எனவும் அவர் கூறுகிறார்.

முதியவர் முத்துசாமி மௌனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் அவரை சந்திக்க வருபவர்களிடம் அவரது மனைவி முத்துலட்சுமி போராட்டத்திற்கான



காரணங்களை விளக்கி கூறுகிறார்.

முத்துசாமியின் இளமைக்காலம் முதலே தமிழுக்கான போராட்டங்களிலும், நிகழ்வுகளிலும் அவர் பங்கேற்று வருவதாகவும், மொழிப்போராட்டத்தில் பங்கேற்றது முதல், தமிழ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற மாவட்டங்களில் ஒரு லட்சம் பனை மரங்களை நட்டுள்ளதாகவும் கூறுகிறார்.

இன்றைய தலைமுறையிடம் தமிழில் பேசவும் எழுதவும் தடுமாற்றம் உள்ள நிலையில் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வி இல்லாமையே இதற்கு காரணம் என்கிறார் அவர்.

முத்துசாமியின் முக்கிய கோரிக்கை பற்றி முத்துலட்சுமி மேலும் கூறும்போது ‘‘தமிழ் பேசுவது துவங்கி எழுதுவது வரை வீட்டில் இருந்து பெற்றோர்கள் குழந்தைகளிடம் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும், தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களையும், வரலாற்றுப் பதிவுகள் மற்றும் பண்பாட்டு ஓவியங்களை குழந்தைகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும்’’ என்று சொல்கிறார்.

அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழி ஆகும்வரை யாரிடமும் பேசுவதில்லை என்ற உறுதிமொழியை முத்துசாமி எடுத்துள்ளார். கடந்த மாதம் 24 ஆம் தேதி பனை மரத்தின் முன்பு அவர் உறுதிமொழி எடுத்துக்கொண்டு இந்த பேசா நோன்பை மேற்கொண்டுள்ளார் என அவரது மனைவி கூறினார்.



# ‘நாம் இந்து அல்ல சைவர்கள்’ - தலைநகரில் ஒலித்த குரல்

இலங்கை சைவநெறிக் கழகம் நிகழ்த்திய ’சைவம் போற்றுதும்’ எனும் கலைவிழாவானது கடந்த ஏப்ரல் ஏழாம் திகதி (சனிக்கிழமை) கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் மாலை 3.30 மணி முதல் கோலாகலமாக நடைபெற்றது. அங்கு கவனிப்பதற்கு இரு விடயங்கள் இருந்தன.

முதலாவது, அவ்விழாவில், இலங்கைச் சைவம் யாழ்ப்பாணத்தையும் சாதியத்தையும் முன்னிலைப்படுத்துவது என்ற வாதம் பொய்யாகும் படி, பல காட்சிகள் அரங்கேறின. யாழ்ப்பாணத்துக்கு வெளியே, மலையகம் சார்ந்து கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய மாணவிகளின் கிராமிய நடனமும், கிழக்குக்கரை சார்ந்து திருக்கோவில் விநாயகபுரம் சிவகாமி தமிழ் அருங்கலைக்கூடத்தின் நாட்டுக்கூத்தும் அங்கு மேடையேற்றப்பட்டன என்பது அவற்றில் முக்கியமான சாட்சியம். இன்னொரு சாட்சியம், அங்கு இலங்கைச் சைவச்சான்றோராகப் பிரகடனப்படுத்தப்பட்ட பத்துப்பேரில், மட்டக்களப்பைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ காசிநாத அருணாச்சல தேசிகமணியும், பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரான யாழ்ப்பாணத்துப் பெரியார் கா.சூரன் அவர்களும் உள்ளீர்க்கப்பட்டிருந்தார்கள். (இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட பத்து பேரையும் பற்றி இலங்கையின் ஒவ்வொரு சைவனும் அறிந்திருக்கவேண்டும். அதைப் பிறகொரு முறை விரிவாகப் பார்க்கலாம்.)

இரண்டாவது, இலங்கையில் இந்து என்பதற்கு மாற்றாக

**ஹிந்து என்ற பெயர் இருந்தால் தான் உதவுவோம் என்றால், அதற்குப் பெயர் அக்கறை அல்ல உள்நோக்கம்.**

சைவம் என்ற பதத்துக்கே முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்று ஒலித்த அக்கழகத்தினரின் குரல். இந்தக் குரல் சமீபகாலமாகவே உரத்து ஒலிப்பதாகத் தோன்றுகிறது. எனவே இதை நாம் சற்று ஆழமாக ஆராயவேண்டிய தேவை இருக்கிறது.

இந்து என்று அழைக்கப்படுவது சைவம், வைணவம், சாக்தம் என்று பல்வேறு சமயங்களின் கூட்டமைப்பு. அது அத்துவைதம், துவைதம், சைவ சித்தாந்தம் என்று பல்வேறு மெய்யியல்களின் தொகுதி. இப்படி நூற்றுக்கணக்கான தரப்புகளைக் கொண்ட ’இந்து’ என்ற பன்மைத்துவ மையத்தை எதிர்த்து, அதன் பலநூறு கிளைகளுள் ஒன்றான ’சைவம்’ என்ற ஒரே ஒரு தரப்பை மாத்திரம் முன்வைப்பது அடிப்படைவாதம் ஆகாதா என்பது மிக எளிமையான கேள்வி. இக்கேள்விக்கு நூறு வீதம் திருப்தியாக நம்மால் ’இல்லை’ என்று பதிலளிக்க முடிந்தால், இலங்கையில் இந்து வேண்டாம், சைவம் போதும் என்ற முடிவுக்கு இலகுவாக வந்துவிடலாம்.

அதற்கு முன், இக்கேள்விக்கு ’ஆம்’ என்று பதில் சொல்பவர்கள் என்னென்ன வாதங்களை அடுக்குவார்கள் என்று பார்ப்போம். அவர்களுக்கு வாய்ப்பாக மூன்று வாதங்கள் இருக்கின்றன. இலங்கையில் சிவன் தவிர விஷ்ணு



முதலான ஏனைய தெய்வங்களை வழிபடுவோர் இருக்கிறார்கள் என்பது முதலாவது வாதம். இரண்டாவது, தங்கள் குருதேவரைக் கடவுளாக வழிபடும் இந்து மறுமலர்ச்சி அமைப்புக்களை எப்படி சைவர்களாகக் கருதமுடியும் என்பது. மூன்றாவது, நாட்டார் தெய்வங்கள் சைவத்துக்குள் வரமுடியாது எனும் வாதம்.

ஒவ்வொன்றாகப் பார்ப்போம். வைணவம், சாக்தம் முதலான பிற எந்த இந்துக்கிளை நெறிகளின் தெய்வங்களையும் சைவத்துக்குள் அடக்கமுடியும். பிள்ளையார், முருகன், சக்தி ஆகிய மூவரும் சைவத் தெய்வங்கள் அல்ல என்பவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். சக்தியைப் புகழும் திருமந்திரம், முருகனைப் புகழும் முருகாற்றுப்படை, பிள்ளையாரைப் புகழும் மூத்தநாயனார் இரட்டைமணிமாலை என்பன இல்லாமல் சைவம் இல்லை என்பது, சைவத்திருமுறைகளில் அறிமுகமுள்ள எவருக்கும் தெரியும். திருமாலும் அப்படித்தான். திருமால் வைணவத்துக்கு மட்டுமே உரியவர் அல்ல. இலங்கையில், திருமால், முழுக்க முழுக்க சைவ வரன்முறைக்கு உட்பட்டே வழிபடப்படுகிறார். சிவாகமங்களிலே கூட, திருமாலுக்கு இடம் இருப்பது பலருக்கும் தெரியாது. சந்தேகமிருப்பவர்கள், உங்கள் ஊரிலுள்ள ஒரு கோயிலின் கருவறையின் மேற்குப் பக்கம் எட்டிப் பார்த்து விட்டு வாருங்கள். ஆதிசேடன் மடியில் ஹாயாகப் படுத்திருக்கும் ஆதிமூலம் தெரிகிறாரா?

ஆக, இந்து என்ற மதக்கூட்டமைப்பின் எந்த வழிபடு தெய்வங்களும் சைவத்தால் நிராகரிக்கப்படவில்லை. எனவே இலங்கையில், மேற்படி தெய்வங்களை வழிபடுகின்ற எவனும் சைவனே. மெய்யியல் ரீதியாக இலங்கையில் வீரசைவமும் சித்தாந்த சைவமும் மட்டுமே நிலவி வருகின்றன.

அவை சைவ மெய்யியல்கள் தான். (கடந்த நூற்றாண்டு வரை, அத்வைதமோ ஏனைய இந்து மெய்யியல்களோ இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டன என்பதற்கு போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை) ஆக சைவ அடையாளத்துக்கு வெளியே இருக்கும் ’இந்து’ எவனும் இங்கு இருந்ததில்லை.

இரண்டாவது சிக்கலாக வருவது, கடந்த ஐம்பது அறுபது ஆண்டு காலத்துக்குள் இங்கு வேரூன்றியுள்ள சத்திய சாயி சமிதி, அம்மா பகவான், பிரம்மகுமாரிகள், ஹரே கிருஷ்ணா முதலான இந்து மறுமலர்ச்சி அமைப்புக்கள். ஆனால், இவற்றைப் பின்பற்றுவோர் கூட திருவிழா என்றால், திருநீறு பூசி, உள்ளூர்க் கோயிலுக்குப் போகத் தயங்குவதில்லை. பிரம்மகுமாரிகள் வேறொரு விதத்தில் சிவனைப் பரம்பொருள் என்பதையும், யாழ்ப்பாணத்தில் சீரடி சாயிபாபாவுக்கு அமைக்கப்பட்டுள்ள சிவாலயத்தையும் மரபார்ந்த சைவர்கள் எப்படி எடுத்துக்கொள்கிறார்கள் என்பதற்கு வெளியே, இந்த அமைப்புகளால் கூட சிவனைத் தவிர்த்து இயங்க முடியவில்லை என்பதாகவே அவற்றை நாம்

**வி.துலாஞ்சனன்**

புரிந்துகொள்ளவேண்டும். ஆக, இவர்கள் எல்லோரும் சைவர்கள்தான்.

இறுதியாக, இன்னும் கொஞ்சப்பேர், நாட்டார் தெய்வங்கள் எதுவும் சைவத்துக்குள் வரமுடியாது; நாட்டாரியலின் தனித்துவத்தை சைவம் அழிக்கிறது என்கிறார்கள். மிகத்தவறான புரிதல் அது. இந்தியாவுக்கெல்லாம் போகவேண்டாம். இலங்கையில், நமக்கு நன்கு தெரிந்த காளி, கண்ணகி, மாரி, திரௌபதி, வைரவர், பெரியதம்பிரான், ஐயனார், கடல்நாச்சி, பேச்சி, இந்த நாட்டார் தெய்வங்களில் எந்தத் தெய்வத்தின் கதையோடு சிவன் சம்பந்தப்படவில்லை என்று கூறுங்கள் பார்ப்போம்? ஒருவரைக் காட்டமுடியாது நம்மால்!

புவியியல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் தனித்துப்போயுள்ள சிறு சிறு குழுக்கள் உடைந்து, உலகமே சமத்துவமான ஒரு தனிக்குடும்பமாக மாறுகின்ற முயற்சியைத் தான் இன்று நாம் வளர்ச்சி, அபிவிருத்தி என்று சொல்கிறோம்.



வரலாற்றுக் காலத்திலிருந்தே சைவம் அதைத்தான் செய்கிறது. பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த நந்தனார், அதிபத்தர்,

**இலங்கையில் இந்து என்பதற்கு மாற்றாக சைவம் என்பதற்கே முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்று ஒலித்த குரல்**

திருக்குறிப்புத் தொண்டர் என்போரெல்லாம் நாயன்மாராக மாறியது சைவத்தின் இந்த முயற்சியில்தான். மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் வருகின்ற ’சாதித்தெய்வக் கல்வெட்டு’, ஒரு சமூகத்தின் வெவ்வேறு சாதிகளை, அவற்றின் தெய்வம் சார்ந்து ஒன்றிணைத்து மையப்படுத்தும் தேவை இருந்திருக்கிறது என்பதற்கான சிறந்த ஆதாரம்.

சைவத்தின் இந்த முயற்சியில் நாட்டார் தெய்வங்கள் சிவனின் அவதாரங்களாக, சிவனின் மனைவிகளாக, சிவனின் பிள்ளைகளாக உருமாறுகிறார்கள். ஆனால்,



இந்தக் கலப்பும் ஒன்றிணைவும் பலரும் எண்ணுவது போல யாரோ சிலரால் திட்டமிட்டு வஞ்சகமாக செய்யப்படும் ஒன்றல்ல. சிறுதெய்வங்களின் கோயில்கள் பெருந்தெய்வக் கோயில்களாக மாறுவதன் கீழ் சிலரது ’இலுமினாட்டித்தனம்’ இருப்பதாகக் கருதி அதை ’சமஸ்கிருதமயமாக்கம்’ என்று அழைத்த நாட்டாரியல் ஆய்வாளர்கள் கூட, அது இயல்பாக நிகழ்வதை உணர்ந்து, அந்தக் கலைச்சொல்லை இன்று ’மேல்நிலையாக்கம்’ என்றே ஆள்கிறார்கள்.

நம் மத்தியிலேயே ஒரு உதாரணம் இருக்கிறது. சில நரசிங்க வைரவர் கோயில்கள் கும்பாபிஷேகம் நடந்து இப்போது நரசிங்கர் கோயில்களாக மாறியிருப்பது. உண்மையில் நரசிங்க வைரவர், நரசிங்கரை அழித்த சிவமூர்த்தம். திட்டமிட்டு வியூகம் வகுப்பதாக நம்பப்படும் சமஸ்கிருதமயவாதிகள் உண்மையிலேயே இருந்திருந்தால், அழித்தவரின் கோயிலை அழிக்கப்பட்டவரின் கோயிலாக மாற்ற அனுமதித்திருப்பார்களா?

ஆக, இந்து மதக்கூட்டமைப்பில் இன்னொரு பெருங்கிளையான வைணவத்தையே சைவம் தனக்குள் அனுமதித்திருக்கும் போது, தனக்கெனத் தனித்துவத்தைக் கொண்டிருக்கும் ஈழத்துச் சைவத்தை, இந்து என்று வேறொரு பெயர் கொண்டழைப்பது தவறு என்ற முடிவுக்கே நாமும் வரமுடியும்.

இறுதியாக இதை எதிர்க்கக்கூடியது ஒரே ஒரு தரப்பு மட்டுமே. இந்திய இந்துத்துவ அரசியலின் அழுத்தத்தால், இலங்கைச் சைவத்தையும் இந்துத்துவமாகவே மாற்ற முயலும், பலம் வாய்ந்த நான்காவது தரப்பு அது. உண்மையிலேயே அவர்களுக்கு இலங்கையில் இந்தியப் பண்பாடு செழித்தோங்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தால், ’வேற்றுக்குறிப்புப் பாராமல்’ உள்ளூர்ச் சைவத்தையே வளர்க்கவேண்டும். இல்லை, ஹிந்து என்ற பெயர் இருந்தால் தான் உதவுவோம் என்றால், அதற்குப் பெயர் அக்கறை அல்ல உள்நோக்கம். அது இங்கு கனவிலும் நிறைவேறப் போவதில்லை. ஏனென்றால், இந்த நாடு ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சிவபூமி!

# ‘‘தண்ணீர்ச் சோறு நாகரிகமற்றதாகி, பிறியாணி பிரியமானது எப்போது?’’

## ஒரு படுவான்கரையானின் மனது

### படுவான்கரை மக்களின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தியது யார்?





‘‘மதியவேளை, வெப்பமும் அதிகமாகவுள்ளது. மரத்தின் நிழலின் கீழ் சைக்கிளை வைத்துவிட்டு சிறிது தூரம் நடந்து செல்கையில் படுவான்கரைக்கே உரித்தான இயற்கை அழகும், அத்தான், மாமா, பெரியப்பா, மாமி என பல உறவுகளை கூறி அழைக்கின்ற சத்தமும் ஒருபுறமாக ஒலித்துக்கொண்டிருக்கின்றது. வீடு அமைந்துள்ள காணியினைச் சுற்றி முள்வேலி, வளவிற்குள் செல்வதற்கென அமைக்கப்பட்டுள்ள கடப்பின் (கதவு) முன்புறம் இரு வாழைகள் குலைகளுடன் நிற்க, நல்வரவு என்ற பதாதையும் காட்சிபடுத்தப்பட்டிருந்தது. நானும் நடந்து கொண்டு செல்கையிலே என்னை நோக்கியும் பல உறவுச்சொற்கள் கூறப்படுகின்றன. அவ்வுறவுகளுடன் பேசிச், சிரித்து நிற்கின்றவேளை, உள்ளே வாருங்கள், வாருங்கள் என்ற அழைப்பும் உரத்துக்கேட்கின்றது. அன்பும் மேலோங்குகின்றது.

உள்ளே நுழைவதற்கு முன் பன்னீர் தெளித்து, திருநீறு, சந்தனம் சாத்தி மகிழ்ச்சியை கொடுத்து நிற்கின்றது ‘‘ என்று கதிர்காமத்தம்பி என்னிடம் ஒருநாள் மாலைப்பொழுது, படுவான்கரையின் மாற்றம் தொடர்பில் பேசிக்கொண்டிருக்கின்ற போது கூறினார்.

படுவான்கரைக்கான பண்பாடுகளையும், பாரம்பரியங்களையும் அழித்துவிடக்கூடாது என்பதில் மிகவும் அக்கறையுடன்

**படுவான் பாலகன்**

செயற்படுபவர் கதிர்காமத்தம்பி. ஆனாலும் என்னவோ பண்பாடுகளிலும், பாரம்பரியங்களிலும் மாற்றங்கள் ஏற்படத்தான் செய்கின்றன. அவ்வாறு பண்பாடுகளிலும் பாரம்பரியங்களிலும் மாற்றங்களை செய்ய வேண்டாம் என பேசினால் எம்மை விரோதியாய் பார்க்கின்றனர். வந்தோரை வாவென்றழைத்து, வயிறாற உணவளித்து அனுப்புகின்ற பண்பாடு படுவான்கரையிலே இன்றும் வேரூன்றி இருக்கின்றது. பலருக்கு உணவு கொடுத்த மண் படுவான்கரையென்றால்

## வெள்ளைச் சோறும் இலைச் சுண்டலும் கேட்டவாய்க்கு பிறியாணி எப்படி ருசிதரும்?

கூரையில் நிறைகுடங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதனைப் பார்க்கும் போதும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. படுவான்கரையில் உள்ள மக்களது வீடுகளில், திருமணம், பூப்புனித மஞ்சள் நீராட்டு போன்ற மங்கலகரமான நிகழ்வுகள் நடைபெற்றாலோ, மரணச்சம்பங்கள் இடம்பெற்றாலோ இங்குள்ள குடி வழமைக்கேற்ப வீட்டுக்கூரையில் நிறைகுடங்கள் வைப்பது பாரம்பரியமானது. அந்த பாரம்பரியம் அங்கு பேணப்பட்டிருந்தமை



ஆட்டு இறைச்சியை குழம்பாக சமைத்திருப்பார்கள். அத்தோடு தயிரும் வைத்திருப்பார்கள். அத்தனையும் சாப்பிட்டால் அன்று பூராகவே உணவு தேவையிருக்காது. சமைக்கும் விதமும் சிறப்பாக இருப்பதுடன் ருசியாகவும் இருக்கும்.’’ என்கிறார் கதிர்காமத்தம்பி.

கதிர்காமத்தம்பியும் அவ்வாறான உணவுதான்

## வீட்டு விளைச்சலை வைத்து சமைத்துச் சாப்பிடுவதே ஒரு சுகந்தான்

நிற்கின்றனர் படுவான்கரையின் எதிர்கால தாய்குலங்கள். அவர்களின் வரவேற்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தி நிற்கின்றது. அழகாக அலங்கரிக்கப்பட்ட கொட்டில் அதன் கீழே அமருவதற்கென கதிரைகள். கதிரையில் அமருமாறு ஒருவர்



பின் ஒருவராக பலர் கூறுகின்றனர். எல்லோரின் அன்பையும் ஏற்று அமர்ந்து கொண்டேன். எல்லோரும் என்னைப் பார்த்து முகமலர்ச்சி கொள்கின்றனர். சுகபலன்களை கேட்கின்றனர். மிக்க

மாற்றுக்கருத்து இருக்காது. மட்டக்களப்பின் நெற் களஞ்சியம் அது. இது இவ்வாறு இருக்க, கதிர்காமத்தம்பி தொடர்ந்தும் என்ன கூறினார் என்பதனை கூறுகின்றேன்.

படுவான்கரைப்பகுதியில் நடைபெற்ற பூப்புனித மஞ்சள் நீராட்டு மகிழ்ச்சி கொண்டாட்டத்திற்கு கதிர்காமத்தம்பி சென்றிருக்கின்றார். அங்கு நடைபெற்றவைதான் மேற்சொன்னவை. அவர் மேலும் கூறியவையை கூறுகின்றேன்.

‘‘கதிரையில் அமர்ந்து கொண்ட பின் எல்லோரையும் சுற்றிப்பார்த்தேன், மகிழ்ச்சியுடன், உறவு சொல்லி அழைத்துக்கொண்டு இருந்தனர். பிள்ளைகளும் விளையாடிக் கொண்டிருந்தனர். கதிரையில் இருந்தவர்களின் கைகளும் கழுவப்பட்டன. சிலர் சாப்பிட்டும் கொண்டும் இருந்தனர். எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருக்கையில் வீட்டின்

மகிழ்ச்சியை கொடுத்து நிற்க, கையை கழுவுங்கோ என்று கூறியபடி ஒரு கையில் வாளியுடனும், மறுகையில் தண்ணீர்ர் பாத்திரத்துடனும் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். கைகளை வாளிக்குள் வைத்து பிடிக்க நீரை ஊற்ற கைகளை கசக்கி கழுவிக்கொண்டிருந்தேன். படுவான்கரையில் நிகழ்வென்றால் கட்டாயம் கலந்து கொள்வேன். இங்குள்ள மக்களின் வரவேற்பும், வழங்குகின்ற உணவும் என்றுமே மறக்கமுடியாததாக இருக்கும்.

அவர்கள் வயல்களிலே விதைத்து அறுவடை செய்த நெல்லின் மூலம் பெறப்பட்ட அரிசியை சோறாக சமைத்து இருப்பார்கள். கறிக்கு அவர்களது வீட்டிலே அல்லது வயல்களிலே, சூழலிலே காணப்படுகின்ற இலைகளில் ஒன்றை சுண்டலாக சுண்டி வைத்திருப்பார்கள். அச்சுண்டல் மட்டுமே போதும். வயிறு நிறைவாகிவிடும். அதேபோன்று கிழங்கு அல்லது ஏதாவது இலைகளை இட்டு சொதியும், குளத்திலே அல்லது ஆற்றிலே பிடிக்கப்பட்ட மீன் அல்லது கோழி அல்லது

இருக்கும் என்ற ஆசையில் கைகளை கழுவி விட்டு நிமிர்ந்து அமர, அவருக்கு பிறியாணி சாப்பாடு பரிமாறப்பட்டதாக கூறினார். சற்றுமே எதிர்பாராத நிலையில் பிறியாணி வழங்கப்பட்டமை அவவது எதிர்பார்ப்பை மிகவும் சீர்குலைத்து நின்றதாக கூறினார். தனது கைகளிலே உணவை வைத்துக்கொண்டு, உணவு வழங்கியவரை அழைத்து வெள்ளைச் சோறு, சுண்டல் இல்லையா? என்று கேட்க, ‘‘இல்லை’’ என்ற பதில்தான் வந்திருக்கிறது. சாப்பிடவேண்டும் என்பதற்காக ஏதோ சாப்பிட்டுவிட்டு எழுந்ததாக கூறினார்

தமிழர்களது பாரம்பரிய உணவுகளை, வெள்ளைநாட்டார் விரும்பி நிற்கும் அதேவேளை தண்ணீர்சோற்றின் அவசியம் கூறித்தும் மேலைநாட்டார் கூறி நிற்கின்ற நிலையில் காலையில் தண்ணீச்சோறு சாப்பிட்டேன் என்று கூறுவதற்கும், அவற்றிலிருந்து விடுபடுகின்ற சமூகமாக இருப்பதும் எமது உடல் நலனுக்கே கேடாகும்.

அதேபோலதான் செலவின்றி பெறக்கூடிய சத்துள்ள உணவுகள் இருக்கின்ற போதும் நாகரீகம் என்ற போர்வையில் பிறியாணி சமைத்து வாழ்நாளை குறைத்துக்கொள்ளுகின்றோம். எமது மூதாதையர் கொடுத்த பண்பாடுகளும், பாரம்பரியங்களும் நமது இருப்புக்கும் அவசியமானவை. அவற்றினை பேணுகின்றபோதே இருப்பும் நிலைக்கும்.



# மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்

## சொந்த மச்சான் – மச்சாளின் காதல் ஏக்கம்

பிறப்பிலேயே மச்சான்-மச்சாள் உறவுமுறை அமைந்துவிட்ட இருவருக்கிடையிலான காதல் சம்பந்தமான பாடல்கள் சிலவற்றின் தொகுப்பை இங்கு காணலாம்.

அவன் முறை மச்சான். தன் சொந்த மச்சாளைக் காதலிக்கிறான். அவளும் அவனில் உயிரையே வைத்திருக்கின்றாள். சிறு வயதிலே இருவரும் சேர்ந்து விளையாடியதுண்டு; என்றாலும் அவள் பருவ வயதை அடைந்தபின்னர் ஒருவரையொருவர் பார்த்துக் கதைப்பதற்கே பெரும் பாடாகவிருக்கிறது. அத்துடன் அவர்களிருவரதும் குடும்பங்களுக்குகிடையே சிறு மனத்தாங்கல். இருவரும் சந்திப்பதற்கு இப்போதிருக்கும் பிரச்சினையே அதுதான்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் தண்ணீர் அள்ளிவருவதற்கு வழமைக்கு மாறாக அவள் தனியே செல்லும்போது அவன் கண்டுவிடுகின்றான். சிறிது தூரம் அவள் பின்னால் சென்று அவள் நடையை இரசிக்கிறான்.

அன்ன நடைதானோ
இது அவள் நடைதானோ
என்ன நடையென்று
எடுத்தியம்பக் கூடுதில்லை

அவளின் கவனத்தை ஈர்ப்பதற்காக இப்படிப் பாடுகிறான்.

காவல் பரணில நான்
கண்ணுறங்கும் வேளையில
கண்ணான மச்சி வந்து
காலூண்டக் கண்டேனே.

மச்சானின் குரல்போல் கேட்கிறதே என்று திரும்பிப் பார்த்த அவள் அவனைக் கண்டதும் ஒரு புன்சிரிப்பை உதிர்த்துவிட்டுத் தொடர்ந்து நடக்கிறாள். அவனும் தொடர்கின்றான்.

சீப்பெடுத்துச் சிக்கிழுத்து
சிமிழ் திறந்து மாப்போட்டு
மடிப்புடுத்துப்போற பெண்ணே - உன்ன,
மதிக்க மனம் கொள்ளுதில்லை.

சிறுவயதில் வாடி, போடி என்று கதைத்தவன் இப்போது பெண்ணே என்று அழைக்கிறான். மதிக்க மனம் கொள்ளுதில்லை என்பது, உன்னை என் மச்சாள் என்று எண்ணும்போது, என்மனம் நிலைகொள்ளாமல் தவிக்கிறது என்ற கருத்தில் சொல்லப்பட்டுள்ளது. தன்



மனநிலையைப் பற்றி மேலும் சொல்கிறான்.

தண்ணிக் குடமெடுத்துத்
தனிவழியே போறபெண்ணே
தண்ணிக்குடத்தினுள்ளே
தளம்புதடி என்மனது.
அது மட்டுமா?
குஞ்சி முகமும் உன்ர
கூர்விழுந்த மூக்கழகும்
நெற்றி இளம்பிறையும் என்ர
நித்திரையில் தோணுதுகா.

நாணத்தால் முகம் சிவந்து, அச்சத்தால் எதுவும் பேசாமல் அவள் நடக்கிறாள். என் முறை மச்சாளான நீ என்னைவிட்டு வேறு யாருக்கும் உன்னைக் கொடுத்துவிட எண்ணிவிடாதே என்று விநயமாகக் கேட்கிறான்.

தாலிக் கொடியே என்ர
தாய்மாமன் ஈன்ற கண்டே
மாமிக் கொருமகளே மச்சி
மறுகுதலை பண்ணாதகா.

இதைக் கேட்டதும் அவளுக்கு நெஞ்சிலே நெருஞ்சி முள் குத்தியதுபோல இருக்கிறது. திரும்பி ஓரக்கண்ணால் கோபமாக அவன்மேல் ஒரு பார்வையை வீசிவிட்டு, அவள் தொடர்ந்து நடக்கிறாள். அந்தப் பார்வையின் அர்த்தம் அவனுக்குப் புரிந்தும் புரியாமல் இருக்கிறது. சற்றுத் தெளிவாக அறிந்துகொண்டால் மனதுக்குத் திருப்தியாக இருக்குமே என்று சற்று உரிமையோடு பாடுகிறான்.

சட்டபோட்டுப் பொட்டுவச்சித்
தண்ணி கொண்டு போறமச்சி
உன்ர சட்டபோட்ட கையால கொஞ்சம்
தண்ணிதந்தால் ஆகாதோ.

’கிளுக்’ என்று அவளுக்குச் சிரிப்பு வந்துவிடுகிறது. பாவம் மச்சான். இனியும் பேசாமல் விட்டால் தாங்கமாட்டார் என்று, பதில் சொல்கிறாள் இப்படி -

வாய்க்கால் தண்ணியில
வண்டு விழும் தும்பி விழும்
வீட்டுக்கு வாங்க மச்சான்
வெந்த தண்ணி நான்தாறேன்

அப்பாடா! மச்சாள் வாய்திறந்து விட்டாள். அவனுக்குத் தென்பு வந்துவிட்டது, தெளிவும் பிறந்துவிட்டது. சற்று நெருக்கமாக வந்து, உருக்கமாகச் சொல்கிறான்.

சுற்றிவர வேலி
சுழலவர முள்வேலி
எங்குமே வேலியெண்டா
எதால புள்ள நான்வரட்டும்?.

களவெடுக்கச் செல்பவர்கள் காவலைப் பற்றி நினைக்கலாமோ? நான் உங்களுக்கு வேண்டுமென்றால் வேலியொரு பொருட்டா? வேலியிலுள்ள முள் ஒரு பொருட்டா? கேட்கிறாள்-

காவலரணோ மச்சான்
கள்ளனுக்கு முள்ளரணோ
வேலியரணோ மச்சான்
வேணுமென்ற கள்ளனுக்கு

கேட்டதோடு மட்டும் விட்டாளா? வழியும் சொல்கிறாள்.

வெத்திலையைக் கைப்பிடித்து
வெறும்புளகை வாயிலிட்டு
சுண்ணாம்பு இல்லையெண்டு
சுத்திவந்தால் கண்டிடலாம்.

தன் மனநிலையை அவன் இப்படிச் சொல்கிறான்.

வாழைப்பழமே என்ர
வலது கையில் சர்க்கரையே
உள்ளங்கைத் தேனே நான்,
உருகிறண்டி உன்னாலே.

அவளது முகம் வாட்டமுறுகிறது. கவலை அவளது கண்களில் கசிகிறது. அதைக் கண்டு அவன் கேட்கிறான்.

சீனத்துச் செப்பே என்ர,
சிங்காரப் பூ நிலவே
வானத்தைப் பார்த்து மச்சிஇ
வாடுவது என்னத்துக்கோ ?

**-- சட்டத்தரணி, பாடும் மீன், சு.ஸ்ரீகந்தராசா --**

உடனே அவள் ஒரு பெருமூச்சோடு;

ஒண்டாய் இருந்தோம்
ஒருகல்லையிலே சோறுதின்றோம்
ஆகாத காலம்வந்து - இப்ப,
ஆளுக்கொரு திக்கிலயாம்

எப்படியும் தாங்கள் ஒன்று சேரவேண்டும் என்ற எண்ணம் இருவருக்குமே உண்டு. சேர வேண்டுமே என்ற ஆசையும், அது முடியாமல் போய்விடுமோ என்ற கவலையும் தன்னை விட அவளுக்கு அதிகமாகவே இருக்கிறது என்பதால் அவன் மேலும் வருந்துகிறான். அவனுக்கு வைராக்கியம் பிறக்கிறது. அதனால் அவன்,

காட்டுக்கிளியே- என்
கதைபழகும் நங்கணமே
கூண்டுக்கிளியே- நீ
சொல்மதனி சம்மதத்தை

என்று சம்மதம் கேட்கிறான். நீ மட்டும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால்,

கூண்டுக் கிளியாளே
கோலஞ்செய் மச்சாளே
ஆசைக் கிளியே
அடுத்த நிலாவில் நம்கல்யாணம்

அவளுக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. சம்மதம் என்று உடனேயே பதில் சொல்லிவிட அவளால் முடியுமா? துக்கம் தொண்டையை அடைக்கிறது. கண்கள் குளமாக அப்படியே அவனது மார்பில் சாய்ந்துவிடுகிறாள். அவளை அணைத்தபடியே, அவளின் தலையைத் தடவிக்கொண்டு, மெல்லிய குரலில் அவள் காதுக்குள் சொல்கிறான்,

உன்னை மணந்து
உயர்ந்த கட்டில் மேல வைத்து
கன்னந் திருப்பிக் கதைக்க
வெகு நாட்களில்லை

அவனது நெஞ்சிலே முகத்தைப் புதைத்துக்கொண்டு நிற்கும் அவளின் அழகிய கருங்கூந்தலில் வீசுகின்ற மணம் அவனுக்கு இன்ப மயக்கத்தைத் தருகிறது. கேட்கிறான் குழைந்துகொண்டே-



சந்து சவ்வாதோ
சரியான பன்னீரோ
குங்குமப் பூவோ உன்
கூந்தலிலே வீசுவது

இருவரும் இவ்வாறு ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு, சோகத்தையும் இந்த உலகத்தையும் மறந்திருக்கும் வேளையிலே, அந்தப் பூவலடிக்கு தண்ணீர் எடுக்க வந்த ஒரு பாட்டி இவர்களைக் கண்டு இப்படிப் பாடுகிறாள்.

பூவலக் கிண்டிப்
புதுக்குடத்தக் கிட்டவைச்சு
ஆரம் விழுந்த கிளி
அள்ளுதுகா நல்ல தண்ணி

திடுக்கிட்டுப் பிரிந்தனர் இருவரும். நீர் அள்ளுவதையும் மறந்து குடத்தை எடுத்துக்கொண்டு ஓடுகிறாள் அவள்.

## தீங்கு ஏற்படுத்தும் இரசாயனம் பூசப்பட்ட 134 வாழைக்குலைகள் மீட்பு



மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்திலுள்ள சித்திரைப் புத்தாண்டு விஷேட சந்தைகளில் விற்பனை செய்வதற்காக கொண்டுவரப்பட்ட, உடல் ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயன பதார்த்தம் பூசப்பட்ட பெரும் தொகையான வாழைப் பழங்களை புதன்கிழமை பகல் (11) சுகாதாரத் திணைக்களத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

மட்டக்களப்பு × சித்தாண்டி சந்தைக்கு அருகில் வாழைப்பழங்களுக்கு இரசாயண பதார்த்தம் பூசப்படுவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றினையடுத்து, அங்கு சென்ற செங்கலடி பிரதேச சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான செல்வராஜா தவேந்திரராஜா மற்றும் சிவசேகரம் சிவகாந்தன் ஆகியோர் அங்கு இரசாயனம் பூசப்பட்ட நிலையில் இருந்த 134 வாழைக்குலைகளை கைப்பற்றயுள்ளனர்.

வாழைக் காய்களை பழுக்கச் செய்வதற்காக ஆர்.ஜி.எதபோன் (RG Ethepon) என்ற இரசாயணப் பதர்த்தம் வாழைச் குலைகளில் நேரடியாக பூசப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரசாயன பதார்த்தம் காய்களைப் விரைவாகப் பழுக்கச் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டாலும் வாழைக் காய்களில் நேரடியாக பூசிப் பயன்படுத்தப்படுவதில்லை. இதைத் தோலில் பூசுவதனால் மனித ஆரோக்கியத்துக்கு கேடு ஏற்படும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.




# சுற்றும் பூமி வேகத்தை மாற்றும் வரை ஆடுங்கள் மக்காள்

நீங்கள் இப்போது மணிக்கு ஆயிரம் மைல் வேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறீர்கள். எந்தவிதமான முயற்சியும் எடுக்காமலேயே அந்த வேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறீர்கள்.

## சக்தி = பொருட்திணிவு X ஆர்முடுகல்

ஆம், உலகம் உங்களை அந்த வேகத்தில் சுமந்துகொண்டு சுற்றுகிறது. அப்படியானால் ஏன் நீங்கள் அதனை உணரவில்லை?

ஒரு ரங்கராட்டினத்தில் ஏறி, அது மிகவும் சாதாரண வேகத்தில் சுற்றினாலே உங்களுக்கு வயிற்றை கலக்கத் தொடங்கிவிடும். ஆனால், ஏன் நீங்கள் இந்த பயங்கர வேகத்தில் உலகம் உங்களை சுமந்து சுற்றும் போது உங்களுக்கு எதுவுமே தெரியவில்லை.

ஒரு ரயிலில் நீங்கள் வேகமாக பயணிக்கும் போது நீங்கள் அதனை ஏன் உணருவதில்லையோ, அதே காரணத்தால்தான் நீங்கள், உலகம் சுற்றும் போதும் அதனை உணருவதில்லை.
ஒரு ரயில் நிலையத்தில் நின்றுகொண்டு பார்க்கும் ஒருவருக்கு நீங்கள் ரயிலில் வேகமாக செல்லும் போது, வேகமாக நீங்கள் நகர்வது புரியும். ஆனால் ரயிலின் உள்ளே இருக்கும் உங்களுக்கு அது புரியாது.

இந்த உண்மையே உலகம் சுற்றுவதற்கும் பொருந்தும் ஆனால் அது பெருமெடுப்பில் நடக்கிறது.




ரயிலில் போகும் போது உங்களால் நீங்கள் வேகமாக நகருவதை உணரமுடியாது. ரயிலின் உள்ளே இருக்கும் சூழல், வளி உட்பட அனைத்தும் உங்கள் வேகத்திலேயே நகர்கின்றன. ஆனால், ரயிலுக்கு வெளியே இருந்து வரும் காற்று உங்கள் முகத்தில் அடிக்கும்போதுதான் நீங்கள் அவ்வளவு வேகமாக நகர்வதை உணர்வீர்கள்.



ஆனாலும் உலகத்துக்கும் ரயிலுக்கும்



ஒரு வித்தியாசம் இருக்கிறது. அது ரயில் சில நேரங்களில் தனது வேகத்தை கூட்டும் அல்லது குறைக்கும். புவியை பொறுத்தவரை அப்படி செய்யாது (இப்படி வேண்டுமானால் சொல்லலாம் இதுவரை அது வேகத்தை மாற்றியதில்லை. இனி எப்போதாவது அது வேகத்தை திடீரென குறைத்து அல்லது கூட்டி அதனால் நீங்கள் எல்லாம் உருண்டு பிரண்டால் என்னை கேட்கக்கூடாது.)

போது எந்தவிதமான சக்தியும் உங்கள் உடலை தாக்காது.

ஆனால், ரயில் வேகத்தை குறைத்தால் அல்லது கூட்டினால், அங்கு ஆர்முடுகல் அல்லது ஒரு அமர்முடுகல் உருவாகும், அப்படியான சூழ்நிலையில் உங்கள் உடலில் ஒரு சக்தி தாக்கும், அதன் மூலம் ரயில் ஓடும் வேகத்தின் தாக்கத்தை நீங்கள் உணர்வீர்கள்.

ஆகவே வேகத்தை கூட்டும் போது அல்லது குறைக்கும்போதுதான் நீங்கள் ரயிலின் வேகத்தை அல்லது அது நகருவதை உணரமுடியும். அது எப்படி? அதுதான் விஞ்ஞானம். அதாவது சக்தி = பொருட்திணிவு **X** ஆர்முடுகல் என்ற சமன்பாடு இங்குதான் பொருந்துகிறது.

உங்கள் உடல்தான் இங்கு

பொருட்திணிவு. ஆகவே ஆர்முடுகல் (வேகம் குறையவோ அல்லது கூடவோ இல்லாவிட்டால்) பூச்சியமாக இருக்கும்



இங்கு நமது உலகம் எம்மை தூக்கிக்கொண்டு சுற்றும் போதும் இதுதான் நடக்கிறது. அது மணிக்கு ஆயிரம் மைல் என்ற அதீத வேகத்தில் சுற்றினாலும், அது வேகத்தை கூட்டுவதோ அல்லது குறைப்பதோ கிடையாது. ஆகவே அதனால் பூமி வேகமாக சுற்றுவதனால் ஏற்படும் எந்தவிதமான தாக்கமும் எம்மீது தாக்குவதில்லை. ரயிலில் உள்ளே இருக்கும் சூழல், அதிலிருக்கும் வளி ஆகியனவும் அதே வேகத்தில் வேகமாக நகர்வது போல எமது புவிச் சூழலும் எம்மோடு அதே வேகத்தில் சுற்றுவதால் எம்மால் எதனையும் அறிய முடியவில்லை.

பூமி அதன் வேகத்தில், அதனை மாற்றாது சுற்றும் வரை நாம் என்ன ஆட்டமும் போடலாம்.
அது கொஞ்சம் கூட்டிக் குறைத்தால்தான் நமது வண்டவாளம் எல்லாம் தண்டவாளத்தில் ஏறும்.
அதுவரை ஆடுங்கள் மக்காள். ஆடுங்கள்...

















# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 08

ஆயிரத்து தொள்ளாயிரத்துதொண்ணூற்று ஒன்று ஆனிமாதம் இருபத்து மூன்றாம் திகதிஎண்டு ஞாபகம். விடுதலைப்புலிகள் அமைப்பு காடுகளைவிட்டுட்டு வெளியால வந்து ரெண்டொரு மாச மிருக்கும். பெட்டையள் அமைப்பு தனிய ஊருக்கை வந்தது. பின்ன பட்டிக்காட்டான் முட்டாய்க்கடையப் பாத்ததுபோல சனம் வாயப்பிளக்குது. சனம் ஒருத்தருக்கொருதர் 'நீ கண்டனியோ நீ கண்டனியோ எண்டு விசாரிக்கிற அளவுக்கு எங்கட நகருக்கு ஒரு நாலு பெட்டையள் வந்து வரிக்கழிசானும் சேட்டுமா துவக்கும் கொழுவிக்கொண்டு பப்பரிக்கம் போட்டுக்கொண்டு திரியிறாளவை.

யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டரில் ஒரு மகளிர் மாநாடு நடத்தவாம் எண்டு ரெண்டு பெட்டையள் வந்து என்னையக் கேட்டினம். எனக்கா பயம் ஒருபக்கம். ஏனண்டா அப்ப நான்தான் ஊருக்கை மாதர்சங்கத்தலைவி. மாட்டனெண்டும்

குளிப்புமுழுக்கும் அந்த மாதிரிதான். இனி தங்கிடத்திலதானுங்கோ கொஞ்சம் ஸ்ராண்டட் பாத்தவைபோல தெரியுது. சொல்லிவைச்ச மாதிரி எடுப்புச்சாய்ப்பா ஸ்ரைலா வந்தவை ஒண்டா போயிற்றினம். இயக்கத்தோட ஏற்கெனவே சோஸா இருந்தவை அவைக்கும் பின்னால திரியினம்.

2 எனக்கா அங்கை இருந்தவை வந்தவை ஆரையும் தெரியாது. இதுக்கு முன்னம் இப்பிடியொரு இடத்துக்கும் போனதில்ல. எல்லாப் பொண்டுகளுக்கையும் நான்தான் படியாதவள் மாதிரியும, கட்டுச் செட்டான உடுப்பில்லாதவள் மாதிரியும் கிடக்கு. நான் கொண்டு போன பை கூட ஒரு பள்ளிக்கூடப்பைதான். எனக்கா வெக்கமாக்கிடக்கு. அண்டாடம் வெயில்லயும் மழையிலயும் கிடந்து தோட்டமும் வயலுமா பாடு படுறதில என்ர தேகமே வறண்டுபோய்க்கிடந்துது.

கறுப்பெண்டா உள்ள வெயிலெல்லாம் கிடந்தலைஞ்சு இருண்ட கறுப்புத்தான்.

### பெட்டையளின்ர ரீம் இறங்கினா தூள்தான் எண்டு பரவலா கதை அடிபட்டது

சொல்ல ஏலாது ஓமெண்டுபோட்டன். அப்ப மாத்தையாதான் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி எண்ட அரசியல் கட்சி க்குத் தலைவரா இருந்தவர். அதுவரைக்கும் புலியளப்பற்றி அரசல்புரசலா கேள்விப்பட்டதெல்லாம் வீர சாகசங்கள்தான். அதிலயும் பெட்டையளின்ர ரீம் இறங்கினா தூள்தான் எண்டு பரவலா கதை அடிபட்டது.

முதல்நாளே என்னையும் இனி மற்றமற்ற பிரதேசங்களால வந்தவையையும் கொண்டுபோய் நல்லுரடியில ஒரு வீட்டில ரிமாண்ட் பண்ணிற்றினம். அதாவது நாங்கள் வெளியால போக ஏலாது. ஆரும் உள்ளுக்க வர ஏலாது. அவையளே வாகனத்தில ஏத்திக் கொண்டே மாநாடு நடக்கிற இடத்தில விடுவினம். பிறகும் ஏத்திக்கொணந்து இந்த மாளிகைக்க இறக்குவினம். நாலு அஞ்சுபேர் கூட்டா விரும்பினபடி அறையளுக்க தங்கலாம்.

சும்மா சொல்லக்கூடாது சாப்பாடு கீப்பாடு பானவகையள் எல்லாம் பரம திருப்தி;

எந்தக் கூட்டத்தோட நான் சேருறது.... என்னைக் கூட்டிக்கொணந்ததுகளையும் காணயில்ல கண்டாப்போலயென்ன அதுகளும் முந்தநாள் கண்ட பழக்கம்தானே.

அள்ளவளப்பா கதைக்கப் போகுதுகளே. நான் முழிசிக் கொண்டு நிக்க ஒரு குண்டுப் பெட்டை கட்டைச்சட்டை போட்டிருந்தது. என்னட்ட வந்துது.

'இதில நிக்கிறென்ன? எடம் பாக்கலையா?' என்றாள். நான் கூச்சத்தோட, 'இல்லை...எங்க போறண்டுதான்'

'அட வாங்க நம்மட்ட எடமிரிக்கு' எண்டவள் நான் கேக்காமலே என்ர பையை எடுத்துக் கொண்டு நடந்தாள். அந்த அறைக்குள்ள இன்னும் அஞ்சுபேர் இருந்தினம். ரெண்டு பேர் புங்குடுதீவு. மற்றவை மட்டக்களப்பு - அம்பாறை. நான் வவுனியா எண்டன். ஒருபிள்ளை சாப்பிட்டுக்கொண்டிருந்த காரப்பொடிய எனக்கு நீட்டிச்சுது.

'எடுங்க நான் அம்பாறை செசிலியா'

என்றாள். நான் வெட்கத்துடன் 'இல்ல பரவாயில்ல' எண்டாலும் விடாம, என்ர கையப்பிடிச்சு அதில கொஞ்சத்தை கொட்டினாள்.

ஒரு பிள்ளை போய் எல்லார்ட சாப்பாட்டயும் கொண்டு வந்தா பார்சலுகள்தான் ஒனக்கென்ன கறி காட்டு காட்டு எண்டு கிழறிப்பாக்கிறதும் மீன்

### புலியள் ஊருக்குள்ள வந்த நேரம் - சனம் வாயப்பிளக்குது

பொரியலை கடிச்சுக் குடுக்கிறதும், எனக்கொரு விசித்திர உலகத்துக்க வந்து விழுந்த மாதிரிக்கிடக்கு நாங்கள் எங்கட வீட்டில சகோதரங்களே தின்னிற சோத்துக்க கைவைச்ச தின்னமாட்டம் நே...எண்டு பிலாக்கணம் வைப்பம். இதுகள் என்னடாண்டா.... எனக்குப்பிடிச்சிருக்கு..நல்ல இடங்கிடைச்சிருக்கு.

பொழுது படவும் எங்கள்
எட்டுப்பேருக்கும் பொழுது
போகோணுமே...

3 சிசலியாதான் அறிவிச்சாள், 'பட்டிமண்டபம்.ஆனா பேசக்கூடாது' நான் திகைச்சுப்போனன் 'பேசாம என்னண்டு பட்டிமண்டபம்,'

'பாட்டு அல்லது கவிதை'

எனக்குள்ள ஒரு குறுகுறுப்பு. என்னால முடியும் ஆனா நான் பேசயில்லை. ஆரார் சேருகினமெண்டு பாத்தன்.

'சிசிலியா, குமுதா, புவனேஸ்வரி, வசந்தி, கவிதா, வேற வேற வசந்தியும். சரி நடுவருக்கு ஒராள் செற் பண்ணுங்க,' இப்ப நான் வாயத் திறந்தன்

'நடுவருக்கு நான் வாறன்'

எங்கட சத்தங்கேட்டு பொறுப்பாளரே உள்ளுக்க வந்திட்டா. கவிதையில பட்டிமண்டாபம் நடத்தின அந்தப் பிள்ளையளுக்கு பெரிய படிப்பில்ல அதிலயும் குமுதா நாலாம் வேப்புத்தான் படிச்சவளாம் எண்டு பிறகுதான் அறிஞ்சன். அந்த அருமையான பட்டிமண்டபம் ஒரு

**~~ தமிழ்க்கவி ~~--**

ஓலிப்பதிவுமில்லாம காத்தில போனாலும் சிசலியாவின்ர கணீரெண்ட குரல் இப்பவும் என்ர காதில இருக்கு. அவளை கஸ்ரோதான் எடுத்து அனுப்பினதாம் கஸ்ரோவின்ர கந்தோரிலதான் தான் அப்பப் அறிக்கைவேலை செய்ய வந்து போறதாம்

'வீட்டில சரியான கஸ்டம் பத்தாம் வேப்பு படிச்சன் வேலை கெடைக்கணுமே': என்றாள்.

சேலையைக்கட்டி வலதுபக்கமா தாவணி போட எங்களோட நிண்ட கற்பகம் அதை மாத்தி இடது பக்கமா தாவணிபோட காட்டிக் குடுத்தா. வசந்தி கவுண்தான் கட்டைக்கவுண் எண்டா முழங்காலுக்கும் மேல மூண்டங்குலம் உயரந்தான். அவள் பயங்கர ரெக்கியாம் கொழும்புக்கு வேலைக்கு போய் நிக்கிற பெடியளுக்கு தகவல் கொண்டு போறவளாம். அதான் உடுப்பும் சந்தேகமில்லாம இருக்க அப்பிடி போடுறதெண்டாள். இடையில இந்தியன் ஆமியில பிடிபட்டு மரணத்தின்ர வாசலுக்கே போய் வந்தவளாம். மற்ற பிள்ளையள் சொன்னதுதான்.

மாநாடு முடிஞ்சு நாங்கள் வீடுகளுக்குப்போய் ஒரு மாசமில்ல பிரச்சனை துவங்கிட்டுது. மட்டக்களப்பால மாநாட்டுக்கு வநத குமருகள் தப்பினம் பிழைச்சமெண்டு இயக்கத்தோட சேந்திட்டுதுகள். பிறகென்ன ஒருநாள் வசந்தியக்கண்டன்.

'எப்பிடி எங்கட பழைய ஆக்களெல்லாம் சுகமே? குறிப்பா சிசிலியா என்ன செய்யிறா?' ;

'செசிலயாவா...அவளை அப்பவே பெரச்சனைக்க வெட்டிப் போட்டாங்க என்ன தெரியாதா?' எண்டாள் அவள்.

(தொடரும்...)

## கடுகுக் கதை

## காட்சியும் மீட்சியும்

**கார்மேகத்தைப் பார்த்துப் பார்த்துக் கனைத்தக் கொண்டு என்னைப்போல் உன்னால் வேகமாக ஓடமுடியுமா? கேட்டது வெண்மேகம்.**

**''முடியாது, முடியவே முடியாது பூமியிலிருந்து கதிரவன் பெற்றுத்தந்த நீரைச் சுமந்திருப்பவன் நான். அதனால் என்னால் உன்னைப்போல் ஓட முடியாது. கர்ப்பணிப் பெண்ணை ஓட்டப்பந்தயத்துக்கு அழைப்பது போல் இருக்கிறது உன் வேண்டுகோள்'' என்றது கார்மேகம்.**



**''என்னைப்பார் நான் எவ்வளவு வெண்மையாக காட்சியளிக்கின்றேன், விரைவாகவும் ஓடுகின்றேன். பூமியிலிருப்பவர்கள் எல்லோரும் அண்ணார்ந்து என்னை வேடிக்கை பார்க்கின்றார்கள். உன்னை விட எனக்குத்தானே மவுசு'' என்றது வெண்மேகம்.**



**''உன்னால் விரைவாகவும், வேடிக்கையாகவும், புதுப் புதுக் கோணத்தில் காட்சிதரவும் முடியும். ஆனால் நான்தான் அவர்களின் வாழ்வாதாரம்'' என்றது அமைதியாக கார்மேகம். ''எங்கே நிரூபித்துக்காட்டு''; வம்புக்கிழுத்தது வெண்மேகம். ''சரி என்ன நடக்கின்றது என்று ஒழித்திருந்து பார்'' போட்டியை ஏற்றுக்கொண்டது கார்மேகம்.**

**கார்மேகம் பவநிவர கானகத்து மயில்கள் சந்தோசமாக தோகையை விரித்து நடனமாடி வரவேற்றன. சற்று நேரத்தில் சோ....வென தாரை தாரையாய் மழை பெய்தது. நல்ல அடைமழையைக் கொட்டிவிட்டு**

– கலாபூசணம் . அரங்கம்
இரா. தவராசா ஜே.பி –

**நடையைக்கட்டியது வெண்மேகம் ஒழிந்திருந்த தரிப்பிடத்துக்கு.**

**''பார்த்தாயா? நான் வரும்போது ஆட்டத்துடன் வரவேற்பு, இப்போது பயிர் பட்சிகளின் களிப்பு, விவச ாயிகளின் பூரிப்பு இதுதான் எனது செயல்பாடு'' என்றது கார்மேகம்.**

**வெண்மேகத்தின் முகம் கறுத்துக் கவிண்டது.**

***'காட்சியை தருபவனெல்லாம் மீட்சியைத் தரமாட்டான்***

***மீட்சியைத் தருபவனெல்லாம் காட்சிக்கு வரமாட்டான்'***







# மட்டக்களப்பின் பழைய பெயர்கள்

## மலாயர் குகநாடு, உன்னாசகிரி, மண்முனை என்பவற்றோடு காளிதேசம் என்பதும் மட்டக்களப்பின் பெயர்களா?

கூத்திகன் எனும் அரசன் மட்டக்களப்பு, வீரர்முனை, மண்கல்புட்டி அல்லது மல்கம்பிட்டி எனும் கிராமங்களை அமைத்தான் எனவும் மண்கல்புட்டி அல்லது மல்கம்பிட்டியை இராசதானமாக்கினான் எனவும் பின்னர் மட்டக்களப்பு இராசதானத்தை உருவாக்கி தனது மகன் சேனனுக்குப் பட்டங்கட்டினான் எனவும் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறுகிறது. இது இற்றைக்கு 2200 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்தது என்றும் கூறுகிறது.

எனினும் இதேநூலில் கூத்திகன் காலத்திற்கு முன்னரே இப்பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் 2200 வருடங்களிற்கு முன்னரே இப்பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதனை இங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் சான்றுகளும் வெளிக்காட்டுகின்றன. எனவே முன்னர் இப்பிரதேசம் எப்பெயரால் அழைக்கப்பட்டது, இப்பிரதேசத்தில் தோன்றியிருந்த ஊர்கள் மற்றும் இராசதானங்கள் எவை? என்ற கேள்வி தோன்றுகிறது.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தின் உரைப்பகுதியின் ஆரம்பத்திலேயே, மட்டக்களப்பிற்கு 'மாட்சிமை தாங்கிப் பல நாமங்கள் சூட்டப்பட்டிருக்கும். அவையானவ :- மலையாளர் மலாயர் குகநாடென்றும், நாகர் இயக்கர் நாகர்முனை என்றும், வங்கர் மட்டக்களப்பென்றும், கலிங்கர் உன்னாசகிரியென்றும், சிங்கர் மண்முனை என்றும்...' என்றும் கூறப்பட்டுள்ளது. இத்தகவல்கள் மூலம் இப்பிரதேசத்திற்கு பல நாமங்கள் இருந்தது என்பதனையும் அதில் ஒரு நாமம் ''மட்டக்களப்பு'' என்பதனையும் அறியமுடிகிறது. எனினும் இந்த நாமவரிசையின் கால ஒழுங்கை கண்டறிய முடியாதுள்ளது.

எனினும் இத்தகவலின்படி, நாகர்முனை என்பதைத் தவிர்த்த ஏனைய பெயர்களான மலாயர் குகநாடு, மட்டக்களப்பு, உன்னாசகிரி, மண்முனை என்பவை அக்காலத்தில் மக்கள் குடியேறிய இடங்களின் பெயர்கள் போலவும், குடியேறியவர்கள் குடியேறிய இடங்களிற்கு இட்ட பெயர்கள் போலவுமே தெரிகிறது. வீரர்முனை, மண்கல்புட்டி அல்லது மல்கம்பிட்டியும் இவ்வாறே மக்கள் குடியேறிய இடங்களே.

ஆனால், நாகர் இயக்கர் இப்பிரதேசத்திற்கு நாகர்முனை என நாமமிட்டிருந்தார்கள் என்ற தகவல் முக்கியமானதாக அமைகிறது. அவர்களே இலங்கையினதும் இப்பிரதேச த்தினதும் பூர்வ குடிகள். நாகர்முனையும் பண்டைய பெயரொன்றே. இந்நூலிலும் இப்பிரதேசத்தில் வாழ்ந்த இயக்கர், நாகர் பூர்வ குடிகள் எனக்கூறப்பட்டுள்ளது. 'இயக்கர் எனும் திமிலர்' என்றும் சொல்லப்பட்டுள்ளது. எனினும் திமிலர் தனியானதொரு சமூகப்பிரிவினர் என்ற கருத்தே நிலவுகிறது.

இதனைவிட, கூத்திகன் புதல்வன் சேனன் வம்சம் அருகிப்போக, நாகர், இயக்கர் என்னும் இரு குலத்தவர்கள் மேலெழும்பி, முக்குலத்தவரையும் அடக்கி, விண்டு அணையை இராசதானமாக்கி முப்பது வருஷ காலங்களாக கொடுங்கோல் செலுத்தினன்.' என்கிற பூர்வ சரித்திரம் கூறும் தகவலில் விண்டு அணை எனும் நாகர், இயக்கர் இராசதானம் பற்றியும் அறிய முடிகிறது. அங்கு இராசமாளிகை இருந்தது என்றும் கூறப்பட்டுள்ளது. விண்டு அணை என்பது விந்தனை என்பதனைக் குறிக்கிறது போலும்.

மேலும், மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் விஜயன் இலங்கை வந்தபோது இலங்கையின் முதலரசனாக இருந்தவன் காளிசேனன் எனவும் காளிசேனனுடைய இராச்சியம் தென்னிலங்கையில் இருந்த காளிதேசம் எனவும் கூறப்பட்டுள்ளது. காளிசேனனுடைய இடத்தினை இராச்சியம் என்று விசேடித்துக் குறிப்பட்டுள்ளது. காளிதேசம் சென்ற விஜயன், இயக்கர் குலத்துக் குவேனியை மணந்து, காளிசேனனுக்கு விஜயகுமாரனும் தோழர் எழுநூறுபேரும் படைவீரர்களாக இருந்து, மண்ணினால் மாளிகை இயற்றி வாழுங்காலம்...' எனவும் கூறப்பட்டுள்ளது. இத்தகவலிலிருந்து பண்டைக்காலத்தில் இப்பிரதேசம் காளிதேசம் என அழைக்கப்பட்டதாகக் கொள்ளலாம். பின்னரே விண்டு அணை எனும் இரசாதானம் உருவாக்கப்பட்டது எனக் கொள்ளலாம். இவை, இயக்கர், நாகருடன் தொடர்பு பட்டவை. எனவே இவற்றை மட்டக்களப்பின் பண்டைய பெயர்களாகக் கொள்ளலாம்.

முடிவாக, பண்டைக்காலத்தில் அதாவது 2200 வருடங்களுக்கு முன்னர், கூத்திகன் காலத்திற்கு முன்னர், தென்னிலங்கையில் இலங்கையின் முதலரசன் காளிசேனனுடைய காளிதேசம் என்ற இராசதானி இருந்தது என்ற தகவலைப் பெறமுடிகிறது. இதுவே இப்பிரதேசத்திற்குரிய பண்டைப்பெயராகும். அக்காலத்தே சமுத்தரக்கரையருகில் காளிசேனன் நகர்வலம் வந்து இருந்து போவதற்காக சிங்கார மண்டபம், சிங்காரத் தோப்பு என்பன அமைக்கப்பட்டிருந்தன, காளிதேசத்தில் விஜயன் மற்றும் தோழர்களால் மண்ணினால் மாளிகை இயற்றப்பட்டிருந்தது. இது பூர்வசரித்திரத்தில் கூறப்பட்டுள்ள முதற்கட்ட வரலாறு.




காளிசேனனால் சமுத்திரக்கரையருகில் அமைக்கப்பட்ட சிங்கார மண்டபம், சிங்காரத் தோப்பு என்ற இடங்களிலேயே பின்னர் குடியேற்றங்களும் கிராமங்களும் இராச தானங்களும் அமைக்கப்பட்டன. அதிலொரு கிராமமே மட்டக்களப்பு. அந்தக் கிராமங்கள் - இராசதானங்கள் என்பன வளர்ச்சி பெற்றே இன்றைய மட்டக்களப்பு உருவானது. இது இரண்டாம் கட்ட வரலாறு.

குடியேற்ற காலத்தில் பின்னடைவைச் சந்தித்திருந்த இயக்கர், நாகரால் பின்னர் விண்டு அணை இராசதானம் உருவாக்கப்பட்டது, அங்கும் ஒரு மண்மாளிகை அமைக்கப்பட்டிருந்தது. இது மூன்றாம் கட்ட வரலாறு.

இந்த விபரங்களிலிருந்து மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் இலங்கை வரலாற்றை நன்கறிந்து உருவானது என்றோ அல்லது பண்டைக்காலச் சரித்திரத்தை ஓரளவு சரியான முறையில் பதிவு செய்து உள்ளது என்றோ கருத வேண்டியுள்ளது.

-- கிரான் விஜய் --

இலங்கை (பாலி) வரலாற்று நூல்களின்படி இயக்கர் குல அரசன் மகாகலசேனன் அல்லது காலசேனன் அல்லது காளிசேனன் என்பதேயாகும். அவனுடைய அரசும் சிரிஸவத்து எனுமிடத்தில் அமைந்திருந்தது. சிரிஸவத்து மற்றும் லங்காபுர எனும் இயக்க அரசனின் இடங்கள், பின்னர் லொக்கல, லக்கல குன்றுகளே என இனங்காணப்பட்டது என்கிறார் 'இலங்கையின் சுருக்க வரலாறு' எனும் வரலாற்று நூலை எழுதிய யூ.டபிள்யூ. கொடிறிங்கடன்.



பூர்வ சரித்திரத்தில் காளிதேசம் தென்னிலங்கையில், உட்பகுதியில் அமைந்த ஒரு இடமாகவே கூறப்பட்டுள்ளது. எனவே மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறும் காளிசேனன் - காளிதேசம் பற்றிய தகவல்கள் இலங்கை வரலாற்று நூல்கள் கூறும் விபரங்களுடன் சரியான வகையில் பொருந்தியமைவதைக் காணமுடிகிறது.

இதேவேளை, தேவநம்பியதிஸ்ஸனுக்கு முன் ஆட்சி செய்த பந்துகாபய மன்னன் கிழக்கு மாகாணத்துடன் தொடர்பு பட்டிருக்கிறான் என்பதுவும் இவ்விடயத்தில் முக்கியமானதொரு தகவலாகக் கொள்ளலாம். பந்துகாபய மன்னனுடைய வரலாறு தொடர்பில், 'இந்த மன்னனின் காலத்திற்குச் சற்று முன்னரும், பின்னரும் நிகழ்ந்த சம்பவங்கள் இவனது காலத்திய சம்பவங்களாகக் கோவைப்படுத்தப்பட்டு மகாவம்சத்தில் கொடுக்கப்பட்டுள்ளமையே உண்மையாகும்.' என செ.கிருஷ்ணராசா குறிப்பிடுவதும் கவனத்திற்குரியது. அவரின் இலங்கை வரலாறு பாகம் - 1 என்ற நூலில் இத்தகவல்கள் கூறப்பட்டுள்ளன.

மகாவம்சம் கூறும் தகவல்களின்படி, பந்துகாபயனுடைய வாழ்க்கை வரலாறு கிருஷ்ணன் கதையைப் போலவே அமைந்திருப்பதுவும், கீழ் மாகாணத்துடன் தொடர்பு பட்டிருப்பதுவும் முக்கியமானதொரு விடயமாகும். மகாவம்ச த்தில் பந்துகாபயன் கதைத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள இடப்பெயர்களுள் பெரும்பாலானவை கீழ் மாகாணத்திலேயே காணப்படுகின்றன என்கிறார் செ.கிருஷ்ணராசா.

மேலும் செ.கிருஷ்ணராசா, '... இச்செய்தியிலிருந்து பெற்றுக்கொள்கின்ற வரலாற்றுத் தகவல் என்னவெனில் இலங்கையின் கீழ் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு சிற்றரசுத் தலைவன் அனுராதபுரத்து அரச ஆட்சியாளருடன் மோதி, அதன் பின்னர் படிப்படியாக அனுராதபுர அரசைக் கைப்பற்றி ஓர் ஆட்சியாளனாகப் பிரகடனப்படுத்திய வரலாற்று வரன்முறையை குறித்து நிற்கின்றது. பந்துகாபயனின் தந்தையின் பெயர் தீக காமினி ஆகும், இது கிழக்கு மாகாணத்திலுள்ள தீகவாபியுடன் நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.' எனவும் இவனுடைய காலத்தில் அனுராதபுரத்தில் பல இந்துக்கோயில்களும் கட்டப்பட்டுள்ளன. பல்வேறு மதப்பிரிவுகளும் காணப்பட்டுள்ளன எனவும் கூறுகிறார்.

இந்தத் தகவல்கள், 'பந்துகாபயனுக்கு முன்னரும் பின்னரும்' ஆன காலத்தில், மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆட்சி செய்த சிற்றரசர்கள் பற்றிய தகவல்கள் முக்கியமானவை என்பதனைக் காட்டுகின்றன. இது பற்றிய தகவல்களை மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில்தான் தேட வேண்டியுள்ளது.

பந்துபாசு, பந்துகாபய எனும் பெயர்கள் பண்டு என்பதனுடனும் தொடர்பும் பட்டுள்ளது. மட்டக்களப்பு பூர்வ சரித்திரமும் காளிசேனன், அயோத்தியாபுரியைப் பண்டைய நாளில் அரசு செய்த இரகுவமிச அல்லது பரிதிகுல இரகுவமிசத்தைச் சேர்ந்தவன் என்றே குறிப்பிட்டுள்ளது.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத் தகவல்கள் இலகுவில் ஒதுக்கப்படக் கூடியவை அல்ல. இலங்கை வரலாற்று நூல்களில் தெளிவற்றுக் கூறப்பட்டள்ள, சிலவேளைகளில் திரித்துக் கூறப்பட்டுள்ள, சில வேளைகளில் விடப்பட்டிருக்கக் கூடிய வரலாற்றுத் தகவல்களை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் தரும் தகவல்களைக் கொண்டு ஆராய்ந்தறிந்து கொள்ளலாம் என்றே எண்ணத்தொன்றுகிறது.

இங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள், தற்போது சிலரால் மட்டும் அறியப்பட்டுள்ள மண்மனை போன்ற வெளிப்படுத்தப்படாத தொல்பொருள் சார்ந்த தகவல்களும் ஒரு புதிய வரலாற்றை அறிவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தலாம். இங்கு கண்டறியப்பட்டுள்ள மண்மனை கி.மு. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என தெரியவருகிறது. இம்மண்மனையும் வடமுனைக்கருகில் அமைந்திருக்கிறது. இவ்விடம் பூர்வ சரித்திரம் கூறும் காளிதேச த்தின் அமைவிடத்தைச் சுட்டுகிறதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

விரிவாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மூலமே தெளிவான பதில்களைக் கண்டறியமுடியும். இங்குள்ள ஆற்றங்கரைகளிலும் மண்புட்டிகளிலும் பெரும் வரலாற்று ஆதாரங்கள் மறைந்து கிடக்கலாம் என்றும் எண்ணத்தோன்றுகிறது!

# சாமத்தியச் சடங்கும் அதனது சமூகத்தளமும்



1975 களுக்கு முன்பு ஊர்களில் மின்சாரம், ரேப் றெக்கோடர், தொலைக்காட்சி என்பனவெல்லாம் இல்லை, ரேடியோ கூட ஒரு சிலரின் வீடுகளில்த்தான் பார்க்கமுடியும். இந்தச் சூழலில் ஒரு பிள்ளை பருவமடைந்து விட்டால் ஓரளவு வசதியுள்ளவர்கள் ஒலிபெருக்கி எடுத்து 3 நாட்கள் கொண்டாடுவார்கள். அழைப்பிதழில் கூட 'கொண்டாட்டம் மூன்று நாட்கள் இடம்பெறும்' என குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த மூன்று நாட்களும் அந்த வீட்டில் சாப்பாட்டுக்கு குறைவிருக்காது. வறிய, தாழ்த்தப்பட்ட மக்களின் உணவுத்தேவையினை பூர்த்தி செய்வதாகவும் இந்த நாட்கள் அமையும். இவ்வாறு ஒலிபெருக்கி எடுத்து மூன்று நாட்கள் கொண்டாட்டம் செய்து சாப்பாடு கொடுத்தது அந்தக் குடும்பத்துக்கு ஒரு சந்தோசமான விடயமாகவும் இருந்தது.

பொருளாதார ரீதியாக இவ்வாறு செய்ய முடியாதவர்களின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்றோ அன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் ஒலிபெருக்கி எடுத்து மூன்று நாள் கொண்டாட்டம் செய்வது ஒரு ஆடம்பரமான விடயம் என்பதையோ எண்ணிப்பார்க்க முடியாத எனது சிறு வயதில் இவ்வாறான சடங்குகளுக்குச் சென்று விளையாடுவதும் ஒலி பெருக்கி இயக்குபவரை நண்பனாக்கிக் கொண்டு நாங்கள் விரும்பும் எம்.ஜி.ஆர், சிவாஜி படங்களிலிருந்து ரி.எம் சௌந்தரராஜனின் பாடல்களை ஒலிபரப்பாக்கச் சொல்வதும் அப்பாடல் ஒலிபரப்பாகும் போது ஏதோ நாம்தான் இயற்றி, இசையமைத்து, பாடியது போல் ஒரு பிரம்மையை நண்பர்களுக்குக் காட்டுவதும், இரவானதும் எங்களை விடப் பெரியவர்கள் ஒலிவாங்கியை எடுத்துப் பாடுவதும் அவர்களை 'நல்லா பாடுரயள் இன்னும் பாடுங்கோ' என அவர்களை ஏற்றிவிட்டு பாட்டைக் கேட்டுச் சிரிப்பதும் ரேடியோ கூட இல்லாத அந்த நாட்களில் இவ்வாறு மூன்று நாட்களாக ஒலிபெருக்கியுடன் பொழுதைக் கழிப்பது இப்போதைய சிறுவர்கள் வீடீயோ கேம்களில் பொழுதைக் கழிப்பது போன்றதாகும்.

அப்போது ஒரு பிள்ளை பருவமடைவதை கொண்டாட வேண்டுமா? வேண்டாமா என்கின்ற வாதங்களோ அல்லது இது ஏன் கொண்டாடப்படுகின்றது என்பது தொடர்பான விளக்கமோ நான் கேள்விப்பட்டது கிடையாது. கொண்டாட வசதியுள்ளவர்கள் கொண்டாடுவார்கள் வசதியற்றவர்கள் வீட்டுடனும் அவர்களது சுற்றத்தாருடனும் இந்தச் சடங்கை முடித்துக்கொள்வார்கள். இங்கு கொண்டாட்டம் என்பது வீட்டில் சமைத்து வருபவர்களுக்கு மனம் சந்தோசப்பட வயிறு நிறைய உணவு கொடுத்து ஒரு விருந்தோம்பல் செய்வதேயாகும்.

1980களுக்குப் பின்பு இந்தக் கொண்டாட்ட நிலையில் மாற்றம் ஏற்பட ஆரம்பிக்கின்றது. அதாவது ஒலிபெருக்கி எடுத்து மூன்று நாட்கள் கொண்டாட்டம் நடாத்துவது நாகரீகமானது அல்ல எனும் ஒரு கண்ணோட்டம் வளர ஆரம்பிக்கின்றது. இந்த வளர்ச்சியின் பயனாக இன்று சாமத்தியக் கலியாணம் தொடர்பாக மூன்று விதமான எண்ணக்கரு கொண்டவர்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

1. அழைப்பிதழ் அச்சடித்து அழைப்பு விடுத்து மண்டபங்களில் மதிய போசன விருந்துடன் நடாத்துபவர்கள்,

2. அழைப்பு விடுத்து மண்டபங்களில் நடாத்துவது நாகரீகமானது அல்ல எனக் கருதுபவர்கள்.

3. பிள்ளை பருவமடைவது அந்தப் பிள்ளைக்குரிய தனிப்பட்ட அந்தரங்கமான விடயமாகும் இதனை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவது காட்டுமிராண்டித்தமானது என விட்டுவிடுபவர்கள்.

**சரி, இவர்களை தனித்தனியாகப் பார்ப்போம்.**

1. அழைப்பிதழ் அச்சடித்து அழைப்பு விடுத்து மண்டபங்களில் மதிய போசன விருந்துடன் நடாத்துபவர்கள்:

இவ்வாறு நடத்துபவர்களில் பெரும்பாலானவர்கள் நாம் எதற்காகச் செய்கிறோம்? என்ன செய்கிறோம்? என்கின்ற எந்தப் பிரக்ஞ்ஞையுமின்றி நாமும் எமது பிள்ளைக்குச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்கின்ற ஒரே நோக்கம் மட்டுமே உள்ளவர்கள். இந்த நோக்கத்துக்காக தமது பணத்தம்பட்டத்தையும் காட்டத்தவறமாட்டார்கள். உதாரணத்திற்கு மண்டபத்தில் கதிரைகள் இருந்தாலும் நட்சத்திர விடுதிகள் போல் இருக்கவேண்டும் என்பதற்காக துணியுடன் கூடிய கதிரைகளை வாடகைக்கு எடுப்பதும் புரியாணி என்ற பெயரில் அவியாச்சே ாற்றையும் அதனுடன் கலக்காத மாசிச் சம்பல், கோழிமுட்டை, கோழிப்பொரியல் என உடம்புக்கு ஒவ்வாத உணவை



கோப்பையில் அரைவாசிக்குப் போட்டு கொடுப்பது அல்லது தாமாக எடுத்துக்கொள்ளல் (self & service) என்ற பெயரில் பிச்சைப்பாத்திரம் ஏந்துபவர்களாக விருந்தாளிகளை மாற்றுவது. அதிலும் கூட கோழிக்கும் அல்லது இறாலுக்கும் பங்கிடுவதற்கு ஒருவரை வைத்து விருந்தாழியை கேவலப்படுத்துவது. இதனை விட பிள்ளையை அலங்கரிப்பதற்கு, வீடியோ, புகைப்படம், என பல இலட்சங்கள் செலவு செய்து விருந்தாளியை அவர்களுடைய தம்பட்டங்களைப் பார்த்துச் செல்லும் ஒருவானாக ஆக்கும் சடங்கு.

2. அழைப்பு விடுத்து மண்டபங்களில் நடாத்துவது நாகரீகமானது அல்ல எனக் கருதுபவர்கள்.

இவ்வாறானவர்களில் பெரும்பாலானவர்கள் அரச உயர் பதவிகளில் வசிப்பதோடு காலனியாதிக்க மனோபாவமும் சமஸ்கிருத மயப்பாடும் பண்பாட்டுப் பிரக்ஞையும் அற்றவர்கள். தமது பிள்ளை மற்றும் சொந்தக்காரர்களின் திருபதிக்காக தங்கள் சொந்தக்காரர்களுக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் அறிவித்து, வீட்டோடு விருந்து கொடுத்து நடாத்தி முடிப்பவர்கள். இந்த அழைப்புக் கூட 'மஞ்சள் நீராட்டு விழா' 'ருதுசாந்தி அழைப்பிதழ்' என்றில்லாது வீட்டில் விருந்துக்கு வருமாறே அழைப்பு விடுக்கப்படுகின்றது. அதாவது 'மஞ்சள் நீராட்டு விழா' 'ருதுசாந்தி' எனக் கூறுவதே நாகரீகமானது அல்ல எனக் கருதுபவர்கள்.

3. பிள்ளை பருவமடைந்தது அந்தப் பிள்ளைக்குரிய தனிப்பட்ட அந்தரங்கமான விடயமாகும் இதனை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவது காட்டுமிராண்டித்தமானது என விட்டுவிடுபவர்கள்.

இந்த 3வது வகைப்பாட்டினுள் வருவபர்களில் பெரும்பாலானோர் உயர் வர்க்கத்தினரும் பெண்ணியல் வாதிகளாகும். இவர்கள் இந்தச் சடங்கு தொடர்பாக முன்வைக்கும் விமர்சனங்கள் பின்வருமாறு அமைகின்றன.

1. சாமத்தியச் சடங்கு என்பது தமது மகள்மாரையே ஒரு கவர்ச்சிப்பொருளாகவும் பாலியல் பண்டமாகவும் காட்சிப்படுத்துவதாகும்

2. பெண் உடலியல் ரீதியான மாற்றத்தால் பாலியல் உறவுக்குத் தயாராகும் சந்தர்ப்பத்தில் அந்தப் பெண்ணை ஒரு பாலியல் பண்டமாக உணரப் பண்ணி மற்றவர்களுக்கும் அதனை தெரிவிக்கும் சடங்கு.

3. ஆண்களுக்கு சுகமளிப்பதற்கு பெண்ணை அடையாளப்படுத்தும் சடங்கு

4. 'எனது பிள்ளை திருமணத்துக்கு தயாராகி விட்டாள் என்பதை அறைகூவலாக விடுக்கின்ற ஒரு சடங்காகும்

5. 'எனது வீட்டிலும் ஒருத்தி தயாராக இருக்கின்றாள் என்பதைக் காட்டிக்கொள்ளும் ஒரு சடங்கு'

இவற்றில் எந்தப் பெண்ணியல் வாதத்தளங்களும் இல்லாததோடு இவை ஆண்நிலைப்பட்ட வக்கிரத்தன்மையான சொல்லாடல்களாகவும் இருக்கின்றன. இந்த வக்கிரத்தன்மை என்பது அந்தப் பிள்ளையை ஆணுக்காக ஏங்கும் ஒரு பிண்டமாக, இன்பம் கொடுக்கும் ஒன்றாக, பயன்பாட்டுக்கான ஒன்றாகப் பார்த்து வரையறுப்பதாக இருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று நிலையிலுள்ளவர்களுக்குமே இந்தச் சாமத்தியச் சடங்கின் அர்த்தத் தளங்கள், சமூகத்தேவை, சமூகச் செயற்பாடுகள், சமூக ஒருங்கிணைப்பு, சமூகப்பாதுகாப்பு என்பவை தொடர்பாக எந்தவிதமான அறிவும் அனுபவமும் இல்லாமல் இந்தச் சடங்கை செய்வதும், இந்தச் சடங்கை விமர்சிப்பதும் நடந்துகொண்டிருக்கின்றது.



இது எமது சமூக முரண்நகையாகும்.

தமிழ் பண்பாட்டில் காலங்காலமாக பின்பற்றி வந்த ஒரு சடங்கு ஒரு புறம் அர்த்தமற்ற ஆடம்பரச் சடங்காக மாறியிருப்பதும் மறுபுறம் அநாகரிகமானது, காட்டுமிராண்டித்தனமானது என ஒதுக்கப்பட்டிருப்பதற்குமான கருத்துநிலை என்ன என அறிந்து சாமத்தியச் சடங்கின் சமூக பொருளாதார உறவுநிலையை எடுத்துக்காட்டுவது அவசியமாகின்றது.

(அவை குறித்து அடுத்த வாரம் பார்ப்போம்)

-- சிவரட்ணம் சுந்தரப்பிள்ளை --

## மோர்சாப்பிட்டி வை.எம்.ஏ.சி விளையாட்டுக் கழகத்தின் புதுவருட விளையாட்டுப் போட்டி

பாரம்பரிய விளையாட்டுக்களை ஊக்கப்படுத்தல் மற்றும் கலாசாரங்களைப் பேணும் நோக்கோடு மட்டக்களப்பு மோர்சாப்பிட்டி வை.எம்.ஏ.சி விளையாட்டுக் கழகத்தின் 99 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டிய புதுவருட விளையாட்டுப் போட்டிகள் பயனியர் வீதியில் அமைந்துள்ள அதன் மைதானத்தில் நடைபெற்றன.

வை.எம்.ஏ.சி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஈ.வைரமுத்துவின் தலைமையில் சிறுவர்களுக்கான பல்வேறு விளையாட்டுக்களோடு தலையணைச் சமர், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல் உள்ளிட்ட பல்வேறு



போட்டிகள் இடம்பெற்றதோடு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன. காலையில் இடம்பெற்ற 56 மைல் சைக்கிளோட்டப் போட்டியில் முதல் இடத்தை சின்ன ஊறணியைச் சேர்ந்த எஸ்.சதீஸ்காந் துவிச்சக்கர வண்டியைப் பரிசாகப் பெற்றார். முதல் 5 இடங்களைப் பெற்றவர்கள் பரிசுகள் வழங்கப் பட்டதோடு எம்.ஏ.சி விளையாட்டுக் கழகத்தின் சிரேஸ்ட உறுப்பினர்கள் இருவர் கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதி மேயர் க.சத்தியசீலன், மாநகரசபையின் உறுப்பினர் சிவம் பாக்கியநாதன், சட்டத்தரணி வி.வினோபா இந்திரன், கோட்டைமுனை அரசடிப்பிள்ளையார் ஆலயத் தலைவர் எஸ். அமிர்தலிங்கம், மதுரை காமராச பல்கலைக்கழக மேலாளர் கலாநிதி ஓ.கே. குணநாதன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகளை வழங்கி வைத்தனர்.





# இலங்கையின் ஒரேயொரு தொன்மைவாய்ந்த மீனாட்சி அம்மன் ஆலயம்!



விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா



இலங்கையின் ஒரேயொரு தொன்மைவாய்ந்த மீனாட்சி அம்மன் ஆலயம் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் கிராமத்தின் தெற்கு எல்லையில் மேற்குப் புறமாக வயல் வெளிகளுக்கு நடுவே ஒரு மேட்டுநிலத்தில் தென்னை, மா, ஆலை, அரச மரங்கள் நிறைந்த சோலையாக ஒரு பகுதி காணப்படுகின்றது. அதனை மாட்டுப்பள்ளம் என்று அழைக்கின்றனர்.

அமைதியும் அழகும் நிறைந்த அந்த இடத்தின் நடுவேதான் மீனாட்சி அம்மன் கோயில் உள்ளது. பாண்டிய மன்னன் ஒருவனின் படையணி ஒன்று அந்த இடத்தில் நிலை கொண்டிருந்ததாகவும் அந்தப் படையிலுள்ளவர்கள் வணங்குவதற்காக அந்த இடத்தின் ஒரு பகுதியில் மீனாட்சி அம்மனை வைத்து வழிபட்டு வந்ததாகவும் இந்த ஆலய வரலாறு பற்றி அறியக் கிடைக்கின்றது.

பின்னர் வந்த போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் காலத்தில் அந்த இடத்திலிருந்த மீனாட்சி அம்மன் ஆலயம் சிதைக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அதன் பின்னர் அப்பகுதியில் வாழ்ந்த தமிழர்கள்ன் மீண்டும் மீனாட்சி அம்மன் ஆலயத்தை சீரமைத்து, வழிபாட்டை தொடர்ந்து வழிபட்டு வந்ததாக கூறப்படுகின்றது.

இந்த மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நுழைந்தவுடன் மனதிற்கு ஓர் ஆத்ம திருப்தி கிடைப்பதுபோல் உணர முடியும். அம்மனை தரிசிக்க வரும் அடியார்களது வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுவதாகக் கூறுகின்றனர். இதனால் நாளுக்கு நாள் இவ் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இலங்கையின் பல பகுதியிலிருந்தும் மீனாட்சி அம்மனை



தரிசிக்க மக்கள் வருகின்றார்கள்.

விசேடமாக வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினங்களில் விஷேட பூசைகள் அன்னதான நிகழ்வுகள் இங்கு நடைபெறுகின்றது. மீனாட்சி அம்மனுக்கு மட்டுமல்ல நாக வழிபாட்டையும் இங்கு விசேடமாக காணக்கூடியதாக இருக்கின்றது. சகல இன மக்களும் இந்த ஆலயத்திற்கு வந்து வழிபட்டுச் செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம் 'என்பார்கள். ஆனால் சுற்றிவர குடிமனை எதுவுமே இல்லாத பகுதியாக உள்ள இந்த இடத்தில்



மீனாட்சி அம்மன் அமர்ந்திருந்து தம்மை நாடிவருவோரின் குறைகளை தீர்த்து வருகின்றார்.

மாட்டுப்பள்ளம் மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு ஓர் அறங்காவலர் சபை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் பல கிராமங்களையும்



சேர்ந்தவர்கள் இச்சபையில் இணைந்து ஆலய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாலயத்தின் அறங்காவலர் சபைத்தலைவர் கோவிந்தசாமி கமலநாதன் கருத்துத் தெரிவிக்கையில், இந்த




ஆலயத்தைச் சுற்றி கிராமங்கள் இல்லாததால் இரவு வேளைகளில் யானைகள் வந்து சேதப்படுத்துவதாகவும் காவலாளிகளை நியமிக்கத் தேவையான பாதுகாப்பு வசதிகள், நிதி வசதிகள் இல்லையெனவும் கூறுகின்றனர். ஆலயத்தின் தேவைகள் இன்னும் உள்ளதாகவும் அவற்றை நிவர்த்தி செய்ய மக்கள் முன்வந்து உதவவேண்டும் எனவும் அவர் கோருகின்றார்.



## வழியை மறித்து பழம்கேட்கும் யானைகள்!









புத்தலவில் இருந்து கதிர்காமம் நோக்கிச் செல்லும் பிரதானவீதியில் யானைகள் வழியை மறித்து பழம் கேட்கின்றன. பழம் கொடுத்தால் மட்டுமே வழி விடும். இது அப்பாதையால் செல்வோருக்கு பழகிவிட்டது. தெரியாதவர்கள் யானை செல்லும்வரை தூரநிற்பார்கள். அதுவும் நிற்கும். இனி பழக்கப்பட்டவர்கள் வரும்போது அவர்கள் அருகே சென்று பழம் கொடுக்க அதன் பின்னால் ஏனையோரும் செல்வார்கள்.

வாகனங்கள் வராத வேளையில் இந்த யானைகள் வீதியின் ஓரத்தில் பற்றைகளுக்குள் நிற்கும். வாகனம் வந்தால் இலேசாக வீதிக்கு மத்திக்கு வந்து வழிமறித்து நிற்கும். வாகனங்கள் அருகே சென்றதும் தும்பிக்கையை நீட்டி பழம் கேட்கும். பழங்களை வழங்கினால் அது தன்பாட்டில் வழியைவிட்டு ஒதுங்கும். அவ்வாறான சம்பவமொன்றை இங்கு காண்கிறீர்கள்.

(படங்கள்: காரைதீவு நிருபர் சகா)


## "எதிர்க்கட்சி வரையில் இருப்போம் - ஆனால், ஜனாதிபதியின் முடிவுகளுக்கே ஆதரவு"

தொடர்ச்சி

அரசாங்கத்தில் இடம்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர்கள் மஹிந்த ராஜபக்ஷ தலைமையுடனான கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்துவிட்டால், அரசியல் நெருக்கடி மேலும் மோசமடையும் என்ற காரணத்தால், அவர்களின் ஆதரவை ஏதோ ஒரு வகையில் தக்க வைக்க ஜனாதிபதி பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அதன் அடிப்படையிலேயே ஜனாதிபதிக்கும், போட்டிக் குழுவினருக்கும் இடையில் இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த 16 உறுப்பினர்களும் ஆளும் கூட்டணியில் இருந்து வெளியேறுவதால் ஆட்சிக்கு எந்தவிதமான பாதிப்பும் உடனடியாக ஏற்படாது என்றே ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். சிறுபான்மை கட்சிகளான தமிழ் தேசியக்கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவு இருக்கும் நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நாடாளுமன்றத்துக்கு ஆபத்து இல்லை என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.



# மரணத்தின் இறுதிக் கண ஆய்வு சொல்லும் புதுக்கதை!

## மரணத்தை மரணிக்கச் செய்யலாம் என்கிறது ஆய்வு

மரணிப்பதற்கு முன் இறுதியாக எமது மனது என்ன சிந்திக்கும் என்று அறிய செய்யப்பட்ட ஆய்வு ஒன்று, மரணத்தை எதிர்காலத்தில் தவிர்க்கமுடியும் என்று நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

அப்போது மனது என்ன நினைக்கும் என்று யாரும் துல்லியமாக சொல்லிவிட முடியாது. விஞ்ஞானிகளால் இது தொடர்பான சில தகவல்களை சொல்ல முடியும் என்றபோதிலும், இந்த கேள்விக்கான பதில் இன்னமும் பிரம்ம ரகசியமாகவே உள்ளது.

இருந்தாலும், விஞ்ஞானிகளும் இதுபோன்ற சிக்கலான புதிர் நிறைந்த கேள்விகளுக்கான பதிலைத் தேடும் முயற்சிகளில் தொடர் ஆராய்ச்சிகளை செய்து வருகின்றனர்.

அண்மையில் மரணம் தொடர்பாக சில விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வுகள் ஆச்சரியமான முடிவுகளை தந்துள்ளது. இந்த ஆய்வுகளில் நரம்பியல் தொடர்பான சுவாரஸ்யமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெர்லின் சாரிட் பல்கலைக்கழகம் மற்றும் ஓஹியோவில் உள்ள சின்சினாட்டி பல்கலைக்கழக விஞ்ஞானிகள், ஜென்ஸ் ட்ரேயரின் தலைமையின் கீழ் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.





இந்த ஆய்வுக்காக, சில நோயாளிகளின் குடும்பத்தினரின் முன்னனுமதியை பெற்று, நோயாளிகளின் நரம்பு மண்டலத்தை விஞ்ஞானிகள் நெருக்கமாக கண்காணித்தார்கள்.

சாலை விபத்துகளில் படுமோசமாக காயமடைந்தவர்கள், பக்கவாதம் மற்றும் இதய செயலிழப்பால் (கார்டியாக் அரெஸ்ட்) பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை விஞ்ஞானிகள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்படுத்தினார்கள்.

மரணிக்கும் நேரத்தில் மனிதர்களின் மூளையும், விலங்கின் மூளையும் ஒரே



மாதிரியாக செயல்படுவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். மேலும், மூளையை 'ஏறத்தாழ' மறுசீரமைப்பு செய்யக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மரணத்தின் இறுதி கட்டத்தில் மூளையில் ஏற்படும் மாற்றங்களை கண்காணிப்பதோடு, மரணத்தின் இறுதித் தருணத்தில் இருக்கும் மனிதனை எப்படி காப்பாற்றலாம் என்பதும் இந்த ஆய்வின் முக்கியமான நோக்கங்களாக இருந்தன.

இந்த ஆய்வை விஞ்ஞானிகள் மேற்கொள்வதற்கு முன்னர், 'மூளை மரணம்' பற்றி நாம் அறிந்திருக்கும் செய்திகள் பெரும்பாலும் விலங்குகளின் மீது மேற்கொள்ளப்பட்ட சே ாதனைகளிலிருந்து தெரிந்துக் கொண்டவை என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

மரணம் பற்றி நாம் ஏற்கனவே அறிந்தவை:
====================================

உடலின் ரத்த ஓட்டம் நின்றுபோய், மூளைக்கு ஆக்ஸிஜன் செல்வது குறையும்.
இந்த நிலையில், பெருமூளைச்சி ரையில் ரத்த ஓட்டம் குறைவதால், மூளையில் இரசாயன மாறுபாடுகள் ஏற்படுகின்றன. மேலும் மூளையின் 'மின் செயற்பாடு' முற்றிலுமாக நின்றுபோய்விடும்.
மூளை அமைதியடையும் நடைமுறைக்கு காரணம், ஆற்றல் தேவைக்கான பசியுடன் இருக்கும் நரம்புகள், தங்களுக்கு தேவையான ஆற்றலைப் பெற்றாலும், மரணம் நெருங்குவதால் அந்த ஆற்றல் பயன்படுவதில்லை என்று நம்பப்படுகிறது.
அனைத்து முக்கிய அயனிகளும், மூளை செல்களிடம் இருந்து பிரிந்துவிடுகின்றன. இதனால் அடினோசின் டிரைஃபாஸ்பேட் கிடைப்பது பலவீனமாகிறது. இது ஒரு சி க்கலான கரிம வேதியியல் ஆகும். உடல் முழுவதிலும் ஆற்றலை
சேமித்து வைப்பதும், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதும் இதன் வேலை.
இதற்கு பிறகு திசுக்களை மீட்டெடுப்பது சாத்தியமற்றதாகிவிடும்.

ஆனால், ஜென்ஸ் ட்ரேயர் தலைமையிலான விஞ்ஞானிகளின் குழு மனிதர்களைப் பொறுத்தவரை இந்த செயன்முறையை இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்ள விரும்பியது. அதனால் சில நோயாளிகளின் மூளைகளின் நரம்பியல் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன.

மின்முனையக் கீற்றுகளை பயன்படுத்தி இந்த நோயாளிகளை மயக்க நிலையில் இருந்து மீட்டெடுக்க முயற்சி செய்யக்கூடாது என்று மருத்துவர்கள் அறிவுறுத்தினார்கள்.



ஒன்பது நோயாளிகளில் எட்டு பேருடைய மூளையின் அணுக்கள், மரணத்தை தவிர்க்க முயற்சிப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். மூளையின் அணுக்களும், நரம்பணுக்களும் இதயத் துடிப்பு நின்ற பிறகும்கூட வேலை செய்ததை அவர்கள் கண்டறிந்தனர்.

மனிதர்களின் நரம்பு மண்டலத்தின் பிரதானமானது மனித மூளை. அதுமட்டுமல்ல, மனித உறுப்புகளில் சிக்கலானதும் மூளை என்பதும் நமக்கு தெரிந்ததே. உடலின் இயல்பான செயற்பாடுகளான மூச்சுவிடுதல், செரிமானம், இதயத்துடிப்பு, கொட்டாவி போன்ற தன்னிச்சையான செயற்பாடுகளை அது மேற்கொள்ளும்.

அதேபோல், விழிப்புணர்வுடன் நிகழும் சிந்தனை, புரிதல், திட்டமிடுதல் போன்ற செயற்பாடுகளையும் மனித மூளைதான் கட்டுப்படுத்துகிறது. மற்ற எல்லா



உயிர்களையும் விட இத்தகைய சிக்கலான உயர்நிலை செயற்பாடுகளைச் சிறப்பாக கையாளும் திறனை மனித மூளை பெற்றிருக்கிறது.

உணர்வு உறுப்புகளுக்கும் செயல்படும் உறுப்புகளுக்கும் இடையே மின்வேதியல் மாற்றங்கள் மூலம் தூண்டல்களைக் கடத்தும் பணியை செய்வது நரம்பணுக்கள் (நியூரான்கள்). இந்த மின்வேதியல் மாற்றங்கள் நரம்பணுக்களின் உள்ளும் புறமும் நடைபெறும் சோடியம் மற்றும் பொட்டாசியம் அயனிகளின் இடம்பெயர்வால் நிகழ்கிறது.
விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, மின்வேதியல் சமநிலையை பராமரிப்பது ஒரு தொடர் முயற்சியாகும்.

உடலின் அணுக்கள் மின்வேதியல் சமநிலையை பராமரிக்க ரத்த ஓட்டத்தைப் பயன்படுத்துகின்றன, மேலும் இதிலிருந்தே ஆக்ஸிஜன் மற்றும் இரசாயன ஆற்றலையும் எடுத்துக்கொள்கின்றன.

விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, உடல் இறக்கும் போது, மூளையின் ரத்த ஓட்டம் நிறுத்தப்படும். அந்த சமயத்தில் செயலிழந்த நரம்புகள் தனது ஆற்றலை தக்க வைப்பதற்கான முயற்சி களை மேற்கொள்கின்றன.

இது மெதுவாக பரவுவதற்கு பதில் மூளையில் ஒரே சமயத்தில் நடைபெறுவதால், இதைத் 'தவிர்க்க முடியாத மூளை அழுத்தம்' என்று கூறுகின்றனர். இந்த நிலை ஏற்படுத்தும் விளைவை எளிதாக புரிந்துக் கொள்வதற்காக, சுனாமியுடன் ஒப்பிட்டு, 'பெருமூளை சுனாமி' என்றும் அழைக்கின்றனர்.

மின்வேதியல் சமநிலை மாறுபடுவதால் மூளையில் உள்ள அணுக்கள் அழிக்கப்படும்போது, உடலில் இருந்து அதிக அளவிலான வெப்ப ஆற்றல் வெளியாகிறது. இதன்பிறகு மனித உடல் மரணிக்கிறது.

'மரணமற்ற பெருவாழ்வு'
ஆனால், இந்த ஆய்வின்படி, இன்று ''மரணம் என்பது தவிர்க்க முடியாதது என்ற நிதர்சனமான உண்மை'' எதிர்காலத்தில் மாறக்கூடும் என்று நம்பப்படுகின்றது. அப்போது 'மரணமற்ற பெருவாழ்வு' வாழும் சூழ்நிலையும் உருவாகலாம்.

ஜென்ஸ் ட்ரேயர் இவ்வாறு கூறுகிறார்: 'சோடியம் அயனிகளின் ஊடுருவலால், நரம்பு மண்டலத்தின் பிளாஸ்மா சவ்வின் உள்ளேயும் வெளியேயும் இடையே ஏற்படும் ஆற்றல் வேறுபாட்டால் ஏற்படும் இழப்பு, அணுக்களின் உருமாற்றத்தை தொடங்குகிறது. ஆனால் இது மரணம் அல்ல. ஏனெனில் மீண்டும் உடலில் மின்முனைவை அளித்து, அதை மீட்டெடுக்க முடியும். இதனால் மரணத்தில் இருந்து மனிதனை மீட்டெடுத்து, இறப்பை தவிர்க்க முடியும்.'

எனினும், இறப்பை தவிர்ப்பதற்கான நடைமுறைகளை கண்டறிய இன்னும் நிறைய ஆராய்ச்சிகளை செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கான ஆராய்ச்சியும், மரணத்தை போன்றே சிக்கலானது என்று கூறுகிறார் ஜென்ஸ் ட்ரேயர். அதாவது, மரணம் தொடர்புடைய கேள்விகளுக்கு பதில் கிடைப்பதும் எளிதானதில்லை.

ஆனால், முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை என்ற பழமொழியை காலம் நிரூபித்து வருவதைப் போன்றே, மரணம் என்ற ஒன்றும் மனிதனுக்கு இல்லை என்ற புதுமொழியை உருவாக்க ஆராய்ச்சிகள் தொடரும். இந்த ஆராய்ச்சி மனிதனின் மரணத்தை மரணிக்கச் செய்யும் முதல் அடியை எடுத்து வைத்திருக்கிறது.

**--- நன்றி : பிபிசி --**



# மறந்து, மறைந்து போகும் கதை
# நமது கதையை, கிராமத்தின் கதையை நாமே ஆவணப்படுத்த வேண்டும்



ஈழத்து முற்றத்தில் ஃபஹீமாஜஹான் எழுதிய ''மாய்வெல ஊரின் வரலாற்றுத் தகவல்கள்'' என்னும் பதிவை வாசிக்கக்கிடைத்தது. அதை வாசிப்பதற்கு சில நாட்களுக்கு முன் தான் எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய ''யாமம்'' வாசித்து முடித்திருந்தேன். அப் புத்தகத்தின் முன்னுரையில் எஸ். ரா ''எல்லா நகரங்களும் ஏதோ சில கதைகளைச் சுமந்து கொண்டிருக்கின்றன'' என்கிறார். எவ்வளவு உண்மையான வார்த்தைகள் அவை.

அவ் வார்த்தைகளின் அர்த்தத்தை ஃபஹீமாஜஹானின் பதிவின் ஊடாகவும் உணரக்கூடியதாக இருந்தது. ஃபஹீமாஜஹான் சொல்லியிருப்பதோ ஒரு ஊரின் சுயசரிதம். எஸ். ரா பேசுவதோ ஒவ்வொரு ஊரின் வெளிகளிலும், சாலைகளிலும், வீடுகளிலும், தோட்டங்களிலும், மயானங்களிலும், கோயில்களிலும், பாடசாலைகளிலும், அவ்வூரின் காற்றிலும் அலைந்து திரியும் கதைகளைப் பற்றியது. உலகில் எழுதப்படும் கதைகளின் ஆரம்பம் எங்கோ ஒரு ஊரின் ஒரு மூலையில் இருந்தே ஆரம்பிக்கிறது போலிருக்கிறது எனக்கு.

நான் முன்பு வட மேற்கு நோர்வேயின் ஒரு மிகச் சிறிய தீவில் வாழ்ந்திருந்தேன். எமது நகரசபையில் ஏறத்தாழ 4000 மக்களே வசித்தனர். எமது நகரசபையில் எறத்தாழ 4 கிராமங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று பாரம்பரியமாக வடதுருவத்தில் திமிங்கிலம், கடற்சிங்கம், துருவக்கரடி ஆகிய மிருகங்களை வேட்டையாடும் கடலோடிகள் வாழ்ந்திருந்த கிராமம்.

இன்றோ இந்தக் கிராமத்தில் அத் தொழிலில் ஈடுபடுபவர்கள் எவருமில்லை. அத்துடன் அந்தக் கிராமத்தில் 130 வீடுகளுக்கு மேல் நிச்சயமாக இல்லை. ஆனால் இன்று அவர்களின் பழமைவாய்ந்த வேட்டையாடும் கப்பல் ஒன்றை தரைக்கிழுத்து அதைச் சுற்றி மண்டபம் எழுப்பி அத்துடன் அதற்கருகே அருங்காட்சியகம் ஒன்றையும் நிறுவியிருக்கிறார்கள் அம் மக்கள். அருங்காட்சியகத்தில் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையையும் சுற்றாடலையும் அப்படியே புகைப்படங்களாகவும்,



காணொளிகளாகவும், பத்திரிகைகள், ஆவணங்கள், உடைகள், பொருட்கள், பதப்படுத்தப்பட்ட மிருகங்கள் என அது இரு மாடிகளைக் கொண்டிருக்கிறது. தங்கள் ஊரின் சுயசரிதத்தில் பெருமை கொண்ட மக்கள் இவர்கள்.

இந்தக் கிராமத்தில் பௌதீகவியல் ஆசிரியர் ஒருவர் இருக்கிறார். அவரின் பொழுது போக்கு கிராமத்தின் சுயசரிதத்தை ஆவணப்படுத்துவதே. 4 - 5 வருடங்களுக்கு ஒரு முறை 'கிராமத்தின் புத்தகம்' என்னும் புத்தகத்தை வெளியிடுவார். அதில் அக்கிராமத்தில் வாழும் அனைவரின் சரிதமும் இருக்கும். உதாரணமாக ஒருவரின் பெயரை எடுத்துக் கொண்டால் அன்னாரின் துணைவரின் பெயர், குழந்தைகளின்

**சஞ்சயன் செல்லமாணிக்கம்**

பெயர், குழந்தைகளின் துணைவர்களின் பெயர், பேரக் குழந்தைகளின் பெயர் என சகல விபரங்களும் இருக்கும். தவிர கிராமத்தில் நடந்த முக்கிய மாற்றங்கள் பற்றியும் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும்.

இதைத் தவிர 4 - 5 வருடங்களுக்கு ஒரு

## கிராமத்துக்கு ஒரு ஆவணக்காப்பகம் தேவை

முறை ''குடிபெயர்ந்தவர்களின் புத்தகம்'' என்றும் ஒரு புத்தகம் வெளியிடுகிறார். அதில் குடிபெயர்ந்தவர்களின் பெயர்கள், எங்கு குடிபெயர்ந்தார்கள் என்னும் விபரமும் இருக்கும்.

இவரைப் போன்றே ஒவ்வொரு கிராமத்திலும் யாரோ ஒருவர் தங்கள் ஊரின் சுயசரிதத்தை ஆவணப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.
அரசின் மக்கள் பதிவுத் திணைக்களத்தின் ஆதரவும், எழுத்தாளர்களின் ஆர்வமும், புத்தகங்களின் விற்பனையும் இந்த ஆவணப்படுத்தலை சாத்தியமாக்குகின்றன. அந்தச் சிறிய கிராமத்தின் சரித்திரத்தில் சில காலங்கள் அங்கு வாழ்ந்து வெளியேறிய எனது பெயரும் அப் புத்தகங்களினூடாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது எனக்கு மகிழ்ச்சியே.

அண்மையில் நோர்வேயின் உள்ளூர் சரித்திர நிறுவனம் என்னும் அரச நிறுவனம் ஒன்றின் ''குடிபெயர்ந்தவர்களின் சரித்திரம்'' என்னும் திட்டத்தில் சேர்ந்து பணியாற்ற அழைக்கப்பட்டிருந்தேன். சம்பளமற்ற வேலைதான் என்றாலும் மனதுக்கு இதமாய் இருந்ததால் ஒப்புக்கொண்டேன். ''நோர்வேக்கு தமிழர்களின் வருகையும் வாழ்வும்'' என்னும் தலைப்பில் ஒரு திட்டம் தொடங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் நாம் நோர்வேக்கு வந்த பொழுது எப்படி வாழ்ந்தோம், என்ன என்ன பொருட்களை கொண்டு வந்தோம், கடிதங்கள், புகைப்படங்கள்,காணொளிகள், ஒலி நாடாக்கள், கதைகள், கவிதைகள், இலக்கிய இதழ்கள், உடைகள் போன்றவற்றை தமிழர்களிடம் இருந்து சேகரித்து அரச செலவில் அவை மிகவும் உயர்ந்த பாதுகாப்புடன் பாதுகாக்கப்படும். அவை எனது குழந்தைகளின் குழந்தைகளுக்கு அல்லது அவர்களின் குழந்தைகளுக்கு பல கதைகள் சொல்லும். நம் ஊரில் காணாமல் போன கதைகளைப் போலிருக்காது இவை.

எமது ஊரின் சரித்திரத்தையும் கதைகளையும் நாம் ஆவணப்படுத்தாததால் தொலைத்துக் கொண்டிருக்கிறோம் ஆனால் புலம் பெயர்ந்து வந்த நாட்டில் அந் நாட்டினர் தமது சரித்திரத்தை ஆவணப்படுத்தி பாதுகாப்பதாக எமது சரித்திரத்தையும்
சேர்த்தல்லவா ஆவணப்படுத்துகிறார்கள். நாம் கற்றுக்கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது.

# அரங்கத்தில் மூழ்கிய கல்வி அதிகாரிகள் குழாம்!



**கிழக்கிலிருந்து வெளிவரும் மக்களின் அபிமான வாராந்த பத்திரிகையான அரங்கத்தை சம்மாந்துறை வலயக் கல்வி அதிகாரிகள் குழு மிக மும்முரமாக வாசித்துக்கொண்டிருப்பதைக் காணலாம்.**

**(படங்கள் வி.ரி.சகாதேவராஜா )**





# கட்டிளமைப் பருவ உளநல மாற்றங்கள் கல்வியில் ஏற்படுத்தும் தாக்கம்

கட்டிளமைப்பருவத்தில் பாடசாலையில் கல்விகற்கும் ஒரு மாணவன் எதிர்கொள்ளும் தேர்வுகளில் ஒன்று நுழைவாகவும் மற்றையது வாழ்க்கை தேர்வாகவும் அமைகின்றன.

கல்விப் பொதுதராதர சாதாரண தரம் உயர்தரத்துக்கான நுழைவாகவும் உயர்தர பரீட்சைகள் வாழ்க்கை தேர்வாகவும் அமையப் போகின்றன. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றில் பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழக கல்வி, தொழில்நுட்பக்கல்வி, கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி கலாசாலை, தாதியர் கல்லூரி என்பன இலவசம். இவை வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள, நடுத்தர வருமானமுள்ள குடும்பங்களிற்கு மிகப்பொருத்தமான பயனுடைய இடையீடாகும். பல அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலும், மேற்கத்தைய நாடுகளிலும் இவற்றை பணம் கொடுத்துத்தான் பெற்றாகவேண்டும்.

தரப்படுத்தல்கள், சமவாய்ப்பு அளிக்கப்படாமை, பாகுபாடு என்பன குறித்து சிறுபான்மையினர் குறைபட்டுக் கொண்டாலும் பெரும் தொகையாக உயர்நிலையில் இருக்கின்றவர்கள் அரசாங்க இலவச கல்விச் செயற்பாடுகள் ஊடாகவே அந்த நிலையை அடைந்துள்ளனர் என்பதை மறுக்கவில்லை. அரச பல்கலைக்கழகங்களுக்கு வெளியே இவற்றை அதிக செலவில்தான் கற்கமுடியும்.

**பாடசாலைப் பரீட்சைகள்:-**

--------------------------------------

கல்விப்பொதுத்தராதர சாதாரண

**இலவச கல்வி பெரிய வாய்ப்பாக இருந்தும் அதனை பயன்படுத்திக்கொள்வதில் விழிப்புணர்வு போதாது**

தரத்திற்கான ஆயத்தப்படுத்தல் ஆண்டு ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய மூன்று வகுப்புகளில் நடக்கின்றன. கட்டிளமைப்பருவ மாற்றங்களும் இவ்வயதிலேயே ஆரம்பமாகின்றன. இங்கு வகுப்பறைச் செயற்பாடுகள், பிரத்தியேக வகுப்புக்கள் என்பவற்றுடன் மாணவனின் சுயகற்றலும் மிக முக்கியமானது. ஒன்பது பாடங்களையும் சரியான முகாமைத்துவத்தில் கற்று வருகின்ற ஒரு மாணவனால் பரீட்சையை சரியாக எதிர்கொண்டு உயர்தரத்திற்கு பூரணதிருப்தி, சந்தோசம் மற்றும் உற்சாகத்துடன் நுழைய முடியும்.

**உயர்தர பாடத்தேர்வு:-**

--------------------------

கலை, வர்த்தகம், உயிரியல், கணிதம் அத்துடன் தொழிநுட்பம் ஆகிய ஐந்து துறைகள் உயர்தரத்தில் உண்டு. சிறுவயதுமுதல் ஒரே இலக்குடன் படிக்கின்ற மாணவனிற்கு தனது உயர்தரத்துக்கான துறையை தெரிவு செய்வது கடினமாக இருப்பதில்லை. அம்மாணவன் தனது விருப்பத்தை பெற்றோர், ஆசிரியர், உறவினரின் ஆசீர்வாதத்துடன் தொடர்கிறான். மாறாக பெற்றோரின் நிர்பந்தத்திற்கு அமைய உயர்தர பிரிவை, தெரிவு செய்யும் மாணவன் விருப்பமில்லாததொன்றை தேர்வு செய்ய நேரிட்டால், விரைவாக களைப்புற்று மனச்சோர்வு, நெருக்கீட்டு விளைவு, தற்கொலை முயற்சிகள், பரீட்சை தோல்விகளுடன் ஒதுங்கி போவதை காண்கிறோம்.

பொறுப்புள்ள பெற்றோர் தங்கள் கண்ணியம், குடும்ப கௌரவம் என்பவற்றிற்கு அப்பால், தமது பிள்ளையின் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் விருப்பத்திற்கு இசைந்து கொடுப்பது கட்டிளமைப்பருவ சிக்கல்களில் இருந்து மாணவர் விடுபட உதவும்.

சில வேளைகளில் மாணவர்கள் சில பாடங்களில் சித்தியடைவதற்கு அல்லது பொருத்தமான முடிவைப் பெற முதல்தடவையில் முடியாமல் போகலாம். பொறுப்புள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் பெறுபேறுகளிற்கு அமைய அவர்கள் உயர்தரம் கற்பதற்கான சந்தர்ப்பத்தையும், பரீட்சை எழுதுவதற்கான சூழ்நிலைகளையும் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். மாறாக 'சுற்று நிருபங்கள்' என்ற வரையறைக்குள் உள்ளடங்காத விடயங்களையும், உள்ளடக்கி மாணவர்கள் உயர் கல்வியில் புறகணிப்புக்களை எதிர்கொள்வதை தவிர்க்க வேண்டும். இவ்வருடம் உயர்வகுப்பு கலைப்பிரிவில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்காத நிலையில் மாணவி ஒருத்தி தற்கொலை செய்து கொண்ட நிகழ்வு வவுனியாவில் உள்ள பாடசாலையில் நடந்ததை மீண்டும் ஒரு தடவை நினைவில் கொள்வது பொருத்தமானது.

சுற்று நிருபத்தை சரியாக புரிந்துகொள்ளாமல் ஒரு மாணவிக்கு உயர்தர கல்வியை ஆசிரியர்கள் மறுத்த சம்பவம் ஒன்றில் நாம் தலையிட்டதால், அந்த மாணவிக்கு கல்வியை தொடர வாய்ப்பு கிடைத்த சம்பவம் ஒன்று மட்டக்களப்பில் நடந்தது. அந்த மாணவியின் விடயத்தில் எமது தலையீடு இல்லாது போயிருந்தால், அந்த மாணவியின் பெற்றோருக்கு போதிய கல்வி அறிவு இல்லாத சூழ்நிலையில், ஆசிரியர்களின் புறக்கணிப்பால் அந்த மாணவி கல்வியை இடைநிறுத்த நேர்ந்திருக்கும்.

**பரீட்சைக்கு தயார்ப்படுத்தல்:-**

--------------------------------------

கட்டிளமைப்பருவத்தினர் கல்வி கற்கும் முறையும் சரியான நேர அட்டவணை, பாடங்களிற்கு கொடுக்கும் முக்கியத்துவம், சுயகற்றல், கடந்தகால பரீட்சை வினாக்களை

**கற்றலுக்கான தயார்படுத்தல் மற்றும் திட்டமிட்ட முன்னேற்பாடுகள் நல்ல பலனைத் தரும்**

சரியான நேரத்திற்குள் செய்வது, துரித மீட்டல், சேர்ந்து கற்றல் என்பனவும் பரீட்சைகளை நல்ல முறையில் எதிர்கொண்டு, எதிர்ப்பார்க்கின்ற பெறுபேற்றை அடைவதற்கு ஏதுவாக அமைகின்றது.

அடுத்துவரும் இரண்டு மாணவர்கள் பரீட்சைக்கு தயார்ப்படுத்தும் முறையைக்



கொண்டு சரியான வழியை பின்பற்ற உங்கள் பிள்ளைகளிற்கும் வழிகாட்டுங்கள். பலர் அதனை ஏற்றுக்கொள்வார்கள். சிலர் தமது வழியில் சென்று அடுத்த தடவை தமது பிழைகளை உணர்ந்து இரண்டாவது தடவை சரியான வழிக்கு வருவார்கள்.

-- டாக்டர் . ஜூடி ரமேஸ் ஜெயக்குமார்,
சிரேஷ்ட
உளநல மருத்துவர் --

**சம்பவம் (1)**
சுதாகரன் ஆண்டு × 11 ல் கல்வி கற்கிறான், அவன் பின்வருமாறு கூறுகிறான்.

'ஆசிரியர் வகுப்பில் கற்பிக்கும் பாடங்களை முன்வரிசையில் அமர்ந்து கூர்மையாக செவிமடுப்பேன். ஏற்படும் சந்தேகங்களை, பாட இறுதியில் கேட்டு விளங்கிக் கொள்வேன். கற்ற விடயங்களை அன்றைய தினமே 'அசைபோட்டு' மீட்டுக்கொள்வேன். ஒரு சில நாட்கள் கடந்த பின்பு, எனது அறையின் நாற்காலியில் அமர்ந்து அப்பாடங்களை மீண்டும் மனதிற்குள் நினைத்துக்கொள்வேன், மறந்தவற்றை மீள பக்கங்களைப் புரட்டி ஞாபகப்படுத்துவேன். நான் ஒருபோதும் தொடர்ந்து மணிக்கணக்கில் ஒரே இடத்தில் இருந்து படிப்பதில்லை. நாற்பத்தைந்து நிமிடங்கள் வரை படித்து அதன்பின் பத்துநிமிடம் வரை விரும்பிய பாடல்களை கேட்பேன். எனது வகுப்பாசிரியர்கள் மூளை உள்வாங்கும் விடயங்கள், தொடர்ந்து கற்பதால் வரும் விளைவுகளைப்பற்றி கூறியது மிகப்பொருத்தமானது.

நான் மாதாந்தம் போட்டுக்கொள்கின்ற நேரசூசியின் படியே படிக்கிறேன். வீட்டில் உள்ள சிறிய வேலைகள் குசினி வேலைகள், ஆடை கழுவுதல் போன்ற வேலைகளையும் செய்கிறேன். நான் படிக்கும் பாடங்களில் சுருக்க குறிப்புக்கள் எடுத்தக் கொள்வேன், பின்பு ஓய்வு நேரங்களில் அவற்றை மீட்டுப்பார்ப்பேன். அத்துடன் எனது நல்ல நண்பருடனும் அவற்றை கலந்துரையாடுவேன். எனக்கு தெரிந்த பாடங்களை, ஏனையோருக்கு சொல்லிக் கொடுப்பேன். அதன் மூலம் அப்பாடங்களை ஞாபகத்தில்வைத்திருக்க முடியும். ஆலயம் சென்று கடவுளை வணங்குகிறேன். ஒவ்வொருநாளும் ஒருமணிநேரம் கிரிக்கெட் விளையாடுகிறேன். காலையில் 30 நிமிடங்கள் யோகாசனம், மூச்சுப்பயிற்சி, தியானம் செய்கிறேன். இதனால் பரீட்சையை குறித்த பயம், பதற்றம் ஒன்றும் எனக்கு இல்லை. சராசரியாக 80 வீதம் புள்ளிகள் ஒன்பது பாடங்களிலும் பெற்று வருகின்றேன். சாதாரண தரத்தில் ஒன்பது பாடங்களிலும் 'A" சித்திபெற்று உயர் தரத்தில் கணிதப்பிரிவில் கற்று விமான பொறியியலாளராக வருவதே எனது கனவாகும்.

**சம்பவம் (2)**
பிறிதொரு பெண்கள் உயர்கல்லூரியில் கல்விகற்கின்ற கௌரி, இவ்வருட சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றுகிறாள்,

'நான் கடந்த இரண்டு மாதமாக பாடசாலை செல்வதில்லை. வீட்டிலேயே இருந்து கற்கிறேன் பெற்றோர் பிரத்தியேக வகுப்புகளை வீட்டிலேயே ஒழுங்குப்படுத்தியுள்ளனர். பகல் முழுவதும் ரியூசன். இரவில் தொடர்ச்சியாக ஆறு மணித்தியாலங்கள் படிக்கிறேன். பொழுதுபோக்கு, நண்பர்கள் மிகக்குறைவு பரீட்சையை குறித்து அதிக பயமாக இருக்கிறது. படித்த பாடங்கள் ஞாபகத்திற்கு வருவதில்லை. சித்தியடைவேனோ என்ற பயம் அதிகமாக உள்ளது. பெற்றோர் வைத்தியராக வரவேண்டும் என்று கூறிக்கொள்கின்றனர். கடவுள் நம்பிக்கையும் குறைவாக உள்ளது. தொடர்ச்சியாக படிப்பதால் தலையிடி, நாரிப்பிடிப்பு ஏற்படுகின்றது, நெஞ்சடைப்பு சிலவேளைகளில் இதயதாக்கு ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தையம் ஏற்படுத்துகின்றது. இருந்தும் என்ன பிரயோசனம்? தோற்றுவிட்டால் குடும்ப கௌரவம், பெற்றோரின் எதிர்பார்ப்பு அவர்கள் செலவு செய்த பணம் இவை அடிக்கடி மனதிற்குள் வந்து எனது நிம்மதியை குழப்புகின்றன.

இருவரில் எவரால் பரீட்சையில் நல்ல முடிவை பெற முடியும் என்பதை நீங்களே ஊகியுங்கள்.



# துப்பாக்கி பறித்த உயிர்கள் சில...




இது ஒரு சிறிய தகவல்தான். பின்வரும் பட்டியலில் உள்ளவர்களின் உயிர்களை பலரது துப்பாக்கிகள் பறித்தன. அதற்காக சிலருக்கு பதவியும், பதவி உயர்வும் கிடைத்ததாக குற்றச்சாட்டுக்களும் உள்ளன.

சந்தேக நபர்கள் சிலருக்கு நம் தமிழ் மக்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தை அளித்துள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

வாழ்க தமிழ் மக்கள்! வாழ்க வாழ்கவே!

**துயரப்பட்டியலின் விபரம் இதோ**

| பெயர் | இடம் | திகதி |
|---|---|---|
| மாலா இராமச்சந்திரன் (எம்.எம்.சி) | மட்டக்களப்பு | 01-09-1983 |
| சந்திரா பெர்னான்டோ (பாதர்) | மட்டக்களப்பு | 06-06-1988 |
| வணசிங்கா (மாஸ்டர்) | மட்டக்களப்பு | 31-03-1989 |
| சாம் தம்பிமுத்து (எம்.பி) | கொழும்பு | 07-05-1990 |
| கலா தம்பிமுத்து (சமூக சேவையாளர்) | கொழும்பு | 16-05-1990 |
| செழியன் பேரின்பநாயகம் (மேயர்) | மட்டக்களப்பு | 10-09-2000 |
| நிமலன் சௌந்தரநாயகம் (எம்.பி) | மட்டக்களப்பு | 07-11-2000 |
| குமாரவேல் தம்பையா (விரிவுரையாளர்) | மட்டக்களப்பு | 24-05-2004 |
| ஐயாத்துரை நடேசன் (நிருபர்) | மட்டக்களப்பு | 31-05-2004 |
| கிங்சிலி இராஜநாயகம் (எம்.பி) | மட்டக்களப்பு | 19-10-2004 |
| அரியநாயகம் சந்திரநேரு (எம்.பி) | வெலிக்கந்தை | 07-02-2005 |
| யோசேப் பரராஜசிங்கம் (எம்.பி) | மட்டக்களப்பு | 25-12-2005 |
| தர்மரெட்ணம் சிவராம் (பத்திரிகையாளர்) | கொழும்பு | 24-04-2005 |
| ரட்ணம் ரட்ணராஜா (மனிதாபிமான பணியாளர்) | மட்டக்களப்பு | 26-05-2006 |
| சுப்பிரமணியம் சுகிர்தராஜன் (பத்திரிகையாளர்) | திருகோணமலை | 24-01-2006 |
| காசிநாதர் கணேசலிங்கம் (மனிதாபிமான பணியாளர்) | வெலிக்கந்தை | 29-01-2006 |
| தங்கராஜா கதிர்காமர் (மனிதாபிமான பணியாளர்) | வெலிக்கந்தை | 29-01-2006 |
| செல்வி. தனுஸ்கோடி பிறேமினி (மனிதாபிமான பணியாளர்) | வெலிக்கந்தை | 30-01-2006 |
| தம்பிராஜா வசந்தராஜன் (மனிதாபிமான பணியாளர்) | வெலிக்கந்தை | 30-01-2006 |
| சண்முகநாதன் சுஜிந்திரன் (மனிதாபிமான பணியாளர்) | வெலிக்கந்தை | 30-01-2006 |
| கைலாசபிள்ளை ரவீந்திரன்(மனிதாபிமான பணியாளர்) | வெலிக்கந்தை | 30-01-2006 |
| அருணேசராசா சதீஸ்கரன் (மனிதாபிமான பணியாளர்) | வெலிக்கந்தை | 30-01-2006 |
| வன்னிய சிங்கம் விக்னேஸ்வரன் (எம்.பியாக நியமனம் பெற இருந்தவர்) | திருகோணமலை | 07-04-2006 |
| கிருஸ்ணப்பிள்ளை கமலநாதன் (மனிதாபிமான பணியாளர்) | வெலிக்கந்தை | 02-07-2006 |
| பிறிமஸ் ஆனந்தராசா (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| மாதவராசா கேதீஸ்வரன் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| ஜி. சிறிதரன் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| நர்மதன் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| ஆர். அருள்ராஜ் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| பு. பிரதீபன் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| எம். ரீங்சீசன் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| வை. கோடீஸ்வரஸ் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| செல்வி. கோவர்த்தனி (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| செல்வி. றோமிலா (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| செல்வி. வி.கோகிலவதனி (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| செல்வி. ஜி.கவிதா (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| எஸ்.கணேஸ் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| ஏ.ஜீசிலன் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| கே. கோணேஸ்வரன் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| த.முரளிதரன் (மனிதாபிமான பணியாளர்) | மூதூர் | 04-08-2006 |
| ரகுநாதன் ராமலிங்கம் (மனிதாபிமான பணியாளர்) | திருகோணமலை | 20-08-2006 |
| கலாநிதி பாலசுகுமார் (விரிவுரையாளர்) | மட்டக்களப்பு | 30-09-2006 |
| முத்துராஜா அருளேஸ்வரன்(மனிதாபிமான பணியாளர்) | வெலிக்கந்தை | 24-03-2007 |
| எஸ். தியாகச்சந்திரா (சமூக சேவையாளர்) | மட்டக்களப்பு | 20-08-2007 |
| தில்லையம்பலம் பரமலிங்கம் (சமூக சேவையாளர்) | மட்டக்களப்பு | 02-09-2007 |
| பரசுராமன் நந்தக்குமார் (தொழிற்சங்கவாதி) | மட்டக்களப்பு | 07-01-2008 |

கிழக்குமாகாணத்துக்கள் படுகொலை செய்யப்பட்டவர;களின் பட்டியலில் சிறிதளவே தந்திருக்கிறேன். இடம் போதாமை காரணத்தால் தொடரைத் தொடர முடியாமல் இத்தோடு நிறுத்திக்கொள்கிறேன். **போதுமடா சாமி.**

# கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் இடைக்கால நிர்வாகம் தெரிவு

தொடர்ச்சி

அந்தந்த மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பெற்றனர்
இணைப்பாளர்களும் மாவட்டக் குழுக்களும் இணைந்ததான ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு கிழக்குத் தமிழர் ஒன்றியத்திற்கு ஏற்படுத்தப்பெற்றுள்ளதாகக் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் இணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இணைப்பாளர்களுடன் மாவட்டக் குழுக்கள் இணைந்து பிரதேச செயலாளர் பிரிவு மட்டக் கட்டமைப்புகளை எதிர்காலத்தில் ஏற்படுத்துவதுடன் கிராம சேவகர் பிரிவு மட்டக் குழுக்களும் உருவாக்கம் பெற்று இணைப்பாளர்கள் >> மாவட்டக் கட்டமைப்புகள் >> பிரதேசயெலாளர் பிரிவு மட்டக் கட்டமைப்புகள் >>
கிராம சேவகர் பிரிவு மட்டக் குழுக்கள் எனத் தொடுக்கப்பெற்ற வலைப்பின்னல் ஊடாகக் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பெறும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் விபரம் கூறுகையில், கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் உத்தேச வேலைத்திட்ட வரைபும் இக்கூட்டத்தில் இறுதிப்படுத்தப்பெற்று அங்கீகரிக்கப் பெற்றுள்ளதாகவும் இது அச்சிடப்பெற்று பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும், மாவட்டக் குழுக்கள் வினைத்திறனுடன் செயலாற்றுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்திலுள்ள துறைசார் நிபுணர்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்களை உள்ளடக்கிய 'வழிகாட்டல் குழு' (Stirring Committee) க்கள் ஏற்படுத்தப் பெற்றுச் செயற்படவுள்ளதாகவும் தெரிவித்தனர்.
கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் உடனடியான செயற்பாடு எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சார்பில் அதிஉச்ச பட்ச ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒரு பொதுச் சின்னத்தில் கீழ் ஒன்றிணைத்து ஒரே அணியில் போட்டியிட வைப்பதற்காக மக்களைத் தயார்ப்படுத்தல் ஆகும் எனவும் இணைப்பாளர்கள் மூவரும் கூட்டாகத் தெரிவித்தனர்.

அரங்கம் FM

# முன்பக்கமிருந்தும் பின்பக்கமிருந்தும் வாசித்தால் ஒரே உச்சரிப்பை தரும் சொற்கள் கருத்துக்கள் உட்பட

-- யோசப் டொரிங்டன் ஸ்பெக் --


| | | |
|---|---|---|
| 01 | க.்.க | கால் பலம் |
| 02 | கடுக | விரைவாக |
| 03 | கிரகி | 01. பற்றிக்கொள்<br>02. ஏற்றுக்கொள்<br>03. உணர்ந்து கொள்<br>04. குறிப்பால் உணர்ந்துகொள் |
| 04 | குகு | 01. அமாவாசை<br>02. தசை நாடிகளில் ஒன்று |
| 05 | குடகு | குடகு நாடு |
| 06 | குருகு | 01. குட்டி 02.குருந்து<br>03. நாரை 04.மூக்கு<br>05. அன்றில் பறவை 06. துருத்தி<br>07. குருக்கத்துக் கொடி |
| 07 | குழகு | 01. இளமை 02. அழகு<br>03. பச்சிளங் குழந்தை |
| 08 | குளகு | மகளிர் அணியும் தழை உடை |
| 09 | குறுகு | குறைதல் |
| 10 | சீச்சீ | 01. இகழ்ச்சி<br>02. வெறுப்பு உணர்வுகளை காட்டும் குறிப்பு மொழி |
| 11 | தகாத | 01. தகுதியற்ற<br>02. முறையற்ற<br>03. தரக்குறைவான<br>04. அசிங்கமான |
| 12 | தாத்தா | 01. தாய் அல்லது தந்தையின் தந்தை<br>02. வயதானவர் 03. கிழவர்<br>04 பாட்டன் 05. வயது முதிர்ந்தவர் |
| 13 | தாதா | 01. தந்தை 02. பிரமன்<br>03 பெருங்கொடையாளன்<br>04 பாட்டன் 05. பெரியோன்<br>05 கொடையாளன் 07. சூரியதேவன்(தாந்துரு) |
| 14 | திகதி | 01. தேதி 02. நாள் |
| 15 | தித்தி | 01. துருத்தி 02. தேமல்<br>03.இன்பம் 04. ஒரு வாத்தியம் |
| 16 | திதி | 01. அமாவாசை பௌர்ணமி ஆகியவற்றுக்குப் பிறகு வரும் காலத்தைப் பிரித்த பிரிவுகளில் ஒன்று.<br>02. இறந்து போன உறவினரின் அவர் இறந்த தினத்தன்று நடாத்தப்படும் சடங்கு.<br>03. நிறைபேறு<br>04. காப்பு |
| 17 | விகடகவி | 01. நகைச்சுவைப்பாடல்<br>02. நகைப்பு விளைவிப்பவன் |

**அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்து உங்கள் வணிகத்தை பெருக்குங்கள்**

- கிழக்கில் இருந்து கிழக்கு மக்களுக்காக வாராவாரம் வரும் இலவசப் பத்திரிகை இது.
- இதில் விளம்பரம் செய்வதன் மூலம் உங்கள் தகவல்கள் கூடுதலான மக்களை சென்று சேரும்.
- அதன் மூலம் எமது மக்களின் தகவல் பசியைத் தீர்க்கும் முயற்சிக்கும் நீங்கள் உதவ முடியும்.

070 300 900 1 065 222 911 2

## உங்களுக்குத் தெரியுமா?



முற்காலத்தில் மக்கள் கணக்கிடுவதற்கு தங்கள் விரல்களையும் கூழாங்கற்களையும் பயன்படுத்தினர். இருந்தாலும் அவர்களுக்கு அது மிகவும் சிரமமாகவே இருந்தது. இதற்காக அவர்கள் முதன் முதலில் கண்டுபிடித்த உபகரணமே அபாகஸ்(Abacus) என்பதாகும். இது முதன் முதலில் சீனாவிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு மரவிலாகை, கற்கள் பயண்படுத்தப்பட்டன.

அமைப்பு :- இது 2 தொகுதிகளை கொண்டது. மேல் தொகுதியில் ஒரு தடியில் இரண்டு கற்களும் கீழ் தொகுதியில் ஒரு



தடியில் ஐந்து கற்களும் காணப்பட்டன.

இதன் பின் 1642 பிரான்ஸின் கணிதவியலாளர் பிளேஸ் பஸ்கால்(Blaise Pascal) கணிகருவி ஒன்றை கண்டுபிடித்தார். இதில் பல சக்கரங்கள் ஒன்றாகவும்



தொடராகவும் அமைக்கப்பட்டிருந்தன. இது 999,999 இற்கு மேற்பட்ட இலக்கங்களை காட்டும்.

மின்னணுக்கள், நவீன கணிகருவி என்பவற்றை சிறியதாகவும்



விரைவானதாகவும் முன்னேற்றி உள்ளனன. இன்று சூரிய ஒளிச்சக்தியில் இயங்கும் கணிகருவி மற்றும் கருத்து வெளியீடு மூலம் விடை தரும் கணிகருவி என்பவை உலக நாடுகளிடையே அதிகம் பயண்படுத்தப்படுகின்றன.

தனுஷா தர்மேந்திரன்
மட்/வின்சன்ட் மகளீர் உயர்தர தேசிய பாடசாலை – தரம் 09




## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

-- முருகபூபதி அவுஸ்திரேலியா --

# தமிழர்களுக்கு கண்ணகி அம்மன் ! சிங்களவர்களுக்கு பத்தினி தெய்யோ !

மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம் என்பன ஐதீகங்களாக போற்றப்பட்டாலும், இவற்றில் வரும் பெண்பாத்திரங்களுக்கு கோயில்கள் அமைத்து வழிபடும் மரபும் தொன்றுதொட்டு நீடிக்கிறது.

இந்தக்காவியங்களில் வரும் ஆண் பாத்திரங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள்தான். மகாபாரதத்தில் குந்தி முதல் பாஞ்சாலி வரையிலும், இராமாயணத்தில் சீதையும், சிலப்பதிகாரத்தில் கண்ணகியும் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள்தான்.



### மட்டக்களப்பு கன்னன்குடா திருவிழாவும் 'கூடல்' சிறப்பு மலரும்

குந்தியைத்தவிர ஏனைய மூவரும் வழிபாட்டுக்குரியவர்களாகிவிட்டனர்.

இலங்கையில் திரௌபதை அம்மன், கண்ணகி அம்மன், சீதை அம்மன் கோயில்கள் அமைத்து தமிழர்களும் பௌத்த சிங்களவர்களும் வழிபடும் மரபும் தொடர்ந்து பண்பாட்டுக்கோலமாகவே மாறிவிட்டதை காணமுடிகிறது.

சிலப்பதிகாரத்தில் வரும் மாதவியின் மகள் மணிமேகலையும் மக்களிடத்தில் காவியமாகியிருக்கிறாள். மணிமேகலை தமிழ்க்காப்பியம் மட்டுமல்ல, அது பௌத்த காப்பியமும்தான் என்று நிறுவுகிறார் தமிழக எழுத்தாளர் பேராசிரியர் அ. மார்க்ஸ். (ஆதாரம்: தீராதி 2017 ஜூன்)

இலங்கையில் கண்ணகி வழிபாடு, திரௌபதை அம்மன் வழிபாடு என்பன கிழக்கிலங்கையில் மிகவும் முக்கியத்துவமாகியிருக்கிறது.

இராவணன் சீதையை கவர்ந்து வந்து அசோகவனத்தில் சிறைவைத்தமையால் அங்கு சிங்கள மக்களால் சீதாஎலிய என்னுமிடத்தில் சீதை அம்மனும், வடமேற்கு இலங்கையில் உடப்பு மற்றும் கிழக்கிலங்கை பாண்டிருப்பில் தமிழர்களினால் திரௌபதை அம்மனும், கன்னன் குடாவில் ரீகண்ணகி அம்மனும் குடியிருக்கிறார்கள்.

பாரத நாட்டில் தோன்றிய காவிய மாந்தர்களில் குறிப்பாக பெண்களுக்காக இலங்கையில் இரண்டு தேசிய இனங்கள் வழிபாட்டு மரபை தோற்றுவித்திருப்பதன் பின்னணி விரிவான ஆய்வுக்குரியது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர், கன்னன்குடா நோக்கி பயணமானோம். அப்பொழுது நண்பர் ' செங்கதிரோன்' கோபாலகிருஷ்ணன் எனக்குத்தந்த 'கூடல்' சிறப்பு மலர் பல தகவல்களைச் சொன்னது. இந்தப்பயணத்தில் நண்பர் பேராசிரியர் செ. யோகராசாவும் எம்முடன் இணைந்துகொண்டார்.

மட்டக்களப்பு வாவியைக்கடந்து படுவான்கரையை நோக்கி நண்பரின் கார் பயணித்தது. கன்னன்குடா ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தை வந்தடையும்போது இரவு பத்துமணியும் கடந்துவிட்டது.

பக்தர்கள் நிறைந்திருந்தனர். பறவைக்காவடியில் சிலர் வந்தனர். அந்தக்காட்சி அங்கிருந்த பக்தர்களை மெய்சிலிர்க்கச் செய்திருக்கலாம். நீண்ட இடைவெளிக்குப்பின்னர் அக்காட்சியை பார்த்து மனதிற்குள் வருந்தினேன். தம்மை வருத்தி இப்படியும் நேர்த்திக்கடனா..?

திரௌபதை அம்மன் கோயில் முன்றல்களில் தீமிதிப்பு. உடப்பு பிரதேசத்தில் அதனை பூமிதிப்பு என்பார்கள். இரண்டு நேர்த்திக்கடன்களுமே தம்மை வருத்திக் கொள்ளும் செயல்கள்தான்.


பெண் தெய்வங்கள் இப்படியும் ஆண்களை பழிவாங்குகின்றனவா...?

சீதையை இராமன் தீக்குளிக்கவைத்தான்.

பாஞ்சாலியை துச்சாதனன் துகிலுரிந்தான்.

கண்ணகியின் கணவனை பாண்டியன் சிரச்சேதம் செய்வித்தான்.

பெண்களின் சோகம் நிரம்பிய ஐதீகக்கதைகளை காவியங்களாக எழுதிவிட்டுச்சென்றிருப்பவர்களும் ஆண்கள்தான். இன்று காலம்காலமாக ஆண்கள் தீமிதிக்கும், வேல் குத்தி பறவைக்காவடி எடுத்தும் முன்னோர்கள் செய்த பாவங்களை




கழுவிக்கொண்டிருக்கிறார்களோ...? என்றும் அந்த ஆலய முன்றலில் இருந்து யோசித்தேன். எனினும் எனது யோசனையை வெளியே பகிர்ந்துகொள்வதற்கு தயக்கமிருந்தது!

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஏன் கண்ணகி விழா கொண்டாடப்படுகிறது? என்பதற்கு 'கூடல்' முதலாவது மலர் ( பரல்: 1) கூறும் செய்தியை பார்ப்போம்.

' தமிழ் மண்ணோடும் தமிழ் மரபோடும் இணைந்த கதை கண்ணகி கதை. அவளின் திண்மையும், தீரமும் நிறைந்த வாழ்வும் மக்கள் நலன் நாட்டமும் அவளை மக்களின் தெய்வமாக்கின.

சோழ நாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து, சேர நாட்டில் தெய்வீகமான கண்ணகி, ஈழநாட்டில் சிங்கள தமிழ் மக்களின் மத்தியில் வழிபாட்டிற்குரிய தெய்வமானாள்.

பின்னாளில் கண்ணகி ' கண்ணகையம்மன்' என கிழக்கிலங்கையில் நிலைபெற்றுவிடுவதுடன், கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும் ஆகிவிடுகின்றாள். கிழக்கிலங்கையில் வைகாசித் திங்கள் அவளுக்குரியதாகும். இதன்போது கிழக்கிலங்கை விழாக்கோலம் பூணும்.

மக்கள் தெய்வமான கண்ணகியின் கதை சிலப்பதிகாரம், சிலம்பு கூறல், கண்ணகி காவியம், கண்ணகி வழக்குரை, குளுத்திப்பாடல், கண்ணகையம்மன் நாடகம், கண்ணகி வசந்தன், கும்மி, கரகம், காவடி, கொம்பு முறிப்பு, குரவைக்கூத்து என தமிழில் கண்ணகி கலை, இலக்கியமாக விரிந்துள்ளது.

இவ்வாறு ஒரு எழுத்துமூல பட்டயத்தை மக்கள் மத்தியில் பிரகடனப்படுத்தியிருக்கும் கண்ணகி கலை இலக்கிய கூடல் அமைப்பின் நடப்பாண்டு காப்பாளர் பேராசிரியர் சி. மௌனகுரு. துணைக்காப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம். தலைவர் செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன். செயலாளர் அ. அன்பழகன் குரூஸ். பொருளாளர் ச. ஜெயராஜா. இவர்கள் தவிர ஆண்களும் பெண்களுமாக மொத்தம் 59 செயற்குழு உறுப்பினர்களும் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

கண்ணகி கலை, இலக்கிய விழாக்களின் பிரதான நோக்கம், தமிழ்ச்சமூகத்தைக் குறிப்பாகக் கிழக்கிலங்கைத் தமிழ்ச்சமூகத்தைச் சாதி, மத, பிரதேச, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு பண்பாட்டுத்தளத்தில் ஒன்றிணைத்து, அவர்களைச் சமூக - பொருளாதார - கல்வி - கலை - இலக்கிய - ஆன்மீக மேம்பாட்டை நோக்கி அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்துவதாகும் எனச்சொல்கிறார் இந்த அமைப்பின் தலைவர் செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன்.

'சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகி வழக்குரையை இலக்கியமாக சமூகவியலாக வரலாறாக இசை நடனம் கூறும் காவியமாக தொன்மமாக ஒரு சமூகத்தின் உளவியலையும் கூட்டு மனோநிலையையும் அறியும் ஆவணமாகப் பார்ப்பது அவசியம்.' என்கிறார், கண்ணகி விழாக் கருத்தரங்குகளை நெறிப்படுத்தும் பேராசிரியர் மௌனகுரு.

எனக்கு இந்தப்பயணத்தில் கிடைத்த கண்ணகி விழா தொடர்பான ஆவணங்களை படிக்கின்றபோது தமிழகத்தில் கலைஞர் கண்ணகிக்கு சிலை வைத்த நிகழ்வும், பின்னர் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் மெரீனா கடற்கரையிலிருந்து அச்சிலை பெயர்தெடுக்கப்பட்ட சம்பவமும் நினைவுக்கு வருகின்றன.

கிழக்கிலங்கையில் கண்ணகி இலக்கிய மாணாக்கருக்கு ஆய்வுக்குரியதாகவும், தமிழகத்தில் அரசியல்வாதிகளுக்கு அரசியலுக்குரியதாகவும் மாறியிருக்கிறாள்.

கண்ணகி சிலை அப்புறப்படுத்தப்பட்டபோது கலைஞர் வெகுண்டதை பார்த்துவிட்டு எனது நண்பரான பரீக்ஷா ஞாநி, ஒரு வார இதழில் கண்ணகியும் கரடி பொம்மையும் என்ற தலைப்பில் கலைஞரை சிறுகுழந்தைகளுக்கு ஒப்பிட்டு எழுதி எதிர்வினைகளைச்சந்தித்தார்.

குழந்தைகளுக்கு கரடிபொம்மை எப்பொழுதும் விளையாட்டுப்பொருள். கலைஞர் இத்தனை வயதிற்குப்பின்னரும் கண்ணகியை வைத்து விளையாடுகிறார் என்ற தொனியில் ஞாநியின் அந்தப்பத்தி அமைந்திருந்தது.

நல்லை நகர் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என்ன செய்தார்...? என்ற சுவாரஸ்யமான



செய்தியை ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை ஒரு தடவை எழுதியிருந்தார்.

நாவலர் காலத்தில் வடபகுதியில் கண்ணகி வழிபாடு தீவிரமாக இருந்திருக்கிறது. சைவமரபில் வந்திருக்கும் அவர், தமிழகத்தின் வாணிபச்செட்டிச்சிக்கு இங்கு வழிபாடா...? என்று படிப்படியாக அந்த மரபை மாற்றியிருக்கிறார். அதனால் வடபகுதி கண்ணகி அம்மன்கள் வேறு அம்மன்களாக உருமாறிவிட்டனர் என்ற கருத்தும் நிலவுகிறது என்றார் பொன்னுத்துரை.

ஆனால், கிழக்கிலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு கண்ணகி தெய்வமாகியிருப்பதுடன், சிங்கள மக்கள் மத்தியிலும் பத்தினி தெய்யோவாக மாறிவிட்டாள்.

ஒரு தடவை கண்ணகி விழா தொடர்பான பண்பாட்டு ஊர்வலங்களை நடத்துவதற்கு பொலிஸாரின் அனுமதியை கோருவதற்கு கோபாலகிருஷ்ணன் சென்றபோது, வழக்கமான தமிழ் எழுச்சி ஊர்வலமோ ? என்ற சந்தேகத்தில் அனுமதி வழங்குவதற்கு பொலிஸ்தரப்பில் தயக்கமிருந்ததாம்.

'பத்திதெய்யோட்டதமய் மே உத்சவய' எனச்சொல்லி விளக்கியதும் பயபக்தியுடன் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த காவலர்கள்.

கண்ணகியின் கதை ஐதீகங்களும் ஏராளமான உப கதைகளும் நிரம்பியது. இந்தப்பத்தி எழுதுவதற்கு முன்னர் சிலப்பதிகாரம் பற்றி சற்று ஆராய்ந்தேன். எனக்கு தலை சுற்றியது. ஒன்றுக்கொன்று முரணான தகவல்களின் களஞ்சியமாக அது திகழ்கிறது.

சிலப்பதிகாரத்திலும் உறைபொருளும் மறைபொருளும் நிறைந்திருக்கிறது.

கன்னன்குடா ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடு இரவும் கடந்து, நடக்கவிருந்த கவியரங்கிற்காக பக்தர்கள் காத்திருந்தார்கள்.

எமது சமூகத்தில் காவியமாகவும் தெய்வங்களாகவும் மாறிவிட்ட சீதையும், பாஞ்சாலியும், கண்ணகியும் எனது இலக்கியப்பார்வையில் மறுவாசிப்புக்குரியவர்கள்.

இந்தப் பெண்களைப் போன்ற பாத்திரங்கள் எமது சமூகத்தில் இன்றும் வாழ்கின்றமையால் அந்தக்காவியங்களும் இன்றும் வாழ்கின்றன.

(பயணங்கள் தொடரும்)


வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த
சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
ஓம் விஸ்வப் பிரம்மனே நமக
ஐஸ்வர்யம் மிகு
அக்ஷயதிருதியை
சுபா
கோல்ட் ஹவுஸ்
அக்ஷயதிருதியை
முன்னிட்டு விஷேட
விலைக்கழிவும்
பரிசுப்பொருட்களும்
வழங்கப்படும்.
02A, முனை வீதி, 1ம் குறுக்கு, மட்டக்களப்பு.
T.P:065-2224713 FAX:065-2223431
2018 ஆம் ஆண்டின் மிக முக்கியமானதும் சிறப்பு வாய்ந்ததுமான நாள்
அக்ஷயதிருதியை நாளாகும்.
பிறந்துள்ள விளம்பி வருசம் சித்திரை ஐந்தாம் நாள்
2018.04.18 புதன்கிழமை
ஐஸ்வர்யம் பெருகும் அக்ஷயதிருதியில்
உங்கள் இல்லங்களில்
செல்வம் செழிக்க நகைகளை கொள்வனவு
செய்வதற்கு எம்மை நாடுங்கள்.
தங்கள் அனைவரையும் இத்தினத்தில்
அன்புடன் அழைக்கின்றோம்.
ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன்
செய்து தரப்படும்.
அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்.
நம்பிக்கை! நாணயம்!! நேர்மை!!!


வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த
சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
ஓம் விஸ்வப் பிரம்மனே நமக
ஐஸ்வர்யம் மிகு
அக்ஷயதிருதியை
ஸ்ரீ கிருஷ்ணா
கோல்ட் ஹவுஸ்
இல.55 பிரதான வீதி, செங்கலடி.
T.P:065-2240139, 065-2240873
2018 ஆம் ஆண்டின் மிக முக்கியமானதும்
சிறப்பு வாய்ந்ததுமான நாள் அக்ஷயதிருதியை நாளாகும்.
பிறந்துள்ள விளம்பி வருசம் சித்திரை ஐந்தாம் நாள்
2018.04.18 புதன்கிழமை
ஐஸ்வர்யம் பெருகும் அக்ஷயதிருதியில்
உங்கள் இல்லங்களில்
செல்வம் செழிக்க நகைகளை
கொள்வனவு செய்வதற்கு
எம்மை நாடுங்கள்...
தங்கள் அனைவரையும் இத்தினத்தில்
அன்புடன் அழைக்கின்றோம்.
அக்ஷயதிருதியை
முன்னிட்டு விஷேட
விலைக்கழிவும்
பரிசுப்பொருட்களும்
வழங்கப்படும்.
ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு நம்பிக்கையான இடம்.
நம்பிக்கை! நாணயம்!! நேர்மை!!!
அவற்றிற்கு இன்றே நாடுங்கள்.


PUSHPA CONSTRUCTION
HOME DESIGNERS & BULDER
No:23,Pumping Station Road
Palameenmadu, Batticaloa
077 990 1403
கட்டிடநிர்மான சேவைகள் ஒரே கூரையின் கீழ்


FCC
SUPER MALL
FCC இன் இவ்வார புத்தாண்டு சிந்தனை
"உன்னால் பறக்க முடியாவிட்டால் ஓடு,
உன்னால் ஓட முடியாவிட்டால் நட,
உன்னால் நடக்கவும் முடியாவிட்டால் தவழ்ந்து போ,
ஆனால், என்ன செய்தாலும்,
நீ் முன்நோக்கி நகர்ந்துகொண்டே இருக்க வேண்டும்"
-- மார்ட்டின் லூதர் கிங் ஜுனியர்
தமிழ், சிங்கள புத்தாண்டை
கொண்டாடும் அனைத்து
உள்ளங்களுக்கும் FCC இன்
இதயம்கனிந்த புத்தாண்டு
வாழ்த்துக்கள்.
"வாழ்க வளமுடன்"